[illegible]
[illegible]

A

T.D.R.C. No. 3327
R.A.No. 11-2-1899

RMRI, S
M99

115742

T.D.R.C NO: 3327
RR NO: 71 - II - 1899

OFFICE OF THE ... 25 APR 1909 ... MADRAS
33227

# SUGUNA-SUKÊSAR

OR

## FRIENDSHIP AN[illegible] LOVE.

*A TA[illegible]*

C. RAMASWAMI AIYANGAR

O-,2MRI,S
M77
115742

உ

கடவுள் துணை.

# குண சுகேசர்

அல்லது

# நட்புங் காதலும்.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

### வழிபடு கடவுள் துதி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

திருவளர்கார்க் காளிந்திப் புளினங்க
டொறுமாயைச் சிறப்பி னாலே
மருவிறையும் பூம்பந்தர் வகுத்தாவ
லுடன்போந்த மாதா ராரை
யருமையொடு மணந்தவனைப் பார்த்தனுக்குக்
கீதையமு தாங்கின் மிக்க
பரிவுமிகுந் தலகினரும் பருகியுய
வாக்கினனைப் பரசி வாழ்வாம்.

### ஏற்புடைக் கடவுள் துதி.

*பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

என்றுமுமை யொருபக்க லிருந்திடவும்
பெருந்துறவி யென்னு நல்லோ
னிவ்வுலகோர் விழைதருமெய் வெவற்றினையு
மின்பமுட னளிதி னீவோன்

பாயிரம்.

வென்றிமழ விளங்களிற்றி னதளுடை
யெளவுவக்கும் விமல மூர்த்தி
விளங்குமுயிர்த் தொகைசெறிந்த வே
வாய்செலுத்தும் வேத நாயகன்
றன்றாபுகழ்த் தமிழ்மூன்றும் பெற்றிடினு
நாடகத்தின் ரேமி லொன்பான்
சுவையினிய மக்களெவ ரினிதினுணர்ந்
தகமகிழத் துறக்க மாம்பொன்
மன்றினிடை நடம்புரியு மெமதடிகண்
மெய்ஞ்ஞான வழிக்கண் யாரு
மணங்களிகூர்ந் தலுமாறு செய்குநனைக்
கலைவனையாம் வணங்கி வாழ்வாம். (௨)

**நாமகள் துதி.**

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டமெலா மணிவயிற்றி னடக்கியவெம்
பெருமான்ற னவிருங் கொப்பூழ்ப்
புண்டரிகத் தொளிர்பிரமப் புத்தேளி
னாவினடம் புரியு மானைத்
தண்டமிழ்ச்செந் நாப்புலவர் மனத்தடத்தி
னுவகையொடுஞ் சார்ந்தெந் நாளுந்
தெண்டிரையன் பெனும்புனலிற் றிளைத்தாடும்
பிடியையென்றுஞ் சிந்தை செய்வாம். (௩)

**அவையடக்கம்.**

கலிவிருத்தம்.

அலகி லறுகலை யாய்ந்திலெ மேனும்யா
மிலகு மின்றமி ழிற்செயு நாடகஞ்
சுலவு பற்பல தோமுடைத் தாயினு
முலக நீதி யுணர்ந்தவர் கொள்பவே. (௪)

பாயிரம் முற்றிற்று.

# சுகுண சுகேசர்

அல்லது

## நட்புங் காதலும்.

## நாடக பாத்திரங்கள்.

௧. வீரேந்திரன்: தஞ்சை மன்னன்.

௨. ஆநந்தன்: திரிசிரபுரச் சொக்க நாயகரது முதன் மந்திரி; சுகேசன் தந்தை.

௩. வீரேசன்: விஜயையின் தந்தை; ஆநந்தன் சுற்றத்தான்.

௪. சுகுணன்: திரிசிரபுரத்து ஓர் ஆஸ்தானிகன் மகன்; நாடகத்தலைவன்.

௫. சுகேசன்: திரிசிரபுரச் சொக்கநாயகரது முதன்மந்திரி மகன்; நாடகத்தலைவன்.

௬. பிரதாபன்: சுகுணனது சேவகன்.

௭. புஷ்பகன்: சுகேசனது சேவகன்.

௮. சந்திரசேகரன்: தஞ்சை மன்னனது அரண்மனையில் மேல் விசாரணைக் கருத்தன்.

௯. மல்லிகை: வீரேந்திரன் புத்திரி; சுகுணன் காதலி.

௰. விஜயை: வீரேசன்மகள்; சுகேசன் காதலி.

௧௧. பத்மாவதி: விஜயையின் தோழி.

௧௨. கமலை: மல்லிகையின் தோழி.

காவலர், சேவகர், திருடர் முதலாயினர்.

## நாடக நிகழ்விடம்.

பெரும்பான்மை தஞ்சையிலுஞ் சிறுபான்மை திரிசிரபுரத்திலுந் தஞ்சையை யடுத்ததொரு காட்டிலுமாம்.

## பிரஸ்தாவனை.

### நாந்தி

உலகினுள வுயிர்களெலாந் தனையன்றி
நாதனெவ னுளனென் றோத
நலமிருந்த வவதார மீரைந்தா
லுணர்வித்த ஞான மூர்த்தி
பலகலைக்கு மொண்பொருளாய்ப் பவபாச
மறுத்தளிக்கும் பதும நாப
னலங்கினிய நிழலடியார்க் கருள்கிற்கு
மடியையுமுடிக் கணியாக் கொள்வாம். (௧)

**சூத்திரதாரன்:**—(தனக்குள்) நமது சங்கத்தினாற் சில நாடகங்களை பன்முறை யபிநயிக்கப்பட்டு வருகின்றன. மற்று மிந்நகர்ப்போந்து பல வருடங்களாயு மிப்பட்டினத்தார் குறையாத அன்புடன் அவற்றைப் புதியரூபகங்களென வெண்ணி யானந்திக்கின்றனர். ஆதலி னிவ்வமய மிவர்களை யேதாவது நவீன நிருபணத்தால் மகிழ்வித்தல் தகுதியாம்.—யாவற்றினுக்கும் நமது தலைவியுடன் ஆலோசிப்பாம். (நேபத்தியத்தை நோக்கி) மனோன்மணி! சிறிதிவண் வருதி.

நடி பிரவேசித்தல்.

**நடி:**—ஆரிய! இதோ வந்தனென். அடியாளை யழைத்ததெதற்கோ?

**சூத்திரதாரன்:**—ஆரியே! நமது சபையையும் சபையோர்களையும் பார். ஏதோ புதிதாகத் தோற்றவில்லையா?

இன்றைத்தினம் அழகிய ஒரு நவீன நாடகத்தா லிவர்களைக் களிப்பிக்க விரும்புகின்றேன். நீ என்ன சொல்லுகின்றாய்?

**நடி** :—அதுவே யெனது விருப்பமும். நமது அத்தான் "சுகுணசுகேசர்" என்றவொரு நாடக மிப்பொழுது தான் வெளிவந்ததெனக் கூறினனே!

**சூத்திரதாரன்** :—ஆம். ஆம். நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினாய். அதனை யியற்றியவர் (பாடுதல்).

தெண்டிரையார் காவிரிபாய் திருச்சநுக்கைப் பதிவந்தோன்
வண்டிளருந் திருத்துளவ மாலைபுனை மாயவன்றாட்
புண்டரிகத் திடுபட்டார் பொன்னடியைப் புகழ்ந்தேத்துந்
தண்டமிழ்தேர் சீராம சாமியையங் காரம்மா. (௨)

**நடி** :—ஆயின் சரி. சங்கீதமாரம்பித்தல் வேண்டும். உத்தரவு கொடுங்கள்.

**சூத்திரதாரன்** :—எல்லாம் போகலாம். நீ சபையில் வந்தது முதல் உன்முகத்தையே நோக்கிய சபையோர் உன்கண்டத்தினின்றெழு மினியகானமிருதத்தைப் பருகுமாறு சாதகப் புள்ளினைப் போன்றிருக்கின்றனர். ஆதலினிவர்களை மகிழ்வித்தல் வேண்டும்.

**நடி** :—ஆயின் இப்பருவத்தைப்பற்றிப் பாடுகின்றேன்.

(பாடுதல்.)

மாமரத்தி னுறைகுயில்கண் முதங்கொடுகூ மின்னிசையாற்,
கோமகளைத் துறந்தவிளங் கோமான்றன் மனமுருக்கி
வாமமுறு மகிணருடன் வாழ்மடவார் தமைமகிழ்வித்
தேமஞ்செ யிளவேனி லெனும்பருவ மிஃதன்றே. (௩)

(சூத்திரதாரன் ஆலோசித்து நிற்றல்.)

என்னயோசிக்கின்றீர்கள்? யான்போய்வரவா?



**சூத்திரதாரன்**—(பாடுதல்.)

மங்கைநின் கான காந்தம தென்றன்
மனத்தினைத் தன்வச மாக்கி
யிங்கியான் போந்த காரியந் தன்னை
யெளிதினின் மறப்பச்செய் ததுவே
துங்கமெய்ஞ் ஞானக் களிறெனு மிராமன்
றொடர்தரு நட்பினை மறந்து
பங்கமார் காம வாரியிற் றுளைந்த
பாடுறு சுக்கிரீ வனைப்போல். (௪)

**நடி**:—ஆரிய! வான்மீகி பகவான் வேடனைக்குறித்துக் கூறிய சுலோகந் தெய்வீகமாக ஸ்ரீ ராம விடயமாய்ப் பொருளானது போலத் தாங்கள் தற்செயலாய்ச் சமயோசிதமாக எடுத்துக் காட்டினீர்கள். ஸ்ரீதாசரதி சுக்கீவர்களைப் போலச் சுகுண சுகேசர் என விந்நாடகத்துமுளர்.

**சூத்திரதாரன்**:—சரிதான், பிராணசகி! நீ மகா புத்திசாலி. மற்றுச் சுகுணன் சுகேசனிடம் விடைபெற வேண்டி வரும் நேரமாயிற்று. ஆதலின் யாமிங்கிருத்தல்தகாது.

[இருவரும் நிட்கிரமித்தல்.

பிரஸ்தாவனை முற்றிற்று.

# அங்கம்—௧.

## முதற்களம்.

இடம்: திரிசிரபுரக் கோட்டைப் புறவெளி.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: அருணன், சுகேசன்.

அருணன்:—நண்பா! தேயசஞ்சாரத்தாற் போதரும் பயனையுணர்ந்த நீயும் என்னைப் போகலாகாதென்று மறுப்பது தகுதியன்று. மதுரைச் சங்கப்புலவருக்குச் சமானனான நீயோ தடுப்பது? அச்சமேற்கொண்ட வொருவன் கடலைக் கண்டதும் அதன் தீயதன்மையை யெண்ணுதல் போலத் தேசசஞ்சாரத்தால் அடையக்கூடிய துன்பத்தை யெல்லாம் எடுத்துரைத்தாய்; நன்மைகளைத் தையும் நாடினையல்லை. தேயசஞ்சாரத்தாற்

புத்தியும் புகழும் வித்தையும் பொற்பு
நம்மைப் படைத்த நாதனார் படைப்பின்
செம்மையைக் கண்டதன் சிறப்புணர் திறனும் (ரு)

அடையலாமன்றே! நீ ஏன் செய்கிற்பாய்! காதலங் கடலிற் கவிழ்ந்திருக்கின்றாய்! என்னுடன் செல்ல நீ வல்லையல்லை. பெரிய வொருதடையுளது.

சுகேசன்:—என்னின்னுயிர்ப்பாங்க! நீ கூறியவெல்லாம் உண்மையே! நின்னையங் கருதியுரைத்தேன், அருண! நீ இவ்விடத்திற்றனே யிருப்பையாயின் என் மனத்துயரத்தை நீக்குவா யென்றெண்ணி உன்னை நிறுத்த நினைத்தேன். மற்றொன்றுமில்லை. கட்டாயமாய்ப் போக வேண்டுமா

யின் என்செய்வது ? நீ சுகமாய்ப் போய்வருவாய். உன் றேயசஞ்சாரத்திற் கிடைத்தற்கரிய பொருள் ஏதேனுங் காண்பையேற் சுகேசனை மறவாது வாங்கி வருவாய். உனக்கேதுந் துன்பம் நேரிடாதபடி சுகேசன் பெருமானைத் துதிப்பான்.

**சுகுணன்:**—சுகேசா ! பெருமானை நீ துதிப்பாயென்று எனக்குத் தோன்றவில்லை. இப்பொழுது உன்றன் மனத்தின் றன்மையை ஆராய்ந்திடிற் பெருமனைக் கிழத்தியைப் பேணுகிற்பாயென்றே தோன்றுகின்றது.

**சுகேசன்:**— அவ்வளவு மதியற்றவனென்று என்னை யெண்ணுதே. நண்பன் றன்னினும் நாரியோ வுயர்ந்தவள் ?

**சுகுணன்:**—யானென் செய்வேன் ! அதுவே காதலர்நிலைமை!

**சுகேசன்:**—மித்திரா ! என்ன காதல் ! யாம் நெடுநாளாய் இணைபிரியாத காதலரல்லமோ ? உனக்குப் பின்னரே யான் விரும்புங்காதலி. நீ கூறிய சொற்களைப் பரிகாசச் சொற்களென்றே நினைக்கின்றேன். உண்மையிற் காதலர் நிலைமை பரிகசிக்குந் தன்மைத்தே.

**சுகுணன்:**—அஃதென்னை அப்படிக் கூறுகின்றாயே !

**சுகேசன்:**—நண்பா ! உண்மையான காதலர் தன்மையைக் கூறுகின்றேன். கேள். (பாடுதல்)

நெய்யுறு வேலெனு நீள்விழி யவரை
மெய்யுறக் கண்டவர் விரகநோய் கொண்டு
காமன் கணையினாற் றூமுயிர் சோரவு
ம[illegible]ன் மெழுகென மனமெக் குருகவு
நீதி யிலார்போ னிவிரிங் கிரன்மின்
போதி ரென்று புகன்று வெருட்டு
மோசக் காரிக ளாசை மொழியினை
நேச மொழியென நினைக்குந ரெல்லா
மடைய ரெவரினுங் கடையரோ வென்று
துரோசர் முன்னரே யாவேர் சித்துக்
கூறி யிருத்தலிற் கூறினே னன்றே. (அ)



**சுகுணன்:**—நீ கூறிய வெல்லாமுண்மையே. பூவரும்பினைப் புழுக்கள் மலருமுன் நாசஞ் செய்வது போலக் காதல் இளைஞர் மனத்தைக் கலக்கியுன்மத்தராக்குகின்றதென்று உலகியலுணர்ந்தோர் உரைப்பர் ; ஆதலின் அத்தன்மையவர் பரிகாசத்திற்கேற்றவர்களன்றோ ?

**சுகேசன்:**—ஆயின் நீ என்னைப் பைத்தியம் பிடித்தவனென்றெண்ணிப் பரிகசித்தாய் போலும். என் செய்வது ?

* "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு." (எ)

என்று கூறியிருத்தலின் நீயென் நன்மைக்காகவே கூறினாய். நீயுமென் நிலைமையிலிருக்கும் அமயத்து நீ சொல்லியவற்றை மறவேன்.

**சுகுணன்:**—அத்தகைய வுன்னிலைமை யெனக்கு வாராதென்று நம்புகின்றேன். அன்றி வருமேல் அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம். என் தந்தையார் வழியிற் காத்துக் கொண்டிருப்பார். யான் செல்லவேண்டும்.

**சுகேசன்:**—நண்பா ! தஞ்சையில் எல்லா நன்மையுமுனக்குண்டாகுக. கடிதமாத்திரம் அடிக்கடி யெழுதுவாய்.

**சுகுணன்:**—சுகேசா ! உனக்கிவ் விடத்திலேயே எல்லா நன்மையுமுண்டாகட்டும். நீ காதல் கொள்ளும் விஜயையரசியையே மணக்கக்கடவாய். வந்தனம். [நிட்கிரமித்தல்.

**சுகேசன்:**—அவனோ பிரக்கியாதியை விரும்புகின்றான். யானோ மடந்தையை விரும்புகின்றேன். அவனோ பிரக்கியாதிக்காகப் பிரிய நண்பர்களைப் பிரிகின்றான். யானோ வென்னருஞ் சுந்தரி விஜயைக்காகப் பிரியநண்பனைப் பிரி

* திருக்குறள்.

கின்றேன். ஏ! விஜயே! நீ என்புத்தியைக் கலக்கிவிட்டனை; படிப்பினைப் பறக்கடித்தனை; இப்பிருதிவியில் யான் பிரியம்வைக்கும் பொருள் உன்னை யல்லாது வேறு எதுவுளது. ஆ! என்மனங் காதலென்னு முழிக்காற்ருற் ருக்குண்டு நிலைகுலைகின்றதே! என்செய்கிற்பேன்! (பாடுதல்)

மானிடை யுற்ருய் மதியே
கூனிடை பெற்ருய் குறியாய்
வானிடை யுற்ருய் மதியை
மேனிடை யற்ரு யிசையாய். (அ)

காமோ தரநிற் கடியா
தோகோ ரையர்மீன் றுணைவா
திகோ தழலாற் கிரிமே
ஞேகோ மதியே யுளையாய். (கூ)

[பரிக்கிரமித்தல்.

பிரதாபன் பிரவேசித்தல்.

**பிரதாபன்** :—ஐயா! என் எசமானரைப் பார்த்தீர்களா?

**சுகேசன்** :—யார்? ஓகோ! அவன் சிறிதுநேரத்திற்கு முன்னர்த்தான் தந்தைக்கு விடைபெற்றுச் சென்றான்.

**பிரதாபன்** :—அப்படியாயின் வெகுதூரஞ் சென்றிரார், யான் போய் வருகின்றேன்.

**சுகேசன்** :—பிரதாபா! ஒருவார்த்தை. நேற்றை யான்றந்த கடிதத்தை விஜயையினிடங் கொடுத்தாயா?

**பிரதாபன்** :—நேற்றைச் சாயங்காலம்அந்தவம்மாவைக்காண முடியவில்லை. ஆதலாற் சிறிது நேரத்திற்கு முன்புதான் கொடுத்தேன்.

**சுகேசன்** :—ஏதாயினுஞ் சொன்னளா?



**பிரதாபன்** :—ஒன்றுஞ் சொல்லவில்லை. தலையை மட்டும் இரண்டுதரம் அசைத்தார்கள்.

**சுகேசன்** :—கடிதத்தைப் பிரித்துப் பார்த்த பிறகுதானே தலையை யசைத்தாள்?

**பிரதாபன்** :—ஒரு கடிதத்திலேயே தலை யசைப்பார்களா? பயனற்ற கடிதக் கிழியைப்போல வெகு அலட்சியமாய் எடுத்துச் சென்ருர்கள். யான் வாயிலில் வெகுநேரம் காத்துக்கொண் டிருந்தேன்.

**சுகேசன்** :—என்னத்திற்கு? பதிலெழுதிக் கொடுத்தாளா?

**பிரதாபன்** :—அதற்காகவோ காத்துக்கொண் டிருந்தீர்கள்? ஏதாவது வெகுமதி கொடுப்பார்களென்று நினைத்தேன்.

**சுகேசன்** :—நான்தான் அவள் கொடுக்கவேண்டிய வெகுமதியைக் கொடுக்கின்றேன் என்றேனே.—இதைப் (பணத்தைக் கொடுக்க) பெற்றுக்கொள்.

**பிரதாபன்** :—(வாங்கிக்கொண்டு) ஏது! எனக்குத் தோன்றவேயில்லை.

**சுகேசன்** :—என்ன! என்ன!

**பிரதாபன்** :—நீங்கள் அந்த அம்மாவை மணப்பீர்களென்று!

**சுகேசன்** :—ஏன்?

**பிரதாபன்** :—தங்கள் கடிதத்தைக் கொணர்ந்த எனக்கு ஒரு காசுகூடக் கொடுக்கவில்லை. அவர்களோ உங்களை விரும்புவார்கள்?

**சுகேசன்** :—சரிதான். மடையனைப் போற் குழறுகின்ருய். உன் வேலையை முழுவதும் மறந்தாய்.

**பிரதாபன்** :—ஐயா! இடையர் மடையரென்று யான் கேள்விப்பட் டிருக்கின்றேன். யாரோ நல்ல அங்கி குலத்தவனையினேனே. என்னையா மடையனென்கிறது!

**சுகேசன்:**—நீ இடையனாயிருந்தாலென்ன ஆட்டுக்குட்டியாயிருந்தால் தானென்ன, எஜமானனை விட்டுப்பிரிந்தால் ஆட்டுக்குட்டிதான்; பின்னும் மனுதான் உன்புத்தியைப்போன்றது.

**பிரதாபன்:**—யாரு ஆட்டுக்குட்டி! யாரு! ஆட்டுக்குட்டியா எசமானனைத்தேடும்? எசமானனன்றோ ஆட்டுக்குட்டியைத்தேடுதல் வழக்கம்? இதுவே யான் ஆடன்றென்பதை ரூபிக்கும்.

**சுகேசன்:**—அப்படியன்று, பிரதாபா! ஆட்டுக்குட்டி ஆகாரத்திற்காக எசமானனைப் பின்பற்றும்; நீயோ உன்கூலிக்காக உன்எசமானனைப் பின்பற்றுகின்றாய். ஆகையால் நீ ஆட்டுக்குட்டியே யென்பதற்கையமே யில்லை.

**பிரதாபன்:**—நீங்கள் இன்னுமொருமுறை யென்னை அப்படிக் கூப்பிடுவீர்களாயின் 'மே! மே!!' என்று கூவுவேன்.

**சுகேசன்:**—வாயாடினது போதும்போடா. உன் எசமானன் காத்துக்கொண் டிருப்பான், சீக்கிரம் போடா.

[பிரதாபன் நிட்கிரமித்தல்.

இத்தகைய மடையனைக்கொண்டோ நாம் நமது விஜயைக்குக் கடிதங்கொடுக்கச் செய்வது? இனிமேலென்னது தோழன் **சுந்தரனிடம்** அனுப்புகின்றேன். இதுவரையு மவனிடம் என்காதலியைப்பற்றி யுரைக்கவில்லை. ஆயினும் எவ்வாறேனு மவனிட மிதைக்கூறி அவன்பால் அனுப்புவேன். (பாடுதல்)

கருதிறக் கண்ண னருளெமக் கிருத்தல்
வேண்டுமெந் நாளும் யாண்டும் முயற்சி
யுடையா ரிகழ்ச்சி யடையா ரென்ப
துண்மை பொதிந்த வுரையே யன்றோ? (௧௦)

[நிட்கிரமித்தல்.



## இரண்டாங் களம்.

இடம்: திரிசிரபுரத்து விஜயைவீட்டின் பின்புறத்ததொரு பூஞ்சோலை.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: விஜயை, பத்மாவதி.

**பத்மாவதி:**—சகி! அவன் உண்மையில் அழகு வாய்ந்தவனே. ஆயினுமவன் முதற்றார மிழந்தவனாயினனே.

**விஜயை:**—அதைப்பற்றி நமக்கென்ன?

**பத்மாவதி:**—நமக்கொன்று மில்லை, ஆயினும் இரண்டாவது தாரமாய் வாழ்க்கைப்படலாகா தென்பதுதான்.

**விஜயை:**—ஏ! பத்மாவதி! நன்றாயிருக்கிறது. ஏதோ அவனைப் பற்றிப் பேச்சு வந்ததனால் அழகு வாய்ந்தவனென்றுகூறினேன், மற்று யான் அவனைமணக்கவேண்டுகின்றேனென்று நீ நினைத்தது மிகவும் ஆச்சரியமே.

**பத்மாவதி:**—அப்படியாயின் யான் நினைத்தது பிழையே. அவையெல்லா மிருக்கட்டும். உன் அத்தை மகனார் எல்லா விதத்திலு மேன்மை யுற்றவர். அவர் உன்மீது காதல் கொண்டிருக்கின்றார் போலத் தோன்றுகின்றனர்.

**விஜயை:**—அவனிடத்தெனக் கன்பில்லையே.

**பத்மாவதி:**—எப்படியானால் என்ன? உன்னையவர் விரும்புகின்றார்.

**விஜயை:**—அவன் காதலை யிதுவரையும் வெளியிட்டிலனே. நீ எப்படி யறிந்தாய்?

**பத்மாவதி:**—எப்படியா அறிந்தேன்? மேற்சாம்பர் பூத்த நெருப்பன்றோ தூண்டின் மிக்கு எரியும்.

**விஜயை:**—அப்படியானால் நீயெவ்வியாஜத்தினா லறிந்தாய்?

**பத்மாவதி:**—மூர்த்தாராஜன் என்னைக் காணவந்த பொழுது அவர் முகக்குறியா லறிந்தேன். ஆமாம்! சகி! மறந்து விட்டேனே. உனக்கிந்தக் கடிதத்தை யாவனோ ஒருவன் கொடுத்துப் போனான்.

**விஜயை:**—(கடிதத்தை வாங்கிக்கொண்டு) "விஜயவல்லியம்மைக்கு"—யாரெழுதியிருக்கலாம்?

**பத்மாவதி:**—அதுதான்பிரித்துப் பார்த்தால் தெரியும்.

**விஜயை:**—யார் உன்னிடத்துக் கொடுத்தது? சொல்லடி பத்மாவதி! சீக்கிரம்! விசாரியாமற் கடிதம் வாங்கலாமா?

**பத்மாவதி:**—சுகுணர்தம் வேலைக்காரன் பிரதாபன் விஜயவல்லியம்மா எங்கே யென்றதும் யான்தான் என்று சொல்லி அவன் கொடுத்த கடிதத்தை வாங்கிவந்தேன். உன் பெயரால் வாங்கியதற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

**விஜயை:**—ஆ! பத்மாவதி! நல்லதாய்க்கிழவி யாயினையடி!

(பாடுதல்)

உன்னையென் னரண மாக
  வுன்னுபு நின்பா லென்று
மன்னிய வன்பு பூண்டு
  வரம்பிலா மகிழ்ச்சி யார்ந்தே
னன்னியர் வந்தெ திர்க்கு
  மமயத்தி லெனை நீ யன்றோர்
கொன்னுற நலியக் காட்டிக்
  கொடுத்திட னன்று நன்றே! (கக)

பரபுருடன் கொடுக்குங் கடிதத்தையோ வாங்குவது? என்னுடைய மங்கைப்பருவத்திற்குக் கேடிழைக்கின்றாய். உன்னைப்போலல்லவோ எனக்கிரண்டு தோழியர் வேண்டும்? இக்கடிதத்தைக் கொடுத்தவனிடந் திருப்பி விடு. (கடிதத்தைப் பத்மாவதி பெறுதல்.)



**பத்மாவதி:**—காதலன் கடிதத்தை வாங்கியதற்காகவோ இப்படிக் கோபிப்பது? நன்றாயிருக்கின்றது!

**விஜயை:**—சரிதான்! போடி.

**பத்மாவதி:**—(தனக்குள்) யோசிக்க வேண்டு மென்றாயோ? நன்று! அப்படியே செல்கின்றேன். [நிட்கிரமித்தல்.

**விஜயை:**-(சிறிதுநேரஞ்சும்மா விருந்தபின்னர்ப்பெருமூச்செறிந்து) ஆயினும் அக்கடிதத்தை யான் பார்க்க மிகவும் விரும்புகின்றேன். என்செய்கிறது? என்ன வைத்திய காரியாயினேன். அவளைத் திரும்பவு மழைத்து யான் செய்த குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைவிட வேறு அவமானமில்லை. என்னை நிபுத்தி யற்றவளாயிருக்கின்றாள்! யான் யுவதித்தன்மை யுற்றவளென்று சிறிதும் நினைத்தாளல்லளே. காதல் விஷயத்தில் மங்கையர் மறுப்பனவெல்லாம் விரும்புவன வென்று உணர்ந்தாளல்லளே. தான் காதலுற்றவனைக் குறித்து வேறியாராவது ஏதேனுஞ் சொன்னால் மங்கையர் நாணுறுவது சுபாவ மன்றோ? சீ!—பாழுங்காதலே! உன்னால் என்னை புத்தியீனமாய் எனது உயிர்த்தோழி யென்றுகூடப் பாராமற் கோபித்துக் கொண்டேனே. எவ்வளவு வஞ்சகமாய் என் மனம் சந்தோஷத்தை யடைந்திருப்ப முகம் கோபத்தை மேற்கொண்டது! முகம் அகத்தினிகழும் எண்ணங்களை வெளியிடு மென்கின்றார்களே. அது பச்சைப் பசும் பொய்யே! என்னருமைத்தோழி பத்மாவதியை யழைத்து யான் மன்னிப்புக் கேளாவிட்டால் என் மனமாறாது. ஏ! பத்மாவதீ! சகீ! பத்மாவதீ!

பத்மாவதி பிரவேசித்தல்.

**பத்மாவதி:**—என்னைத்திற் கம்மா கூப்பிட்டீர்கள்?

**விஜயை:**—பத்மாவதி! என்மீது என்ன அவ்வளவு கோபம்?

**பத்மாவதி:**—அப்படி யொன்றுமில்லை. (கடிதத்தை நழுவவிட்டுப்பின்பு அதைக் குனிந்தெடுத்தல்.)

**விஜயை:**—என்ன குனிந்தெடுத்தாயே?

**பத்மாவதி:**—வேறொன்றுமில்லை. என்கையினின்றும் விழுந்த கடிதத்தை எடுத்தேன்.

**விஜயை:**—கடிதம் யாருக்கு?

**பத்மாவதி:**—எனக்கன்று.

**விஜயை:**—பின் யாருக்கு? உனக்கன்றாயி னவ்விடத்திலேயே போட்டு விடுகிறது தானே.

**பத்மாவதி:**—அம்மா! அஃதவ்விட மிருக்கலாகாது. அன்றிப் பார்க்கக் கூடாதவர்கள் ஒருகால் பார்க்கும் படியும் நேரிடும்.

**விஜயை:**—உன் காதலன் எழுதிய கடிதமோ, அப்படிச் சொல்லுகின்றாய்?

**பத்மாவதி:**—என்காதலன் எழுதிய கடிதமாயின் நீயும் பார்க்கலாகாது? இதோ (கடிதத்தைக் கொடுக்கின்றாள்.) பார்.

**விஜயை:**—(கடிதத்தை வாங்கி யுற்றுநோக்கி) அந்தக்கடிதமா? சீ! இந்தத் தரித்திரம் இன்னுந்துயர் விளைப்பதற்காகவோ? (கிழித்தெறிதல்).

**பத்மாவதி:**—(தனக்குள்) அம்மம்ம! சோலையெல்லாங் குப்பையாயிற்றே! (கடிதக்கிழிகளை எடுத்தெறிய யத்தனித்தல்)

**விஜயை:**—(கோபத்துடன்) அவையெல்லா மப்படித் தானிருக்கட்டும். நீ போ!

**பத்மாவதி:**—(தனக்குள்) இப்போது இப்படித்தான் கோபிப்பாள். இன்னு மொரு கடிதத்திலெல்லாஞ் சரியாய்ப் போம்.

[நிட்கிரமித்தல்.



**விஜயை:**—(சிறிது ஆலோசித்து) என்னகோபம்! தத்துவ சாஸ்திரிகள் கோபத்தை யொருவிதப் பைத்தியமென் கின்றார்களே. அஃது உண்மைதான். ஓ! பழிகாரக் கரங்களே! என்ன தீங்கிழைத்தீர்கள்! காதலன்—உயிர்க் காதலன்—எழுதிய கடிதத்தையோ கிழிப்பது! ஆம். பெண்களுக்குப்பின்புத்தி யென்கின்றார்களே. அது மிகவு முண்மையே. நன்று! யான் கிழித்த பிழைக்காக இவ் வொவ்வொரு கிழியினையும் எடுத்து முத்தங்கொண்டு கண்ணில் ஒற்றிக்கொள்வேன். (ஒரு துண்டை யெடுத்து) இதோபார்! "என் பிரியமுள்ள விஜயே" என்று எழுதியிருக்கின்றது. பிரியமுள்ளவளோ யான்? பகைமையுற்றவள். ஏ! விஜயே! நீசெய்தபிழைக்காக இதோ உன் பெயரைக் காலா லுதைத்துத் தள்ளுகின்றேன்! (அவ்வண்ணமேசெய்தல்; வேறொருதுண்டெடுத்து) ஆ! ஆ! "அநங்கனம்பு பாய்ந்த சுரேசா" என்றிருக்கின்றது. என் தலைவா! என்னுயிர்நாதா! பிராணேசா! அம்புப் புண்ணுற்றாய்! என்கண்மலர் அக்காயத்தை யாற்றட்டும். (கண்ணி லொற்றிக் கொள்ளுதல்) அப்படியும் ஆறாமற் போனால் என் அதரத்தின் பரிசத்தாலேனும் ஆறட்டும். (முத்தங்கொள்ளுதல்) என்ன பாக்கிய முடையவளாயினேன்! (வேறொரு துண்டெடுத்துக்கொண்டு) இதோ "காந்தட்கரத்தாய்" என்றுவரைந்துளது. காந்தட் கரமோ இது? கடுங்கொலைப் பாதகக் கட்கமன்றோ இது! (வேறொரு துண்டெடுத்தல்) என்னருமைக் கண்ணாளனது நாம மிரண்டுமூன்று தாமெழுதி யிருக்கின்றது! (சிறிது காற்றிலசைதல்) ஏ! வளியே! இவ்வாறு இக்கிழிகளைப் பறக்கச்செய்து என்னென் விரகாக்கினியை வளர்க்கின்றாய்? ஆகா! மறந்தேனே! உன்றன்மை யதுவேயன்றோ! நீயுங் காமோத்தீபப் பொருள்களு ளொன்றன்றோ! (பாடுதல்.)

ஒருவன்றன் குறைகுணங்க ளனைத்தினையு
நன்றாக வுணர வேண்டின்
மருவுமவன் குழுவின ரா யவர்களினு
லறிகவென மார்ந்தர் சொல்வா
ரருந்தவரைப் பிரித்தவரை வாட்டுதற்கும்
தென்றனி யமிழ்த மென்னும்
பொருவருநற் றமிழுடனே பிறந்துமெனே
வருத்துமியல் புணர்ந்த வாறே! (கஉ)

(வேறொரு கண்டைக் கைக்கொண்டு) இதோ ஒரு மூடு ரீதியாகப்பட்டது: "விஜயை விசாரியாளாயின் காதற் பிடகைத் தழுத்திய சுகேசா! உனக்கென்னகதி யிருக்கின்றது?" ஆ! விஜயே! நீ என் நாதன் நாமத்தருகே யிருத்தல் தகாது. (சிறிது கிழித்தெறிதல்)

பத்மாவதி பிரவேசித்தல்.

**பத்மாவதி:**—அம்மா! யான் வீட்டிற்குச் செல்லு மமயத்து உன் தந்தையார் வீட்டிற்குள் உன்னை வரும்படி கட்டளை யிட்டுப்போனார்.

**விஜயை:**—ஆயின் இதோ போகலாம் வா.

**பத்மாவதி:**—அம்மா! இக்கடிதக் கிழிகளிப்படித்தானோ இங்குக் கிடக்கவேண்டும்?

**விஜயை:**—அவைகளை யெடுத்தெறிந்துவிடு.

(பத்மாவதி யெடுத்தெறிதல்.)

**பத்மாவதி:**—போகலாம் வா!

[இருவரும் நிட்கிரமித்தல்.



## மூன்றாங்களம்.

கிரிசிரபுரத்தில் ஆநந்தன் வீடு.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: ஆநந்தன், வீரேசன்.

**ஆநந்தன்:**—சுகேசனைப் பற்றித்தானோ பேசிக்கொண்டிருந்தாய்?

**வீரேசன்:**—ஆம். அவனைப்பற்றித்தான் நேற்றும் பேசிக்கொண்டிருந்தேன். உங்கள் தமயன் கூறியபடி நீங்கள் நடக்கப்போகின்றீர்களா என்ன?

**ஆநந்தன்:**—வீரேசா! என்ன அப்படிச் சொல்கின்றாயே? சொல்லேன் பார்ப்போம்.

**வீரேசன்:**—ஒன்றுமில்லை. தாங்கள் சொக்கநாயகரது முதன் மந்திரியாயிருந்தும் சுகேசனைத் தேசசஞ்சாரஞ்செய்யுமாறு அனுப்பவில்லையாம். அவனுத்தேய வியற்கையை யுணரச்செய்யாது வீட்டிற்றானே வீண்பொழுது போக்கச்செய்தீர்களாயின் யாது பயன்? உங்களுக்குப்பின் அவன்றானே மந்திரியாக வேண்டும். நமது சாமானிய ஆஸ்தானிகன் மகன் சுகுணனுஞ் சில காலத்திற்குமுன் தேசசஞ்சாரஞ்செய்யப்போனான். அதனாற் புத்திக் கூர்மையும், புகழும், இராச்சியதந்திர வுணர்ச்சியும், தேகசௌக்கியமும் இன்னும் பலவித நன்மைகளும் அடையலாமென்பது மேதாவியாகிய தங்களுக்குத் தெரியாததன்று. நமது சுகேசனதிளமை யிவ்வாறு ஒழியுமாயின் அது காட்டின் கயங்களிற் பூக்குங் கமலத்தை யொக்குமன்றோ!

**ஆநந்தன்:**—சுகேசன் நண்பன் சுகுணன் போன நாண்முதல் எனக்கும் இவனையனுப்ப வேண்டுமென்ற வெண்ண

யிருக்கின்றது. ஆயினும் எனக்கு ஒரே புத்திரனாயினனே; தீங்கு ஏதேனு நேரிடப்போகின்றதோ வென்று பயந்திருந்தான் இதுகாறும் சும்மாவிருந்தேன்.

**விரேசன்:**—சுகுணன் தஞ்சையிலிருக்கின்றானும். அவ்விடமனுப்புவீர்களாயின் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாய்ப் பலதேசங்களுக்குஞ் செல்வார்கள். அப்பொழுது நாம் யாதொன்றற்கும் பயப்படவேண்டுவதில்லை.

**ஆநந்தன்:**—சுகுணன் மகாபுத்திசாலி. அவன் இவனுக்கு நல்ல துணைவனே.

**விரேசன்:**—எப்பொழுதுங் காலதாமதங் கடுங்கேடு விளைக்கும்.

**ஆநந்தன்:**—நாளைக்கிவனையே அனுப்புகின்றேன்.

**விரேசன்:**—நாளைச் சாயங்காலம் எனக்குத்தெரிந்தவர் சிலர் தஞ்சைக்குச் செல்கின்றார்கள். அவர்களுடன் அனுப்புவீர்களாயின் அவர்கள் துணையாயிருப்பர்.

**ஆநந்தன்:**—அதோ நல்ல சமயத்தில் நமது புத்திரனும் வருகின்றான்!

*சுகேசன் கடிதமுங் கையுமாய்ப்பிரவேசித்தல்.*

**சுகேசன்:**—என் அன்புள்ள விஜயே! நின்முகத்தின் செவ்விளைக்கண்டு மயங்கிய யான் இத்திருமுகத்தின் செவ்வியால் எவ்வாறுருகுவேன்? உன் தாமரைக்கரத்தா லெழுதிய கடிதமன்றோ விது! முத்தங்கொள்வேன்! (அவ்வண்ணமே செய்தல்) என்னபயன்? மனத்தின் எண்ணங்களை வெளியிட்ட அக்கரத்தையே என்று பற்றிக்குந்த கைம்மாறு செய்வேன்? ஓ! காதற்கிளியே! விஜயவல்லீ!

(பாடுதல்)

நின்களையே முகங்கொண்டு மழையதனைத்
தலைக்கொண்டு திரியு மின்னென்



மங்கையர்கா ளுங்களையேன் பங்கயத்தோ
னங்கமெலா மலர்க ளென்னச்
செங்கையினாற் படைத்திட்டு மன்மொன்றை
யிரும்பென்னச் சிலைய தென்ன
வெங்களைத்தான் வருத்திடற்கு வன்மையுறப்
படைத்தனனோ வினியென் செய்கேம்! (௧௧)

**ஆநந்தன்:**—அப்பா! சுகேசா! அக்கடிதம் யாரெழுதியது? மிகவுங் கவலையாய்ப் படிக்கின்றனையே.

**சுகேசன்:**—எனது நண்பன் சுகுணன் எழுதியது.

**ஆநந்தன்:**—என்ன விசேஷ மெழுதியிருக்கின்றான்?

(கடிதத்தைத் தாங்க நெருங்குதல்)

**சுகேசன்:**—(கடிதத்தை யுடையில் வைத்துக்கொண்டு) அப்படியொன்றும் விசேஷமில்லை. தஞ்சைமன்னன் தன்னிடத்து அன்புள்ளவனா யிருக்கின்றானும். அவ்விடத்தைவிட்டு அப்புறம் போகக்கூடாதென்று மறுக்கின்றானும். என்னையுந் தன்னிடம் வரும்படி விரும்புகின்றான்.

**ஆநந்தன்:**—அவன் விருப்பிற்கென்ன விடையெழுதப் போகின்றாய்?

**சுகேசன்:**—'தந்தைசொல் மிக்க மந்திர மில்லை' என்றவாறு அவர்கட்டளைப்படி நடக்கவேண்டும். ஆதலின் யான் வரமுடியாதென் றெழுதப்போகின்றேன்.

**ஆநந்தன்:**—ஆயின் அற்றன்று; நீ அவனிடம் போகக்கடவாய். உன்னைத் தஞ்சைக்கு அனுப்புவதற்காகத் தகுந்த ஏற்பாடுகளெல்லாஞ் செய்தாய் விட்டன. நமது விரேசர்தம் நண்பர் சிலர் தஞ்சைக்குப் போகின்றார்களாம். அவர்களுடன் நீ போதற்கு நாளைச் சாயங்காலம் ஆயத்தமாயிருப்பாய்.

**சுகேசன்:**—தந்தையே! யான் சன்னத்தப்படுவதற்கு இன்னு மேழெட்டுநாளாகும். அதுவரையும் எனக்கு உத்தரவளிக்கும்படி வேண்டுகின்றேன்.

**ஆநந்தன்:**—அப்படியன்று. நீ நாளைத் தினமேதான் போதல் வேண்டும். அன்றேல் அவர்களைத்தவிர்த்து வேறுதகுந்த துணை யகப்படுவது அரிது. உனக்கு வேண்டியவைகளை யெல்லாம் யான் ஆயத்தப்படுத்தி வைக்கின்றேன். நீ அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். யான் போகின்றேன். [வீரேசனும் ஆநந்தனும் நிட்கிரமித்தல்.

**சுகேசன்:**—ஆ! ஆ! என்ன தௌர்ப்பாக்கியம்! இடீரென்றுயான் காதலுற்ற விடயந் தந்தைக்குத் தெரியலாகாதென்று கடிதத்தை மறைத்தேன். ஆகாயத்திற்றோன்றும் பிறையைக் கண்டு கைதொழுஞ் சிறுமியைப்போலத் தூரத்தினின்றேனும் என்னருமை விஜயவல்லியை எனது இதயாலயத்தி லிருத்தித்தொழுது வருகின்றேன். ஓ! பாழுந் தெய்வமே! அவளைக்கண்ணாரக்கண்டு அவளதினிய கீதாமிர்தத்தைச் செவியாற் பருகவுங் கூடாதென்று என்னைத் தூரத்தி விடுகின்றாயோ? ஐயோ! (பாடுதல்)

பன்னெடுநா ளாயுடற்றும்
பசியுற்று ணுண்ணாமையுங்
கன்னெஞ்சக் கொடும்பாவி
கைபகற்றி யோட்டுசெய
லென்னவென்றன் மனமுகிலி
னெஞ்ஞான்று மியல்காதன்
மின்னினின்று மெனையகற்றும்
விதியேயோ! விதியேயோ! (௧௬)

நேற்றைத்தினந்தானே என்னை மணப்பதாக வாக்குத்தத்தஞ் செய்தனள்! ஆயினும் யான் அவளைத் தீண்டா முயலுகையில் என்னை எவ்வளவு கோபித்துக் கொண்



டாள்! ஆகா! இன்னும் சில நாட்களில் அவள் நாணந் தவிழ்ந்துவிடு மென்ற எண்ணத்தைக் கொண்டன்றோ தேறுதல் செய்து கொண்டேன்! 'வெய்யில் மழை காட்டும் மையல் மாள்விக்கும்' என்பதை இன்றுதான் யானறிந்தேன். ஐயோ! நாளையோ போவது! ஏ! சுகேச! நீ மிகவுந் தௌர்ப்பாக்கியமுடையை!—ஓ! துன்பம் சகிக்க முடியாமல் மேன்மே லதிகரிக்கின்றதே!—துன்பமாகிய பனி உன் இளமைமலர்களை நனைக்கின்றது. ஆகலின் நீ இனி அடையப் போவதாக எண்ணி யிருந்த பயன்களெல்லாம் புஷ்ப மெனவே யுதிர்ந்து விடும்போற் றோன்றுகின்றனவே!—என் தந்தையா ரிவ்வளவு சீக்கிரத்தில் இரு காரியமுஞ் செய்ய நினையார். அவரை யாரேனுந் தூண்டித்தா னிருக்கவேண்டும். என்னை யிக்கொடுந்துயர்க் காளாக்க எந்தையைத் தூண்டிய துஷ்டனெவனோ? ஏ! விஜயவல்லீ! (மூர்ச்சையுற வோரங்கியின் மீது சாய்தல்.)

சேவகன் பிரவேசித்தல்.

**சேவகன்:**—ஐயா! எசமானரவர்கள் தங்களைச் சிற்றுண்டிக் கழைத்துவரச் சொன்னார்கள்.

**சுகேசன்:**—என்ன! என்ன!

**சேவகன்:**—உங்கள் தந்தையார் உங்களைச் சிற்றுணவிற்கு அழைத்துவரச் சொன்னார்கள்.

**சுகேசன்:**—தெய்வமே! அவளைப் பற்றிய எண்ணமுங் கூடாதென்று மறுக்கின்றாயோ? வருகின்றேன். [இருவரும் நிட்கிரமித்தல்.

முதலங்கம் முற்றிற்று.

# அங்கம்—உ.

## முதற்களம்.

இடம்: தஞ்சை யரண்மனை.
காலம்: காலை.
பாத்திரங்கள்: சுகுணன், பிரதாபன்.

**பிரதாபன்:**—(**ஒரு மோதிரத்தைக் கண்டெடுத்து**) ஐயா! உங்களுடைய மோதிரம்போ லிருக்கின்றதே!

**சுகுணன்:**—(**கையைப்பார்த்து**) என்னுடையதன்று. என்மோதிரங்கள் என்கையிலிருக்கின்றனவே.

**பிரதாபன்:**—அப்படியாயின் வெகுசீக்கிரத்தில் உங்களுடையதாகலாம்.

**சுகுணன்:**—எங்கே! கொடு பார்ப்போம்—ஆம். என்னதே. என்மல்லிகையின் தளிர்போன்ற விரலிலணியப்பெற்ற மோதிரமே! (**கண்ணிலொற்றிக்கொண்டு முத்தங்கொள்ளல்**) நீயன்றோ பாக்கியம் பெற்றனை? ஏ! மல்லிகே! ஏ!! மல்லிகே!!

**பிரதாபன்:**— (**இங்குமங்கு மோடி உரக்கக் கூப்பிடுகின்றான்**) அம்மா! மல்லிகே! அம்மா!! மல்லிகே!! அம்மா!!! மல்லிகே!!!

**சுகுணன்:**—என்னடா பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?

**பிரதாபன்:**—அம்மா கூப்பிடு தூரத்தி லில்லைபோலும்! என்னைக் கோபித்துக் கொள்ளுகின்றீர்களே! நான் என்ன செய்வேன்?

**சுகுணன்:**—உன்னையாரடா கூப்பிடச் சொல்லியது?

**பிரதாபன்:**—தாங்கள்தாம் கூப்பிடச் சொன்னீர்கள்.



**சுகுணன்:**—இன்னும் உன்விளையாட்டுத்தனம் போகவே யில்லையடா.

**பிரதாபன்:**—தொட்டிலிற் பழகியது கட்டையிலேறினாற்றான் போம்.

**சுகுணன்:**—அவையெல்லா மிருக்கட்டும். நீ இப்பொழுது அழைத்தாயே அந்த அம்மையை உனக்குத் தெரியுமா?

**பிரதாபன்:**—யாரை? நீங்கள் காதலுற்றவம்மாவையா?

**சுகுணன்:**—யான் காதலுற்றது உனக்கெப்படித் தெரியும்?

**பிரதாபன்:**—இது தெரிவதுதானோ மிகக்கஷ்டம்?

**சுகுணன்:**—எப்படி யறிந்தாய்? சொல் பார்ப்போம்.

**பிரதாபன்:**—ஆனாற்சொல்லுகின்றேன். முதலில் நீங்கள் உங்கள் நண்பர் சுகேசனைப்போலக் கையையுந் தலையுந் துவைத்துக்கொண்டு கல்லைப்போலப் பல்காலம் யோசித்துக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கின்றேன். 'பெண்மணியின்மணநாறு மல்லிகையே! என்மீது பகைமை பெண்ணே!' என்றும் 'பண்ணினுமிக் கினியமொழிக் காரிகையே! என்றனுக்குப் பகர்ந்தி டாயே' என்றுந் தாங்கள் பன்முறை பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டிருக்கின்றேன். பிரமை கொண்டவர்போல அநேகமுறை நீங்கள் இரவில் உலாவுவதையுங் கண்டிருக்கின்றேன். கசையடியுண்ட கிழவன் பெருமூச்சு விடுவதைப்போலப் பன்முறை பெருமூச்சுவிட்டிருக்கின்றீர்கள். உண்டியுஞ்சரியாய்ச் சாப்பிடுவதில்லை. இவையெல்லாங் கண்ட யான் சிலசமயங்களில் என் எசமானர்தாமோ என்றுகூட ஐயுற்றிருக்கின்றேன்.

**சுகுணன்:**—இத்தகைய குறிகள் என்னகத்திற் காணப்படுகின்றனவா?

**பிரதாபன்:**—உங்களகத்திற் காணப்படவில்லை. அவை புறத்தேதாம் தெற்றென விளங்குகின்றன.

**சுகுணன் :**—சரி. அப்படித்தானிருக்கட்டும். மல்லிகையை யுனக்குத்தெரியுமா தெரியாதா?

**பிரதாபன் :**—மல்லிகையையா? அநேகமுறை என் தங்கைகூடக் கூந்தலிற் சூடியிருக்கின்றான். படியரும்பு பன்னிரண்டாகுவாம். எத்தனைபடிவேண்டும்?

**சுகுணன் :**—மடையா! மல்லிகையம்மையைத் தெரியுமா தெரியாதா? சொல்லடா.

**பிரதாபன் :**—உங்களைக் கிழமோறும் ஏறவிறங்கப் பார்க்கும் அந்த அம்மாளையா? அவர்களை யார்தாம் அறியமாட்டார்கள்?

**சுகுணன் :**—அவள் எவ்வளவு அழகுள்ளவள்! பார்த்தாயா?

**பிரதாபன் :**—முன்பு அழகாயிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அழகாயில்லை.

**சுகுணன் :**—எப்பொழுது? நன்றாய்ப் பார்த்தாயா? நான் பார்த்து இரண்டுநாளாகின்றன.

**பிரதாபன் :**—அஃதென்னையோ? அம்மாமீது தாங்கள் காதல் கொண்டது முதல் அழகாகவே யில்லை.

**சுகுணன் :**—என்ன அப்படிச்சொல்கின்றாயே! அழகாயிருந்ததனாற்றானே யானவள் மீது காதலுற்றேன்.

**பிரதாபன் :**—நீங்கள் உண்மையாய்க் காதல் கொண்டபின் அம்மாளை நன்றாய்ப் பார்த்தீர்களா?

**சுகுணன் :**—அவளழகு நாளுக்கு நாள் மிக்குத் தோன்றுகின்றது.

**பிரதாபன் :**—அதுதான் சுத்தப் பொய். காதல் கொண்டது முதல் நீங்கள் பார்க்கவே யில்லை!

**சுகுணன் :**—ஏன்?

**பிரதாபன் :**—காதலுற்றவர்க்குக் கண்ணு முண்டோ?



**சுகுணன் :**—நீ சொல்வது உண்மையாயின் நேற்றையே தினமுதல் நீயுங் காதல்கொண் டிருக்கின்றாய்.

**பிரதாபன் :**—எவ்வாறு?

**சுகுணன் :**—நேற்றை வைகறையிற் பெட்டியைத் திறந்து என் உடைகளைக் கொண்டுவரும்படி சொல்ல நீ என்னவோ கொணர்ந்தாயே!

**பிரதாபன் :**—ஆ! இஃதென்னை! கண்ணில்லாதவர்களெல்லாங் காதலுற்றவரென்று யான் கூறவில்லையே. அது தருக்கனூற் குற்றமாயிற்றே. ஆயினும் அப்பொழுது யான் நித்திராதேவிமீது காதலுற்றிருந்தேன். அதனாற்றான் எனக்கப்பொழுது கண்ணில்லை.

**சுகுணன் :**—பிரதாபா! உன் புத்திசாலித்தனத்திற்கு மிகவும் மெய்ச்சினேன். மல்லிகையிடம் இக்கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சீக்கிரமாய் இவ்விடம் வா.

**பிரதாபன் :**—அப்படியே. [விட்டேகிமித்தல்.

**சுகுணன் :**—காதல்வல்லி! மல்லிகே! உன்னையான் அடைவேனோ? என்காதலை யிவனும் அறிந்தனனே. நீ யறியவில்லையோ? யான்படு மரண்வதைகளனைத்தும் என்னவென்பேன்! திங்களுந் தென்றலுந் தியங்கவைக்கின்றன.

(பாடுதல்)

மருவமருங் குழன்மாதின் முகக்கிளையா
யான்புகழ்ந்த மதியே யுன்னைக்
கரும்பாம்பு விழுங்கிட்டுஞ் சேரணமா
காதகற்குக் காரணத்தை
யொருவாறெ ணுளந்தனிலே யாயினென்முற்
றீவினைக ளொருங்கு கூடி
யரியவுருக் கொண்டன்றே யுனைமீட்டு
முமிழ்ந்திடுமா றைதிற் செய்த! (௧௫)

மங்கையுடன் பிறந்தமதி யென்மனத்தை
யொருபக்கம் வருத்த விட்டு
வங்கையினிற் கடன்முழுது மாசமன
மாக்குடித்த வகத்தி யன்றான்
றங்குமலை யெழுந்தென்ற றணைந்தமினார்
வன்மையிருந் தனத்தெற் றுண்டும்
பொங்குவிசை குறையாமன் மாமனத்தொ
டளாய்த்தீமை புரித லென்னே! (௧௬)

இப்பொழுதன்றோ தெரிகின்றது! நண்பன் சுகேசனைப் பரிகசித்தேனே! தலைவலியுந் தாமுந் தனக்குவந்தாற் றான் தெரியும்! அது மிகவும் உண்மையே! இப்பொழுது நண்பனிருந்தானாகில் என்னை பேசுவான் என்பதற்கையமேயில்லை. 'உயரத்திற் கூடுகட்டும் பருந்தை யொப்ப யான் நினைத்தற்குமரிய விடத்திற் காதல்கொண்டேனே! அவளோ தஞ்சைமன்னன் புத்திரி—ஏகபுத்திரி. யானோ ஓர் எளிய ஆஸ்தானிகன்மகன். எவ்வாறு முதற் காற்றிற் பருந்தின்கூடு விழுந்துவிடுமோ அவ்வாறு என் காதல் என்னைப் பெருந்துன்பத்திற் காளாக்கும் என்பதற்கையமேயில்லை. பின்னும் மெய்க்காதற்குப் பலவித இடையூறுகள் நேரிடும். ஆயினும் எனக்கு ஒருவிதத் தைரியமிருக்கின்றது. முந்தாநாட் காலையில் என்மீது சிறிது அன்பாயிருந்தாள். அவளும் என்மீது இரங்காமற் போனால் என்னகதி யிருக்கின்றது? (பாடுதல்)

விற்பொரலி னிவற்குநிக ரிங்கணிலை
யெனும்புகழ்சூன் மீளி யாய
பற்குனற்குத் தந்திரமாய் மாயவன்றான்
சுபத்திரையைப் பாலித் தானா
னற்குணஞ்சேர் காவலற்காப் பரவைதனி
நிர்ப்பவா னடந்திட் டானோ



றெற்குமன்னோ ரருளிருப்பி னிம்மாதை
யடைதாலு மெளிதே யன்றோ? (௧௭)

அவனரு ளிருப்பி னனைத்தும் முடியும். [நிட்கிரமித்தல்.

## இரண்டாங்களம்.

இடம்: தஞ்சை யரண்மனையி னந்தப்புரத் தொருசார்.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: சுகுணன், பிரதாபன், மல்லிகை.

**சுகுணன்** :—மல்லிகே! என்னை நீ யழைத்ததன் விசேஷமென்னை?

**மல்லிகை** :—நேற்றை நீங்களெழுதிய கடிதத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு. வேறொன்றும் விசேஷமில்லை.

**சுகுணன்** :—மல்லிகே! யான் நேற்றெழுதிய கடிதத்தி லேதேனும் பிழையுளதோ? அப்படியேதேனு மிருப்பின் மன்னித்தல்வேண்டும்.

**மல்லிகை** :—அப்படிக்குற்றம் யாதொன்றுமில்லை. ஆனால் அக்கடிதம் எனக்குத் திருப்தியைத் தரவில்லை. ஆதலால் நீங்களே அக்கடிதத்தை யொருமுறை வாசிக்கவேண்டும். (கடிதத்தைக் கொடுத்தல்)

**சுகுணன்** :—மல்லிகே! உன் இஷ்டப்படியே நடக்கக் காத்துக்கொண்டிருக்கின்றேன். (படிக்க ஆரம்பித்தல்)

**மல்லிகை** :—தோழியர் வசந்தச் சோலையிற் காத்துக்கொண்டிருப்பார்கள். ஆகையால் யான் செல்கின்றேன். [நிட்கிரமித்தல்

**பிரதாபன்** :—(தனக்குள்) இவ்வற்ப வேடிக்கையை யிவர் அறிய வில்லையே! இவரெழுதிய கடிதத்தைப் பார்க்கிலும் இன்னும் நன்றாகத் தன் காதலை வெளியிட முடியாதென்றன்றோ அந்தவம்மா அதைத்திருப்பி அவரிடமே கொடுத்துவிட்டார்கள்!

**சுகுணன்** :—என்ன சிரித்துக்கொண் டிருக்கின்றாயே?

**பிரதாபன்** :—ஒன்றுமில்லை. அந்த அம்மா உங்களுக்குக் கடிதமெழுதிய விதத்தைக்குறித்து யான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்.

**சுகுணன்** :—அவளெங்கே கடித மெழுதினாள்?

**பிரதாபன்** :—அக்கடிதத்தைத் தான் கையில்வைத்துக்கொண் டிருக்கின்றீர்களே. பார்த்தீர்களா? நான் முன்னமே காதலுற்றவர்கள் கண்ணுற் காண்பதில்லை யென்றேனே!

**சுகுணன்** :—யானெழுதிய கடிதமன்றோ விது?

**பிரதாபன்** :—ஆம். உங்களுக்கு உங்களையே கடிதமெழுதிக் கொள்ளும்படி சொன்னார்கள். அதற்கென்ன?

**சுகுணன்** :—அப்படி அவளெங்கே சொன்னாள்? இக்கடிதத்தைக் கோபித்துக்கொண்டன்றோ எறிந்துவிட்டுப் போனாள்.

**பிரதாபன்** :—அப்படியன்று. தாங்களெப்பொழுது அவர்களுக்குக் கடிதமெழுத நினைக்கின்றீர்களோ அப்பொழுது தாங்கள் அக்கடிதத்தை யவர்களுக்காக ஒருமுறை படித்துக்கொள்ளும்படி சொன்னார்கள்.

**சுகுணன்** :—அப்படியேயவள் எண்ணியிருந்தாலு மிருக்கலாம்.

**பிரதாபன்** :—அதற்கென்ன சந்தேகமிருக்கின்றது?

**சுகுணன்** :—ஆயின் எல்லாம் நன்றாகவே முடிந்தன. இறைவன் திருவருட் பயனிருந்தவாறென்னே!

(கைகூப்பித் தலைகுனிந்து பாடுதல்.)



*"ஒன்றாகி மூலத் தருவம் பலவாகி
யுணர்வுமுயிரும் பிறிதாகி யூழி
சென்று சுருங்காலத் தங்கிலைய தாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே யெங்க
ணவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீத்த தன்றே." (கஅ)

[நிட்டைமித்தல்.

## மூன்றாங்களம்.

இடம்: திரிசிரபுரத்தில் விஜயை யில்லில்.

காலம்: நண்பகல்.

பாத்திரங்கள்: சுகேசன், விஜயை.

**விஜயை** :—பிராணேசா! என்ன இன்றைக்கு முகமொருவாறாயிருக்கின்றது. மேகத்தால் மறைக்கப்பட்ட சந்திரன்போலத் தோன்றுகின்றதே! தங்களுக்கு வருத்தம் உண்டாகும்வண்ணம் யானேதேனுஞ் செய்தேனோ?

**சுகேசன்** :—(விஜயையின் முகத்தை யுற்று நோக்கி) ஏ! விஜயே! உன்னை யான் கடைசிமுறை பார்க்கின்றேன். இனி யுன்னைப்பார்ப்பேனோ என்னவோ?

**விஜயை** :—உண்மையான காதலர்க்கு இத்தகைய கொடுமொழி மிகவுந் துக்கத்தை விளைவிக்கும். என்ன? உண்மையைக் கூறுங்கள்.

**சுகேசன்** :—விஜயே! யான்கூறுவதைச் சற்றே கவனி.

* கம்பராமாயணம்.

**விஜயை:**—காதலி யென்னலாகாதோ? அப்படிக்கூப்பிட்டாற் கூப்பிடுங்கள். இல்லாவிட்டாற் சும்மாவிருங்கள்.

**சுகேசன்:**—காதற்கிளியே! என்னுயிர்க்குயிரே! யான் கூறுவதைக்கேள். நாம் இப்பொழுது மிக்க உயரமான மலையின்சிகரத்தில் நின்றுகொண்டிருப்பது போலு மிருக்கின்றோம். அதன் உயரம் எனக்குத் தெரியவில்லை. ஆயினும் நம்மிருவரையும் என்றைக்கும் பிரித்திடும் படியானதென்பது மாத்திரந் தெரிகின்றது.

**விஜயை:**—தாங்கள் கூறுவனவெல்லாம் எனக்கு விடுகவியாக விருக்கின்றன! ஒன்றுந் தெரியவில்லையே!

**சுகேசன்:**—கண்ணே! என்தந்தையின்குணம் உனக்குத் தெரியுமன்றோ! அவர் ஒருமுறை கூறியமொழியைத் திருப்பவே மாட்டார். யாருடைய தூண்டுதலினாலோ என்னைத் தேயசஞ்சாரஞ் செய்யும்படி யாணைதந்தார். இன்றைக்கே செல்லவேண்டுமாம். (விஜயை கண்ணீர் விடுதலும் சுகேசன் கையாடையா லவளைக் கண்களைத் துடைத்து முத்தமிட்டுக் கொண்டு) பிராணசகி! என்னருமை விஜயே! அழுவதிற் பயன் யாது? அதிகமாக விசனப்படாதே.

**விஜயை:**—நீங்களப்படிச் சொன்னால் என்ன செய்கிறது? நீங்கள் எப்பொழுதுதான் திரும்பி வருவீர்கள்? அதையேனுஞ் சொல்லுங்கள்.

**சுகேசன்:**—இயன்றுக் கூடிய சீக்கிரத்திற் றிரும்பி வருகின்றேன்.

**விஜயை:**—உங்கள் மனம் மாத்திரம் வேறுபக்கந் திரும்பாதிருந்தால் நீங்கள் உடனே திரும்பி வருவதற்குத் தடையேயிராது.

**சுகேசன்:**—என் மனமோ திரும்பும்? என் மனத்தின் தலைவி நீயாயினையே! நீயே யுன்றலைமையை விட்டுவிட்டாற் பாழடையுமே யொழிய வேறு எதுவும் தலைமை



சொன்னது. என் ஞாபகச் சின்னமாக நீ இதைப் பெற்றுக் கொள்வாய். (ஒரு மோதிரத்தைக் கொடுத்தல்)

**விஜயை:**—என் ஞாபகமாக இதைப் பெற்றுக்கொள்வீர்கள். (ஒரு மோதிரத்தைக் கொடுத்தல்)

**சுகேசன்:**—என்னுயிர்த் தலைவி! யான் ஒன்று வேண்டுகின்றேன். அதை யளிப்பாயோ மாட்டாயோ?

**விஜயை:**—என்னுயிர் நாதா! யான் வேண்டுகின்ற தொன்றை யளிப்பீர்களாயின் தங்கள்வேண்டுகோளுக்கு யான் தடையின்றி யிசைகின்றேன்.

(இருவரும் மெய்யுறத் தழுவி முத்தமிட்டு நிற்றல்)

**சுகேசன்:**—நேரமாகின்றது. போய்வருகின்றேன். யான் உனக்கு உண்மையா யிருப்பதைப்பற்றி நீ யோசிக்க வேண்டாம். வேறு எம்மாதையுங் கனவிலும் நினையேன். பொன்னே கிடைப்பினும் போவென் றிகழ்வேன். இரதி தான் வருவளாயின் என்முன் இராதே யென்று வெருட்டுவேன். தன்னிலவைக் கண்ட யாரேனு இருளைக் காண்பேன்? எம்மாதையேனும் யான் காதலுற்றேனாயின் மறுநாழிகையில் யான் கொடுந்துயர்க் காளாவேன்.

[விஜயை திட்டிரமித்தல்.

ஆ! ஆ! என்னை ஒருமொழியேனும் பகர்ந்திடாதேகினளே! என்மீது அவநம்பிக்கையாலோ? அன்று! அன்று! 'ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்' கண்டிடிற் பேசுதல் கூடுமோ? மேலும், (பாடுதல்)

மெய்யினை யுரைக்க வேண்டின்
மேவுநற் சொற்க ளொன்றும்
பொய்யினைப் புகல வேண்டின்
பொருந்துசொல் வன்மை வேண்டும்
துய்யமெய்க் காதற் கென்றுஞ்
சொற்றிறம் வேண்டா வஞ்ச

மையலுக் கன்றே மிக்க
வசிகரிக் குஞ்சொல் வேண்டும். (௧௯)

அந்தோ! இனி இம்மங்கையின் காதலுயிர் தங்கேட்கு நாளெங்ஙானோ! இம்மடமாதின் ‘தேனூறு கிளவிக்கு வாயூறிநிற்கு’ மடியனேன் இவளை மீட்டும் என்று காணப்போகின்றேன்! என்று காணப்போகின்றேன்! (பாடுதல்)

மின்புரையு மிடையொசிய நடந்தேகு
மெழிலனமே விமலா யென்றன்
றுன்பமன மறாதாள மற்புக்கா
லாறொடிந்து தொலைந்த வாற்று
லின்பமெனு நாலையிழுத் தந்தோசெல்
கின்றனையே யென்செய் கிற்பேன்
வன்புகொடு மதனனெனை வாட்டுகின்று
னுய்யவொரு வழியுங் காணேன்! (௨௦)

சேவகன் பிரவேசித்தல்.

**சேவகன்:**—ஐயா! புறப்பட நேரமாயிற்றும். தந்தையாருங் களை உடனே அழைத்துவரச் சொன்னார்கள்.

**சுகேசன்:**—போ. வருகின்றேன். [சேவகன் நிஷ்கிரமித்தல். தலைவியைத் தணப்பதினுந் தன்னுயிர் தணந்திடலாம். (பாடுதல்.)

அன்பெனு நாரி னாலே
யணிகழு மொழிக ளென்னு
மின்பமை யலர்தொ டுத்த
வெழிற்பெரும் பிணைய லெற்கு
நன்குறச் சூட்டி யானெந்
நாளுமே பிரிய கில்லே
னென்றருகு ணுரைத்த மாதை
யிறைவனே பிரிகின் றேனே! (௨௧)

[நிஷ்கிரமித்தல்.



## நான்காங்களம்.

இடம்: தஞ்சையாரண்மனையிலோரறை.

காலம்: மாலை.

பாத்திரம்: சுகுணன்.

**சுகுணன்:**—கண்ணெனத்தகும் பெண்மணியே! ஏ! மல்லிகே! நேற்று நீ கூறியவற்றையான் நினைக்க நினைக்க என்மனஞ் சிறிதும் ஆறுதலடைய வில்லையே! உன்னிடத்து யான் மிக்க அன்புற்றவனெனத் தெரிந்தும் நீ அவ்வாறு கூறியது தகுதியேயோ? ஆம்! ஆம்! அஃது உன்பிழையன்று; உங்கள் சாதிக்குற்றம் உன்னிடத்திருக்கின்றதென்பதும் ஓர் ஆச்சரியமாமோ? தன்னைக்கண்டவன் கண்கள் வேறெப்பொருளையுந் தெரியவொட்டாது மறைக்கும் மின்னல்போலப் பிறர் தம்மைக் கண்டதும் அவராது மனச்செறுவிற் காமம்விதைத்து அவர்தம் அறிவை மறைத்து அன்னார் நெருங்கினதும் நீவிர் பின்னிடைதலுந்தம் சுபாவமேயாம். (பாடுதல்)

மாதரார் கூறும் வஞ்சின மனைத்துஞ்
சேதமார் மதிநிலாச் செறிவனத் தெறிதலா
மென்றுறு வியம்புத லன்றியா னுணர்ந்து
மென்னே மாழ்கினேன்! பொன்னே யொருமொழி
சொல்லா தென்றனை மெல்லெனப் பார்த்து
வறிதுநகை தோற்றியெ னறிவு மெழுகுதீப்
பெய்தென வழிந்திடச் செய்தனை. அந்தோ!
கூற்றினுங் கொடிய வேற்றுணை விழியர்சொ
லாசை மொழிகளை நேச மொழியென
நினையன்மி னென்ற முனிவர் மொழியினை
யிகழ்ந்தேன்! அந்தோ! இகழ்ந்தேன் பாவியேன்

அணிகழை மொழிகட் கிளையிலை யென்றுசொற்
றின்பமோ யார்ந்து அன்புறு கிற்பலோ ? (உஉ)

ஒருகால் யான் எழுதிய கடிதத்திற் பிழையேதேனும் பொதுளியிருக்குமோ ? ஈதோ விருக்கின்ற தக்கடிதம். (உடையினின்றெடுத்தல்) ஆ! ஆ! இஃதென்னை? 'பிராண சகி!' என்றுயான் எழுதியிருப்ப இங்குப் 'பிராணசகே!' என்றுமாற்றி யெழுதப்பட்டிருக்கின்றதே! மற்றையவெல்லாம் யான் எழுதியபடியே இருக்கின்றனவே! அரசனுணர்ந்தால் அரந்தைக்கேதுவாம் என்று யான் என்பெயர் எழுதிலேன்; அவளுந்தன்பெயர் எழுதிலள். நம் பிரதாபன் கூறிய துண்மையே. அல்லாவிட்டால் அவள் என் மாற்றியிருக்கவேண்டும்? அவள் புத்திசாலித்தனத்திற்கு மந்திரியாகவல்லவோ இருக்கவேண்டும்! ஏதோ நம் பாக்கிய வசத்தால்—

வீரேந்திரன் பிரவேசித்தல்.

**வீரேந்திரன்**—சுகுண! என்ன தனியே யோசித்துக் கொண்டிருக்கின்றாய்? திரிசிரபுரச் சொக்கநாயகரது முதன் மந்திரியின் புத்திரனைப்பற்றி யுனக்கேதேனுந்தெரியுமோ?

**சுகுணன்** :—சுகேசனைப் பற்றியா?

**வீரேந்திரன்** :—ஆம். அவனைப்பற்றித்தான்.

**சுகுணன்** :—மகாராஜ! அவன்றன குணாதிசயங்களை யென்னென்பேன்! என்னை யானே அறிந்தவாறு அவனை யெனக்குத் தெரியும். யாங்கள் இளம் பிராயமுதல் ஒரே பள்ளிச்சாலையிற் படித்து உடன் வளர்ந்து வந்தவர்கள். சுகேசனோ மிகவும் வர்சித்தவன். இளம் பிராயத்தினனாயினும் உலகியல் துணர்ந்தவன். நண்பனாயினனே யென்று யான் கூறினேனென்று தாங்கள் நினைக்கலாகாது. உண்மையை யுள்ளவாறுரைத்தேன்.



**வீரேந்திரன்** :—அத்தகைய நண்பனை நீயிங் கடைவதற்கு மிக்க சந்தோஷ முறுவை யன்றே! அவனை யிங்குவரச் சொன்னேம்.

சுகேசன் பிரவேசித்தல்.

**சுகேசன்** :—தஞ்சைமன்னவ! வந்தனம். வந்தனம். தங்கள் பெயர் எங்கும் நிலவுவதை யுணர்ந்தயான் தங்கள் குடைக்கீழ்ச் சிலகாலந் தங்குதற்கு ஆவல்கொண்டுளேன். ஆதலால் தாங்கள் அடியேனை யாட்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். மற்றுந் தங்களாணைப்படி நடக்கச் சித்தனாயிருக்கின்றேன். நண்ப! சுகுண! வந்தனம்.

**வீரேந்திரன்** :—சுகேசா! உன்னைப்பற்றி யுன் நண்பன் விசேடமாய் உரைத்திருக்கின்றான். அவனுடன்றானே நீயும் இருப்பாய். சுகுண! யாம் கூறவேண்டுவதொன்றுமில்லை. நீ சுகேசனை முறைப்படி நடத்துவாய். யாம் செல்கின்றேம். [நிட்கிரமித்தல்.

**சுகுணன்** :—நண்பா! ஏது உனது காதலியை விட்டு நீ இவண் வந்தது? மணம் முடிந்ததோ?

**சுகேசன்** :—அப்படியொன்றுமில்லை. உன்னைப்போலத் தேயசஞ்சாரஞ் செய்யவேண்டுமென்றே வந்தேன்.

**சுகுணன்** :—எனக்குத் தோன்றவில்லை. சுகேசா! உன்னை யில் நீ உன் மனமாரக் காதலியை விட்டு வரவே மாட்டாயே! யார் உன்னைக் கட்டாயப்படுத்தியது?

**சுகேசன்** :—சுகுண! என் மனத்தை நீ ஒருவன்றான் சரியா யுணர்ந்தவன். என்னைத் தேயசஞ்சாரஞ் செய்யும்படி எனது தந்தையாரே கட்டளையிட்டார்.

**சுகுணன்** :—உன்காதலி சௌக்கியந்தானே?

**சுகேசன்** :—ஆம், சௌக்கியமே.

**சுகுணன்** :—நந்நாட்டில் ஏதேனும் விசேட முளதோ ?

**சுகேசன்** :—ஒன்றும் விசேஷமில்லை.

**சுகுணன்** :—வழிப்போந்த வருத்தம் மிகுதியும் உற்றிருப்பாய். ஆகலான் வா. சீக்கிரம் போவோம். பிறகு எல்லாவற்றையும் யோசித்துக் கொள்வோம்.

[நிட்கிரமித்தல்.

இரண்டாமங்கம் முற்றிற்று.



# அங்கம்—௩.

## முதற்களம்.

| | |
|---|---|
| இடம்: | தஞ்சையி லொரு தெரு. |
| காலம்: | நண்பகல். |
| பாத்திரங்கள்: | பிரதாபன், புஷ்பகன். |

**பிரதாபன்**:—அப்பா! புஷ்பகா! நீ இவ்விடம் வந்ததற்கு மிகவும் சந்தோஷமடைகின்றேன். உன்வரவு நன்றாகுக.

**புஷ்பகன்**:—நீ சந்தோஷப்பட்டாலென்ன படாமற்போனாற்றானென்ன? வீதிகளிலெல்லாம் தோரணங்கட்டித் தெருக்களெல்லாந் தண்ணீர்தெளித்து மங்கையரும் ஆடவரும் மலர்கொண்டு இறைத்தாலல்லாமல் என்வரவு நன்றென்று யான் மதிப்பேனல்லேன்.

**பிரதாபன்** :—புஷ்பகா! ஆரம்பித்துவிட்டாயே உன் காளிதாசத்தனத்திற்கு! நமது சுகேசர் விஜயவல்லியை எப்படி விட்டுப்பிரிந்தார்? சொல் பார்ப்போம்.

(புஷ்பகன் தேம்பித் தேம்பி அழுகின்றான்.)

என்னடா? அழுகின்றாயே! விஜயவல்லியம்மா இறந்தனளா?

**புஷ்பகன்** :—ஐயோ! மடையா! பிரிந்தவிதத்தையல்லவோ யான் காட்டினேன்!

**பிரதாபன்**:—விஜயவல்லியம்மா நம் சுகேசனை மணப்பாளா?

**புஷ்பகன்** :—மணப்பதேது ஒன்றேது?

**பிரதாபன்** :—சுகேசராவது விஜயவல்லியம்மாளை மணப்பாரா?

**புஷ்பகன்** :—அதுவும் மாட்டார்.

**பிரதாபன்** :—ஆயின் அவர்காதல் உடைந்துபோய் விட்டதோ ?

**புஷ்பகன்** :—இல்லை இல்லை. முழுமையாகத்தானிருக்கிறது.

**பிரதாபன்** :—மடையனாயிருக்கிறாய்! பின் அவர்கள் நட்பு எவ்வாறுதானிருக்கிறது? சொல் பார்ப்போம்.

**புஷ்பகன்** :—இவர் காதல் எம்மட்டிலிருக்கிறதோ அம்மட்டிலிருக்கிறது அந்த அம்மா காதல்.

**பிரதாபன்** :—இதைச் சொல்வதற்கோ இவ்வளவு கழுதையைப்போற் கத்தினாய்!

**புஷ்பகன்** :—அடேபோடா! என் தலையிலிருக்கும் பேன் கூட அறிக்கும் யான் யாரென்று.

**பிரதாபன்** :—அல்லது அரிக்கும்; அறிவிக்காது.

**புஷ்பகன்** :—அடே மூடா! அது கண்டிப்பாய் அறிக்கும்.

**பிரதாபன்** :—உன்னுடன் இழவுகொடுக்க என்னால்முடியாது. வா போவோம்.

**புஷ்பகன்** :—இந்த ஊரிற் கடைத்தெரு இருக்கிறதா ?

**பிரதாபன்** :—அப்புறம்போகலாம். எசமானரவர்கள் காத்துக்கொண்டிருப்பார். போகலாம் வா.

**புஷ்பகன்** :—ஆனால் வா. போகலாம். [கிட்கிரமித்தல்.

## இரண்டாங்களம்.

இடம்: தஞ்சை பரண்மனை.

காலம்: காலை.

பாத்திரங்கள்: சுகுணன், மல்லிகை, சுகேசன்.

**சுகுணன்** :—மல்லிகே! இவனைத்தான் பன்முறையும் உன்னிடத்து என் உயிர்நண்பனெனச் சொல்லி யிருக்கின்றேன்.



**மல்லிகை** :—[illegible] பெண்டன்மீது காதல்கொண்டு [illegible] நீங்கள் பரிகசிக்கும் வழக்கம் என்[illegible] அவர் [illegible]மோ, இவர் ?

**சுகுணன்** :—ஆம். அவர்தாம்.

**சுகேசன்** :—அம்மா! எளியசுகேசன்வந்தனம்புரிகின்றேன்.

**மல்லிகை** :—உங்கள் வரவு இவ்விடம் நன்மையதாகுக.

**சுகுணன்** :—சுகேச! நமது நண்பர்கள் யாவரும் சுகமாகத்தாமே யிருக்கின்றார்கள்?

**சுகேசன்** :—அவர்கள் தங்கள் வந்தனங்களை யுன்னிடத்துச் சொல்லச்சொன்னார்கள்.

**மல்லிகை** :—உங்கள் காதலி சௌக்கியமாகத்தானே யிருக்கின்றாள் ?

**சுகேசன்** :—ஆம். சௌக்கியமாகத்தானிருக்கின்றாள்.

(பெருமூச்செறிதல்.)

**மல்லிகை** :—தாங்கள் மிகுதியுங் காதலுற்றவளை எவ்வாறு தாம் பிரிந்திருக்கின்றீரோ ?

**சுகேசன்** :—பிரியுமாறு நேரிடின் என்னசெய்வது ? யான் பிரியுமமயத்து அவள் பட்டபாட்டினை நினைக்க இப்பொழுதே யவளிடஞ் செல்லுமாறென்னுளம் வேண்டுகின்றது. ஆயினும் இம்மோதிர மவள் கொடுத்ததாகலின் அதை முத்தங்கொண்டு ஒருவாறு என்காலத்தைக் கழிப்பேன்.

**சுகுணன்** :—மல்லிகே! எப்பொழுதும் மனிதருக்குத் தங்கள் சாதியாரின்மீதுள்ள அன்பு மற்றையாரிடத்திருக்கின்றதில்லை.

**மல்லிகை** :—நீங்கள் கூறுவது உண்மையன்று. ஏனென்பது நீங்களே சிறிது ஆலோசித்தால் தெரியலாம்.

**சுகுணன்** :—நீ கூறுவது காதலன்றே!

**சுகேசன்** :—அன்பின் முதிர்ச்சியே காதலாம்.

**மல்லிகை** :—அந்தப்புரத்திற் றோழியர் காத்துக்கொண்டிருப்பார். வீணை பயிலுங் காலமாயிற்று. யான்போய் வருகின்றேன். [நிட்கிரமித்தல்.

**சுகுணன்** :—சுகேசா! யான் காதலின்றன்மையை யிப்பொழுதுதானறிந்தேன்.

**சுகேசன்** :—என் காதலைப்பற்றி யான் முன்கூறும்போதெல்லாம் இகழ்ந்து நகையாடினையே! இப்பொழுது உன் காதல் எப்படி இருக்கின்றது?

**சுகுணன்** :—சுகேசா! யான் உன் காதலை முன்னர் இகழ்ந்த தன்மையே. அம்ம! அம்ம!! இப்புவியினிற் காதலிற் கொடிது கருதின் வேறுளதோ? அவரவர்கள் அநுபவித்தாலன்றி அவ்வப்பொருளின் குணாகுணங்கள் தெரியா. ஓர் இரவேனும் யான் சரியாய்த் தூங்குகின்றிலேன். மன்மதவேதனை மரணவேதனையினுங் கொடிதென்கின்றார்களே! அதனை யானே அநுபவிக்கின்றேன். (பாடுதல்)

என்ற னுளக்கோயி லின்ப முடனுறையு
மன்ற லெழிற்குமரி மையறந்த நாண்முதலாய்
வென்றி மிகவிளங்கு வேள்கணையின் புண்ணின்வழிச்
சென்று நுழைந்தென்னைத் தென்றலாக் கொள்ளுமரோ.

**சுகேசன்** :—என்னென்றிது கவலையெல்லாம்? உன் உடம்பைப் பார்க்கும்போதே சகலமுந் தெரிகின்றன. சிறிதுநேரத்துக்குமுன் பார்த்தோமே! அவள்தான் உன் காதலியென்று அப்பொழுதே யறிந்தேன்.

**சுகுணன்** :—ஆம். ஆம். அவ்வாரணங்கே என் காதலி!

**சுகேசன்** :—அன்று. அன்று. அவள்யாரணங்கே!



**சுகுணன்** :—அவள் தெய்வமங்கையென்பதற்கு ஐயம் என்னையிருக்கின்றது?

**சுகேசன்** :—யானதற் கொவ்வேன்.

**சுகுணன்** :—நண்பா! காதலுற்றவனிடத்து அவன் காதலுற்றபொருளை யுயர்த்துக் கூறினாற்றான் அவன் சந்தோஷமடைவானென்று உனக்குத் தெரியுமன்றே.—ஆம். ஆம். உன் நானுமறந்தேனே! நீயுங் காதலுற்றவனாயினையே! உன் காதலியைத் தவிர வேறு இவட்கிணையில்லையென்று நீ ஒப்புக்கொள்வாய்.

**சுகேசன்** :—அப்படியன்று. யான் காதல் நோயுற்றபொழுது நீ கூறியவற்றை மறந்து விடுவேனோ?

**சுகுணன்** :—மாறுக்குமாறுசெய்வதோபெருங்காரியம்? யான் உன்னைப் பரிகாசஞ்செய்தது உண்மைதான். அது நிற்க.

* "இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (௨௪)

என்ற வள்ளுவர் வாக்கு நீயறியாததன்று.

**சுகேசன்** :—தான் உவந்தது தனையில் உயர்ந்தது: என்பது உண்மை மொழிதானே. அதுபோல நீ காதலுற்றபொருள் உனக்குயர்ந்ததே! யான் காதலுற்றபொருள் எனக்குயர்ந்ததே!

**சுகுணன்** :—அப்படியன்று. நண்பா! இவ் வனிதாரத்தினத்தை யான் அடைந்துளேனென்று மிகவுங் கர்வமுற்றிருக்கின்றேன். இவ்விரத்தினத்தைப் பெற்ற யான் ஏழுகடலுந் தேவாமிர்தமும், அலையிற்றின் கரையிற் பொருந்திய கற்களே பொன்னும், மணலெல்லாம் முத்தும் ஆயினும் அவையிற்றினை இவட்குமுன் யான் ஒரு பொருட்டாய் எண்ணேன்.

* திருக்குறள்.

**சுகேசன்:**—அவள் உன்மீது காதலுடையவள் தானே ?

**சுகுணன்:**—ஆம். நேற்றைத் தினந்தான் என்னையே மணப்பதென வாக்களித்திருக்கின்றாள். மன்னன் வீரேந்திரன் என்னையவள் மணப்பதில் சம்மதிப்பானோ பேசவும்.

**சுகேசன்:**—அவள் காதலைப் பெற்றதினாலேயே அவன் இஷ்டப்பட்டாற்றான் என்னை படார்ப் போகுமோ வென்னை ?

**சுகுணன்:**—நீயுமிங்கு இனியாதலின் தந்திரமாய் எம்மைப்பற்றி அரசனெண்ணத்தை யறியக்கட்டுகிறாய். மற்றவையெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். நீ புறப்படுகின்றனையே ? காண்கிலேன்.

**சுகேசன்:**—தந்தையாரனுப்பிய இலச்சாமான்களோடு நேற்று மாலைதான் வந்தான். அவைகளை யின்னும் வேண்டியவின்று பிறக்கிவைக்கவில்லை. யான் செல்கின்றேன்.

**சுகுணன்:**—நீ செல்லல் வேண்டாம். இனப்புத்திர என் அறையிற் சிறிது நேரம் நித்திரை புரி. கம்பிரதாபனிடஞ் சொல்லி யிறக்கிவைக்கச் சொல்லுகின்றேன். போகலாம் வா. [இருவரும் நிட்கிரமித்தல்.

## மூன்றாங்களம்.

இடம்: தஞ்சை யாண்மனையி ரொருசார்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: சுகுணன், சுகேசன்.

**சுகுணன்:**—அரசன் மனமில்லான் போலத் தோன்றுகின்றானென்றாயே. அதைக்குறித்து யான் மன்னனுடனோடு ஆலோசிப்புழி அவள் ஒருபாலுஞ் சொற்றனளில்லை. ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொருயுகமா யிருக்கின்றது.



மாலைப்பொழுது எப்பொழுது வருமோ என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

**சுகேசன்:**—மாலை வந்துவிடுகின்றதே யென்கிற கஷ்டம் உனக்கு ஒழிந்ததுபோலும்! உபாயம் என்றாயே! அஃதென்னை ?

**சுகுணன்:**—நண்பா! வேறு யாருக்குந் தெரியலாகாது. மிகவும் இரகசியமாக வைத்துக்கொள். இன்றை யிரவில் நூலேணி வழியாய் அவளறையிற் சென்று அவளை யானழைத்துக்கொண்டு நாங்கள் இருவேமுஞ்சேர்ந்து வேறு எங்கேனுஞ் சென்று மணந்து வாழ்வது என்று நிச்சயித்திருக்கின்றோம். இதைப்பற்றி நீ கூறும் புத்தி மதியின்படி நடக்கின்றேன். நீ இனிநாங்கள் நடக்க வேண்டிய விதத்தைப்பற்றிக் கூறல் வேண்டும்.

**சுகேசன்:**—மீன் குட்டிக்கு நீந்துதலுங் கற்றுக்கொடுக்க வேண்டுமோ ? காதலர்க்குத் தங்கள் மனோவிஷ்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பலதந்திரங்கள் தாமாகவே தோன்றுமன்றே! யான இவ்வுபாயத்திற்கும் மேலானது என்ன சொல்லப் போகின்றேன் ? நீ செய்வதே தக்கது.

**சுகுணன்:**—நீ இவட்போந்து இருபது தினங்கள் தாமே யாகின்றன. உடனே உன்னைப் பிரியுமாறு நேரிடுகின்றதே! என் துர்ப்பாக்கியத்தை யென்னென்பேன்!

**சுகேசன்:**—அதற்கென்ன ! நான்றான் எத்தனைநாள் இங்கிருக்கப் போகின்றேன். இன்னுஞ் சிலதினங்களில் யானும் திரிசிரபுரத்திற்கு வந்துவிடுகின்றேன். அங்குத்தானே நீ செல்லப் போகின்றாய் ?

**சுகுணன்:**—அன்று; அங்குச் செல்வேமாயின் வீரேந்திரன் சேனைகளுடன் சொக்கநாயகருடன் போருக்கு வரினும்

வருவான். ஆகலின் மாறுவேடமும் பெயரும் பூண்டு குடந்தைக்குச் சென்று ஆண்டு ஓர் இல்லத்தமையலாளென் றுன்னி யிருக்கின்றோம்.

**சுகேசன்** :—'செய்வன திருந்தச் செய்' என்பது பற்றி நீ செய்யப்போகின்றதற்கு யான் மிகவுஞ் சந்தோஷமுறுகின்றேன்.

**சுகுணன்** :—சுகேசா! யான் கூறிய விடயத்திற்காகக் கடைத்தெருவிற்குச் சென்று நூலேணிவாங்கிவர வேண்டியிருக்கின்றது. யான் போய் வருகின்றேன்.

**சுகேசன்** :—வந்தனம். போய்வருதி. [சுகுணன் நிட்கிரமித்தல். மல்லிகையைக்கண்ட நாண்முதல் என்மனமென்னவோ மாறுபாடடைந்துளது. என்னவோதெரியவில்லையே!—ஆ! ஆ! சூட்டைச் சூடு தணிக்குமன்றே! ஓர் ஆணி மற்றோராணியை வெளியேகழிக்குமன்றே! அதுபோலாயிற்று. விஜயையின்மீதுள்ள காதல் இம்மல்லிகையின் மீதுள்ளகாதல் காரணமாகத் துறக்கப்பட்டது. என்னே! என்கட்பொறியின் காட்சியினாற்றானோ அன்றி நண்பன் சுகுணன் வர்ணிப்பினாற்றானோ அன்றி அவள் தண்மை அழகினாற்றானோ அன்றி என் நிலையற்றபுத்தியினாற்றானோ இவ்வாறுயோசனைக்கிடங்கொடுத்தேன்?—இம்மல்லிகையோ பேரழகுவாய்ந்தவள்! நமது காதலி—யான் இப்பொழுதுநேசிக்கின்றிலேன்—அவளும் எழிலுற்றவளே! ஆயினும் இக்கட்டழகியின்முன் அவளது சௌந்தரிய மெங்கே? மதிமுன் இருள் ஒழிய வேண்டுவதுதான்.—சுகேசா! என்ன மதியற்றவனாயினாய்! நம் நண்பன் சுகுணனை மோசஞ்செய்யலாமா?—சீ! அவ்வனைப்பொழுது நேசிக்கின்றிலேன். (பாடுதல்)

அன்பெனச்சொலு மொருகொடி யணிமிகு விதையை பின்ப மல்லிகை யெனத்தகத் தினிவிட வதுதான்



வன்புகொண்டொரு கொடியினின்மாண்பொடு படர்ந்து மன்ப ரந்தனன் பெனும்பயிர் மறைத்ததை யன்றே. ()

அவன் காதலி—அன்று, அவன் ஆசைவைத்திருப்பவள் மேல் யானுங் காதலுற் றிருக்கின்றேன். காதலும் நட்புங் கணப்பொழுதேனுங் கூடியிரா. நமது சுகுணனை நண்பனெனப் பாராட்டாமல் இப்பொழுதறிந்த விடயத்தை மன்னன் வீரேந்திரனிடம் சொல்லுவோமாயின் அஃது எல்லாவற்றிற்கும் நல்லது. நாம் காதலுறும் பொருள் கவரப்படாம லிருப்பதன்றியும் வீரேந்திரனும் நண்பனென்றுகூடப் பாராமல் தன்னிடத்துக் கூறியதற்காக மிகவும் நம்மிடத்து நம்பிக்கையா யிருப்பான். அப்புறம் இவ்வீரேந்திரனையேமாற்றல் ஒரு பெரிய விடயமன்று. நம்பிக்கை யுற்றவன் செய்யுந் தீங்குகளனைத்தையுங் கவனியாதிருத்தல் மனிதர்தந் தன்மையாயிற்றே. காரிய சித்திபெற வேண்டுமாயிற் கணப்பொழுதும் வீணாக்கலாகாது. காலம் போயிடிற் காரியம் போய்விடும். சுகுணன் தன் காதலியோடு போவதை யுடனே மன்னனிடத்துக் கூறச் செல்கின்றேன். [நிட்கிரமித்தல்.

## நான்காங்களம்.

இடம்: திரிசிரபுரத்தில்விஜயையின் வீட்டிலோரறை.

காலம்: காலை.

பாத்திரங்கள்: விஜயை, பத்மாவதி.

**விஜயை** :—சகி! பத்மாவதி! நீ என்னுடைய நன்மையையே எப்பொழுதும் பாராட்டுபவ ளல்லையோ? இனி யென்னாற்றனியே யிவ்விடத்திற்றானே யிருத்தல் முடியாது. என்றலைவர் பக்கல் யானெவ்விதஞ் செல்வது? அப்ப

டிச் செல்வதனால் ஒருவித இடையூறும் எமக்கு நேரி டாது. மற்று யான் அவரிடஞ் செல்லுமாறு ஒருபா யங் கூறுவாய்.

**பத்மாவதி** :—அம்மா ! விஜயே ! இவ்விடத்தினின்றுந் தஞ் சை வெகுதூரமாயிற்றே ! பிரயாணத்தால் மிக்க துன் பங்கள் நேரிடக்கூடுமே !

**விஜயை** :—என்ன அப்படிச் சொல்கின்றீரோ ! உண்மை யான ஆதரத்துடன் பிரயாணஞ் செய்வோர்க்கு இவ் வுலகமும் ஒரு காவதமன்றோ ! காதலாகிய நற்றுணை யொன்றிருப்ப மிகவும் பெருமைசாலும் எம்மான் அற் புதக்கலைவன் சுகேசனிடம் செல்லலும் ஒரு பெரிய துன்பமோ ?

**பத்மாவதி** :—இத்தனை நாட் பொறுத்திருந்த நீ இன்னும் சிலதினங்கள் பொறுத்திருக்கலாகாதோ ? சீக்கிரம் வந்துவிடுவார். மனம் வருந்தப்படாதே.

**விஜயை** :—என்னுடைய தன்மையை யுணர்ந்த நீயும் அவ் வாறு கூறுதல் தகுதியாமோ ? (பாடுதல்)

என்ற னிதயத்தி னின்பங் கவர்ந்தவனை
யென்றையான் காண்பலோ வென்செய்கோ தோழீ!
இருதிங்க ளாயினவே யென்செய்கோ தோழீ !!
எப்போதென் றுதனை யெனையணைப்பா னிவ்விடத்தே
தப்பாமல் வந்திடுவான் சாற்றுயென் றோழீ !
தமியனேன் செல்லவிடை சாற்றுயென் றோழீ !!
என்றுதன் வந்திடுவா னென்றே யிறுகாறுங்
கொன்னே யிருந்தனெனே கூறுயென் றோழீ !
குறுகே லவன்கணென்று கூறுயென் றோழீ !! (உசு)

இவ்வளவுநாள் யான் வருந்தியதற்காக நீ இரங்கவன் றோவேண்டும்! சுகேசனை யின்று காணலாம் நானெக்குக்



காணலாம் என்ற எண்ணத்தாலல்லவோ யான் பொறுத் திருந்தேன் இவ்வளவுகாலம். என் காதலாகிய அக்கி னியை இனித் தணிக்கவேகூடாது.

**பத்மாவதி** :—உன்விரகாக்கினியை யென்றூற்றணிக்கவும் முடி யாது. அப்படி யான் தணிக்கவும் முயலவில்லையே. நீ யோசனையின்றி நடப்பதை யான் தடுக்கமுயன்றே னேயொழிய வேறொன்றுமில்லை.

**விஜயை** :—அக்கினியின் கொடுமை அதிகமாயிருக்கிறதென்று விறகுகொண்டு மூடினால் அது தணியுமோ ? 'நெய்யா லே நெருப்பவிக்க நீணிலத்திற் கண்டறியேன்.' மெது வாகவோடுநீரைத்தடுப்பதனாலல்லவோ அஃததிக வேக மாய் ஓடுகின்றது? அப்படித் தடாதிருப்பையாயிற் கரை யிற் பரந்திருக்கும் பருக்கைக்கற்களோடு மோதுண்டு இனிய கீதஞ்செய்யும். யான் போவதைத் தடாதே. யான் பெயர்த்து வைக்கும் ஒவ்வோரடியும் என் காத லன் அருகிற்கொண்டுசெல்கின்றதென்று நினைத்தலால் மகிழ்ச்சியடை வேன். மாட்டுஞானத்திற் படுங் கஷ்டங்களெல்லாம் பேரானந்தத்தை விளைவிக்கும் வைகுந்தப்பதவிக்குக் காரணமாயிருத்தல்போல யான்படும் துன்பங்களெல் லாம் கடைசியில் என் காதலனைச் சேர்ந்து மகிழ்வதற்கு ஏதுவாம். பின்னும். (பாடுதல்)

அணிமலர்ப் பொதும்பரை யணுகி யேகலும்
மணமும்மம் முன்றமிகூட மகிழ்வு செய்தல்போற்
கணவனை நெருங்கலுங் காத லோங்கலாற்
றுணியுமென் னுளங்கனி தாங்கு மேயரோ. (உஎ)

**பத்மாவதி** :—ஆயின் எவ்வாறு தஞ்சையை யடைகிறது ?

**விஜயை** :—இவ்விடையோடு யான் போகேன். ஆதாமிருந்த அற்பரிடத்தினின்றுந் தப்பிக்கொண்டு செல்வதற்கு ஆண்வேடம் பூண்டு செல்வேன்.

**பத்மாவதி** :—உன் கூந்தலுக் கென்செய்வாய்?

**விஜயை** :—அதற்கென்ன? பெண்மையையே மறைத்துச் செல்லு மொருத்திக்கு இக்கூந்தலையோ மறைப்பதொரு கஷ்டம்? ஒரு கவசத்தால் மறைத்துவிடுகிறது.

**பத்மாவதி** :—எம்மாதிரியான உடையுனக்கு வேண்டும்?

**விஜயை** :—உனக்கெது இஷ்டமோ அதுவே யெனக்கும் பிரியந்தான். ஆயினுங்கருநிறமே என்மனத்தின் நிலைமையைக் காட்டும். என் தலைவனாகிய பரிதியை யடையும் வரையும் என்மனம் இருள்மூடி யிருக்குமல்லவா?—அவையெல்லாமிருக்கட்டும். யானிப்படிப்போய்விட்டே னாயின் உலகோர் என்னசொல்வார்கள்? பழிப்பார்களென்றே தோன்றுகின்றது.

**பத்மாவதி** :—பழிச்சொல்லுக்குப் பயப்பட்டால் வீட்டிற்றானே யிருத்தல்வேண்டும். அதற்கென் செய்வது?

**விஜயை** :—அதற்குப் பயந்து யானிருக்கவும் முடியாது.

**பத்மாவதி** :—ஆயிற் பழிச்சொல்லைப் பாராட்டாது செல். உன் நாதர் சுகேசர் உன் செயலை மெய்ச்சுவாராயிற் பிறர் என்ன சொன்னாற்றான் என்ன? பெண்களுக்குக் கணவனன்றே யுலகம்! அது நிற்க. சுகேசரும் உன் செயலைப் பற்றிச் சந்தோஷிப்பா ரென்று எனக்குத் தோன்றவே யில்லை.

**விஜயை** :—அதைப் பற்றி யெனக்குப் பயமே யில்லை. அவர் கூறிய மொழிகளும் பிரிந்த போதுற்ற வருத்தமும் இன்னுந் தெளிவாக என் செவியி லிருந்துகொண்டிருக்கின்றன. அத்தகைய அன்புற்றவர் என்னைக் கைசோர விடமாட்டா ரென்றே நினைக்கின்றேன்.

**பத்மாவதி** :—ஏமாற்றுந்தகையார்க்கும் நீகூறியன துணையாம்.

**விஜயை** :—அத்தகைய பொருள்களை யிழிவு படுத்தும் அற்பனல்லன் என் பிராணேசன் என்று எண்ணுகின்றேன்.



அவர் கூறியவெல்லாம் உறுதிமொழியே. அவரடைந்த வருத்தமும் உண்மையான காதலாற்றா னென்பதற்கையமே யில்லை.

**பத்மாவதி**:—அப்படியே யிருக்கும்படி யான்மிகவும் விரும்புகின்றேன்.

**விஜயை** :—என்மீது உண்மையான நேசம் உனக்கிருக்குமாயின் இனி நீ யவரைப்பற்றி யவ்வாறென்றுஞ் சொல்லவேண்டாம். என்னருமைத் தலைவர்மீது நீ யன்பு பாராட்டுவையேயாயின் யானுன்னை நேசிப்பேன்.

**பத்மாவதி**:—அவையெல்லாம்சரி! நீ தனியே போகலாமோ? உனக்குத் துணை யாவரேனும் வேண்டாமோ?

**விஜயை** :—யான் ஆண்வேடம்பூண்டதன் பயன்றானென்னை? மேலும், **(பாடுதல்)**

கரும்புமொய் குழலிளந் தோகை யேயென்முன்
கரும்பெனுஞ் சிலைக்கொடுங் காமன் கூரிய
வரும்பெனுங் கணையுடன் னண்மிச் சேறலின்
விரும்புமெத் துணையையும் வேண்டு கின்றிலேன். ([illegible])

யான் தனியேதான் செல்லவேண்டும். யான் சென்றபிறகு எந்தையிடம் உண்மையை யுரைத்துவிடு. என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்றுங் கூறுவாய்.

**பத்மாவதி** :—யானும் வருகின்றேனே?

**விஜயை** :—நீ வந்து யாதுபயன்? துணைவேண்டுமாயிற் புருடனையல்லவோ அழைத்துச் செல்லவேண்டும். நீவரல்வேண்டாம். என்னறைக்குப்போய்ப் பிரயாணத்திற்கு வேண்டிய யாவற்றையும் எடுத்துவை. இன்றிரவே செல்லவேண்டும்.—ஆகுல், **(பாடுதல்)**

மேனகைதன் மகளொன்று வேட்ட மன்னன்
விலக்கியவா றேனையுமெண்ணிகோன் விரும்பா னாயின்
வானகத்தி னெவர்பதியை மாசு ணைந்தான்
வாய்மதித்த மருந்துவிற்கு மாண்பு பேரலத்
தினையென்றன் மனக்கவர்ந்த திகழுக் …
இனியளவு பெறுநின்றித் தீங்கி யற்று
மானதுலை செய்தே னம்ம …
னரங்கீதனி னீங்கவேனோ சாவோர் யாரே! (உக)

[இருவரும் பிரமித்தல்.

## ஐந்தாங்களம்.

இடம்: தஞ்சையரண்மனையிலோர் அறை.

காலம்: மாலை.

பாத்திரம்: சுகேசன்.

**சுகேசன்:**—எவ்வளவு உறுதிப்பாடு செய்துகொண்டு அரசனிடம் அறையலாமெனினும் என் நாவெழவில்லையே! மனத்தின்படி நான் நடக்கமாட்டேனென்கின்றதே! என் செய்வது? — அரசனிடமுறைப்படமேல் நண்பனை யிழத்தல்வேண்டும். அவ்வுரைவுமாட்டேனோ? விஜயையினையும் விடவேண்டியிருக்கின்றது. நண்பனிச்சித்த நங்கை தங்கைக்குச் சமானமானவளாயினளே! 'வேறு, எம்மாதையுங் கனவிலும் நினையேன்' என்று விஜயையிடங் கூறிய வாக்குத்தத்தம் என்னாயிற்று? இவ்வுலகில் வாழுமுயிர்கட்குப் 'பிரக்கியாதி'யன்றே பிரதானம்! சுருணனுக்கும் விஜயைக்குந் துரோகஞ் செய்வேனாயின் உலகோர் என்ன சொல்லுவார்களோ? இத்தகைய உன்னத பதவியிலிருப்பவனும் உலகுவப்ப நடத்தலையன்



றே யிச்சிக்கின்றான்! 'உலகுடன் ஒத்துவாழ்' என்ற மெய்ம்மொழியும் மிக்க அநுபவத்தின்பின்னரன்றோ பிறந்திருக்கின்றது. உலகுடன் பகைக்கின் ஒரு சிறிதும் இன்பமுண்டாகாது. (பாடுதல்)

* உலகத்தா ருள்ள தென்ற துள்ள … மொழிகீ வேலை
… தா ரில்லை யென்ற தில்லை … ருங் காலை
யலகத்தி … … … 
லுலகத்துக் கலன்போரு … … … பனென்றில்

மாநுடச்சேர்க்கையாலன்றே இன்ப துன்பங்க ளுண்டாகின்றன. இவ்விரண்டு மற்றவர்கள் வயத்திற் றாய்கிழங்குண்டு வானாட்களை வீணாட்களாக்கிச் சுவர்க்கமென்னுங் கனவு கண்டுகொண்டு வசிக்கின்றவர்களோ. இன்பமில்லாமல் துன்பமேது? துன்பமில்லாமல் இன்பமேது?—தர்க்கமன் கருதியன்றே உலகிலுள்ள உயிர்களனைத்து மொரு செயலைச் செய்கின்றன? இரமணீயமான ஒரு மலர் சிறுபூஞ் செடிகளாற் சூழுற் றிருக்குமாயின் அவைகளை மிதித்துக் கொண்டன்றே அம்மலரைக் கொய்தல் வேண்டும்? இவ்வுலகின்கண் எப்பொழுதும் பயமுள்ளனதாம் இயற்கையாகவே நிலைத்து நிற்கும்! இவ்வுலகில் இயற்கைப்பிரிவினையும் சுருங்குவைதங்கிநிற்றலுமில்லாவிடின் எல்லா வுயிர்களும் பொருந்தி யிருத்தற்கு இடம் போதாதன்றே! என் நன்மையை நாடினேனாயின் அற்பராகிய நண்பனையும் விஜயையினையும், ஒருபொருட்டாயெண்ணக் கூடாது.—ஓ! புலவிர்காள்! நர்மயமென்பது தரையினின்றகன்றிடின் மாநுடர்தமக்கும் வானவர்தமக்கும் வேற்றுமையென்னோ? சாற்றுதிர்! சாற்றுதிர்!! ஒவ்வொருவனுந் தான் செய்யுஞ் செயல்கள் தன்னயத்தையும் பரோபகாரத்தையும்பற்றியேயென்று

* ஒட்டக்கூத்தராமாயணம்,

சில ஒழுக்கநூலோர் கூறுகின்றனரே! இச்சந்தர்ப்பத்தில் அத்தகையசெயலைக் காணேனே!—விஜயவல்லியை விடுவதா அன்றி இம் மல்லிகையின் மீதுள்ள காதலைத் துறப்பதா? மல்லிகையின்மீது காதலுறுவமேல் நண்பன் சுகுணனுக்குத் தீங்கியற்றல் வேண்டும். மல்லிகையின்மீது உள்ள காதலை யொழிப்பமேல் என்னை யான் துறக்க [illegible]டுமே! என்னை யான் துறக்கவே முடியாது! இக்காதலிற் ச[illegible]ட்டைத் துறப்பதல்லாமல் அவனுக்குத் தீங்கியற்றலும் வேண்டும். எதனைச் செய்வது? நண்பனைப் பகைஞனாக நினைத்தலும் விஜயவல்லி இறந்தாளென வுன்னுதலும் மிகவும் எளியவே! முன்னர்யான் ஒருசிறு விண்மீனைக்கண்டு களிகூர்ந்தேன். அவ்வளவுதான். காதலுற்றேனல்லேன். இப்பொழுதோ மின்கணாயகமான மதியினையே கண்டு களிகூர்ந்து காதலுற்றேன். ஆம். விஜயவல்லி இம் மல்லிகையின் சேடியாகவும் இருத்தற்குத் தக்கவளல்லள். காதலுந் தன்நயமு மிரண்டும் விழுமிய பொருள்கள். இவ்விரண்டுந் தலையெடுத்தால் நட்புத் துன்பமடையவே வேண்டும். இவ்விருவரையும் இழப்பதனால் மல்லிகையை மணக்கலாம். இன்றையிரவு நூலேணி வழியாய் மல்லிகையை யழைத்துச் செல்லப்போகின்றான். அதற்குநான்செய்யவேண்டியதென்னை?—முன்னர் யான் தீர்மானித்தபடியே இப்பொழுது மன்னன் வீரேந்திரனிடத்து அவர்கள் ஓடிப்போவதைக் குறித்த ஏற்பாடுகளனைத்தையும் ஆதியோடந்தமாய் உரைத்துவிடுகின்றேன். அப்பொழுது மன்னன் நண்பனைத் துரத்திவிடுவான். நண்பன் ஒழிந்ததும் அவள் மனந் திரும்பிவிடும். யானிச்சித்தபொருளைச் சந்தேகமின்றி யடையலாம். ஆயினும் நண்பனுக்குத் துரோகஞ்செய்யவேண்டியிருக்கின்றதே! என்செய்வது? ஓ! காதலே! எவ்வாறு



என்னை முயற்சி செய்யுமாறு தூண்டினையோ அவ்வாறே காலதாமதஞ்செய்யாது இத்தொழிலைக் கைகூடுமாறுஞ் செய். [நிட்கிரமித்தல்.

## ஆறுங்களம்.

இடம்: [illegible]சய னரண்மனைப் [illegible]ராங்கர்.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: வீரேந்திரன், சுகேசன்.

**வீரேந்திரன்:**—சுகேசா! நீ நம்மிடங் கூறவேண்டுமென்ற இரகசிய மென்னை? சொல்.

**சுகேசன்:**—மகாராஜ! நேசவிஷயத்தை யான் யோசித்தேனாயின் அதுயான் கூறவேண்டுமென்பதைத் தடுத்துவிடுகின்றது. ஆயின் தாங்க ளென்னை யாதரிப்பதை யோசிக்க யான் உங்களிடங் கூறவேண்டுமென்ற கடமையை மேற்கொண்டவனாகின்றேன். உப்பிட்டாரை யுள்ளளவும் நினைக்க வேண்டுமன்றே. 'உள்ள நாளுள்ளமட்டு முண்டபின் வாங்கலாமோ?' கடமையன்றிப் பின் எத்தகைய விடயமென்னைப் பாதிக்குமேனும் யான் இனிச்சொல்லப்போகின்ற விடயத்தைக்கூறேன். கடமையும் நட்பும் கைகலந்து போரிட்டுப் பின்னர்க் கடமையே தலைமை யுற்றது. மகாராஜ! என் உயிர் நண்பன் சுகுணன் இன்றை யிரவு தங்கள்புத்திரி மல்லிகையை யழைத்துக்கொண்டு போகப் போகின்றான். என்னிடத்திவ் விரகசியத்தைக் கூறினான். என்னாலானவளவு தடுத்துரைத்தேன். சிறிதுங் கேட்கின்றிலன். (பணிதல்)

இரவியின் கதிர்க ளான்வளர் கொடிக
ளிலைசெறிந் தடர்ந்தபி னவையுள்
வரவிடா தவற்றைத் தகைக்குறுந் தன்மை
மானுறும் பரிவினை யடைதற்
கருகனல் சுகுண னதுபெறாஉ நன்றி
யறிவிலாக் காட்டலின் றொழுகல்
சரியென வுணர்திர் சாற்றரும் புகழார்
தஞ்சைமா நகர்ப்புரந் தருள்வோய்! (௩௧)

தாங்க ளவனுக்குச் செய்துவரும் நன்மைகளை யொரு சிறிதுங் கவனித்தானில்லை. (பாடுதல்)

முற்பகலிற் பரிதியொளி வளருதலு
மாந்தர்நிழன் முறைமையிற் குறுகல்
கற்றவர்க ளறிந்திருப்ப ரதுபோல
நுந்தமன்பிற் கறங்கு மன்னோன்
பொற்புறுசெய் நன்றியறி வதுகுன்ற
லியல்போகாண் புரிந்து நீவிர்
பிற்பகலை யினியேய்ப்பி னன்றிமற
வானவனும் பெரிது மன்றே. (௩௨)

தாங்களிவ் வயோதிக பருவத்தில் வருந்துவதைப் பார்க்கினும் நண்பனுக்குப்பிழையியற்றலாமென்று கூறினேன்.

**வீரேந்திரன் :**—சுகேசா! நீ செய்த உபகாரத்தை யென்றும் மறக்கவேமாட்டேம். யாம் உயிருள்ளவரையும் உனக்குக் கடமைப்பட்டோரென விருக்கின்றேம். அவர்கள் காதலை யாம் பன்முறையுங்கண்டுளேம். நாம்நித்திரைபுரிவதாக நினைத்து ஓடிப்போவ மென்று அநேகமுறை உரக்கப்பேசிக்கொண்டிருந்தார்கள். நம்மிடத்தில் மிகப்பிரீதியுற்றவனவ்வாறு செய்யான் என்று விட்டு விட்டேம். அவன்றன் நண்பனுப நீயே கூறிப்போந்தாய். இதனாற்றான்



அவனை யிரவில் மேன்மாடத்திற்றனே யிருக்கச்செய்து நாமே அதன் திறவுகோலை வைத்துளேம்.

**சுகேசன் :**—மன்னவ! அவர்கள் அதற்குமொருதந்திரமன்றே செய்திருக்கின்றார்கள்! சுகுணன் ஒரு நூலேணி கொணர்ந்து அதன் வழியாகத் தங்கள் புத்திரியை யழைத்துக்கொண்டு செல்வதாகத் தீர்மானித்திருக்கின்றான். சுகுணனு மிவ்வழியாயே சீக்கிரம் வருவான். தங்களுக்கிஷ்டமிருப்பின் அவனைத் தடைசெய்து அவன்றன் எண்ணத்தை யறியலாம். ஆனால் மகாராஜ! தந்திரமாய்ச் செய்யவேண்டும். யானேதான் தங்களிடங் கூறினேனென்பது அவனுக்குத் தெரியலாகாது. என் நண்பனிடத்துப் பகைமையாலன்று; மற்றுத் தங்களிடத்துள்ள நன்றியறிவாற்றான் இவ்விடயங்களைக் கூறுகின்றேன்.

**வீரேந்திரன்:**—நண்பா! நீ இனி யெம்மிடத்து நட்புப்பாராட்ட வேண்டும். நீ கூறியதாக யாமெவ்விடத்திலுஞ் சொல்லேம். உன் பெருந்தன்மைக்காக மிக்க வந்தனம் புரிகின்றேம்.

**சுகேசன்:**—அதோ சுகுணனும் வருகின்றான். நாம் இருவேறும் இதுகாறும் வார்த்தையாடிக் கொண்டிருந்தனமென்பதுகூட அவனுக்குத் தெரியலாகாது. ஆகையாற் போய்வருகின்றேன். வந்தனம். மகாராஜ!

[நிட்கிரமித்தல்.

**வீரேந்திரன்:**—(பரிக்கிரகக்கொண்டு) என்னகொலைப்பாதக வெண்ணம்! இத்தகையோன் நித்திரைசெய்யுஞ்சமயத்துக் கொலைசெய்யவும் அஞ்சவே மாட்டான். புன்சிரிப்புடன் இதோவருகின்றான்.

சுகுணன் பிரவேசித்தல்.

சுகுண! எங்கு அவசரமாய்ச் செல்கின்றாய்?

**சுகுணன்:**—அப்படி யவசரமொன்று மில்லை. என் நண்பர்

களுக்குக் கடிதங்களெழுதி அதர்களிடம் அனுப்பவேண்டும். அவர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள்.

**வீரேந்திரன்:**—ஏதேனும் அவசரமான சமாசாரம் உளதோ?

**சுகுணன்:**—அப்படியொன்றுமில்லை. தங்கள் இராச்சியத்திலுள்ளான் சௌக்கியமாயிருப் பதைப்பற்றித்தான் எழுதியிருக்கின்றேன்.

**வீரேந்திரன்:**—அதர்கள் நாளைக்காலைதானே செல்லல்வேண்டும். ஆகையால் யாம் கூறுவதைச் சிறிது கவனமாய்க் கேள். எமக்கு நாற்பதுவயதாகிய விடயம் உனக்குத் தெரியாததன்று. நம்து புத்திரிக்கு வயது பதினாறு ஆகின்றது. அதிசீக்கிரத்தில் மணஞ்செய்யவேண்டும். மணஞ்செய்துகொடுத்தபிறகு வீட்டுவிஷயங்களைக் கவனிப்பவரொருவருமில்லை. ஆதலால் யாமிரண்டாமுறை மணம்புரிய வெண்ணி ஒரு பெண்மீது காதலுற்றிருக்கின்றோம். அவள் தாய்தந்தையர்க்கு அவளை எமக்குக்கொடுப்பதில் மனமே கிடையாது. வயதாய்விட்டதாயினும் மன்னனானதனால் அவட்கு எம்மை மணப்பதில் இஷ்டந்தான். ஆயினும் இரவில் அவள் தந்தை அவளை மேன்மாடத்தில்வைத்துப் பூட்டித்திறவுகோலை யவன்வைத்திருக்கின்றான். யாம் என்னசெய்கிறது? இளைஞருக்குக் காதல்விஷயத்தில் அதிகமாகத் தெரியுமாதலால் உன்னை வினவுகின்றோம்.

**சுகுணன்:**—இரவிற் சாளரவாயிலாகச்சென்று அவளை யழைத்துக்கொண்டுவந்து விடலாமே.

**வீரேந்திரன்:**—மிகவும் உயரத்தன்றோ சாளரவாயிலிருக்கின்றது! அதையெப்படி யடைவது?

**சுகுணன்:**—ஏன், நூலேணியொன்று கொண்டு அதனால் அவளையழைத்து வந்துவிடலாமே.

**வீரேந்திரன்:**—அத்தகைய நூலேணி எங்குக்கிடைக்குமோ? அஃதெமக்குத்தெரியாதே.



**சுகுணன்:**—தங்களுக்கு எப்பொழுதுவேண்டும்?

**வீரேந்திரன்:**—சுகுண! எப்பொழுதென்று கேட்கின்றாயே! காதலர்க்கு ஒவ்வொரு கணமும் ஒருயுக மென்பது நீ யறியாயோ? இன்றையிரவிற்றானே உபயோகிக்கலாம். கிடைக்குமா இப்பொழுது?

**சுகுணன்:**—ஆயின் இன்றை யிரவில் முதற்சாமத்துக்குட் கொணர்கின்றேன்.

**வீரேந்திரன்:**—அவையெல்லா மிருக்கட்டும். சுகுண! நாம் மாத்திரமன்றோ தனியேசெல்லவேண்டும்? எப்படி யந் நூலேணியைக்கொண்டுசெல்வது?

**சுகுணன்:**—மகாராஜ! அதுமிகவும் இலேசாகத்தானிருக்கும். தாங்கள் ஒருபெரிய உடையைத் தரித்துக்கொண்டு அதில் எளிதின் மறைத்துக்கொண்டு போகலாம்.

**வீரேந்திரன்:**—ஆயின் நீதரித்துக்கொண்டிருக்கு மிப்பெரிய உடையெமக்குச் சரிப்படுமா?

**சுகுணன்:**—இம்மாதிரியுடை தங்களுக்குச் சரியாயிருக்கும்.

**வீரேந்திரன்:**—எங்கே? எடு. சரியாயிருக்கின்றதோவென்று பார்ப்போம். (சுகுணன் சிறிது நகைத்துச் சும்மாவிருத்தல்) எடு, போட்டுப்பார்ப்போம். ஏன்? சும்மாவிருக்கின்றனையே! (சுகுணனெடுத்தலும் நூலேணியுமொருகடிதமுங் கீழே வீழ்தல்) இஃதேது கடிதம்? ஆ! ஆ! "மல்லிகைக்கு." சரிதான். எம்புத்திரியின் கடிதந்தானே. யாம் தடையின்றிப் பிரித்துப்பார்க்கலாம். (பிரித்துப்பார்த்தல்) இஃதென்னை? ஆச்சரியம்! (பாட்டைவாசித்தல்)

காகிச மொழிமலர்க் காம வல்லியே
யருள்பொழி நின்முக மதியை யார்தர
விருள்வரி னிலெதிர் பார்த்தி ருப்பென்யான்
றருவினி லிருந்தயர் சகோர மானவே. (௩௩)

'கண்மணி! மல்லிகே! இன்றையிரவு பத்துநாழிகைக்குப் புறப்படச்சன்னத்தையாயிரு.'—ஆ! ஆ! இதோ ஓலையும் அதற்கு இருக்கின்றது. சுகுண! சீ! தூர்க்குண! உன்பெற்றோர் உன்றன்மைக் கேற்பப்பெயரிட்டிலர்.—நன்று செய்தாய்! சந்திரன் தண்ணிய கிரணங்களை நம் மேற்பரவச் செய்கின்றான் என்று அதைப்பிடிக்க முயலுதல் தகுதியாமோ?—கரும்பு ருசியாயிருக்கின்றதென்று அதனைவேருடன்கல்லலாமோ?—ஏ! துஷ்டா! முன் சூரியன் பழம்போலிருக்கின்றான் என்று நினைத்தவன் பிடிக்கச்சென்ற ஆஞ்சனேயன்பட்டபாடு நீ அறியாயில்லையோ? அதுவும். யார், மூடா! சர்வகுணமூர்த்தியான ஸ்ரீராம பிரானைப் பங்கப்படுத்த நினைத்துப் போர்செய்ய வந்த பரசுராமன்பட்டதையும் அறியவில்லையோ? ஏதோ உன்னிடத்தில் அன்புடையவராக விருக்கின்றேம் என்று எண்ணி இவ்வாறு செய்ய நினைத்தாயோ? அடேபாவீ! உன்னிடத்துச் சிறிதேனும் நன்றியறிவென்பதில்லையே! இழியநாயுந் தன்னைக்காப்பாற்றும் எசமானனிடத்து எவ்வளவு நன்றியறிவுடையதாயுளது! நீ நாயினுங்கடையனே! துஷ்டா! எம் தேயத்தினின்றும் இப்பொழுதே புறப்பட்டுச்செல். இனியொருகணமேனும் இங்கிருப்பையேல் எம்கோபத்திற்குப் பாத்திரனாவாய். பின்னும் உன் உயிர் தங்குவது மிகவும் அரிது. பாதக! ஒழி உடனே!—யாம் செல்கின்றேம். [நிஷ்கிரமித்தல்.

**சுதனன்** :—இவ்விதம் அவமானமடைந்து வருந்துவதினினும் இறத்தலே மிகவும் நலம். ஆம், இறத்தலென்றால் என்னை? உயிரினின்றும் உடலைப்பிரித்தலே! மல்லிகையே என் உயிர். அவளினின்றும் நீங்குதலே இறத்தல்! என்செய்வது? இவ்விடத்திற்றானேயிருந்து வீரேந்திரனால் இறத்தலே மிகவும் நலம்.—சீ! உயிருடன்கூடிச் சிலகாலமிருப்பின் என்றேனும் ஒருகால் மல்லிகையையடையலாம்.



நம்பலென்பதுவே நசையுநரூன்றுகோல். அன்றிக்காலமென்பது கறங்குபோல்வரும். கீழதுமேலாம். மேலது கீழாம். யான்செல்கின்றேன். (பரிக்கிரமித்தல்)

**சுகேசனும் புஷ்பகனும் பிரவேசித்தல்.**

**சுகேசன்** :—புஷ்பகா! சுகுணனெங்கே? பார்.

**புஷ்பகன்** :—அதோ அவர்போகின்றார்.

**சுகேசன்** :—சுகுண!—சுகுண!!—

**சுதனன்** :—யான் சுகுணனல்லேன்.

**சுகேசன்** :—பின்யாவன்?

**சுதனன்** :—ஒருவனுமல்லேன்.

**புஷ்பகன்** :—ஒன்றுமல்லாதவன் பேசுவானே? இதுபிசாசுதான். சந்தேகமேயில்லை. இவ்வாளால் வெட்டட்டுமா?

**சுகேசன்** :—சீ! புஷ்பகா! சும்மாவிரு.

**புஷ்பகன்** :—என்ன ஐயா ஒன்றுமல்லாததை யான்வெட்டினாலென்ன?

**சுகேசன்** :—நண்பா! சுகுண!

**சுதனன்** :—யான்பட்டதுன்பம் என்னையொன்றும் செய்யச் சொல்லவில்லை.

**சுகேசன்** :—ஆயின் நண்பா! சுகுண! யான்கூறப்போகின்ற விடயமும் மிக்கதுன்பம் விளைக்குமாதலால் யான் ஒன்றுங்கூறேன்.

**புஷ்பகன்** :—ஐயா! நீங்கள் நாட்டினின்றுந் தூரத்தப்பட்டீர்களென்று பறையறைந்தார்கள்.

**சுகேசன்** :—சுகுண! என்னினின்றும் மல்லிகையினின்றும் நீ தூரத்தப்பட்டனை. யாங்கள்செய்த தீவினையை யென்னென்பேம்!

**சுதனன்** :—நீ கூறியது முன்னரே எனக்குத்தெரியும். என் காதற்கிழத்தி மல்லிகை யிவ்விஷய மறிவாளோ?

**சுகேசன்** :—அறிவாள். அறிந்தென்செய்வாள்? முத்தென்ன அவள் தாமரைபோன்ற கண்ணினின்றும் பெருக்கிய கண்ணீரைக்கடலுக்குவமை யுரைக்கலாம். அவள் தந்தையிடஞ் சென்று உன்னைத்துரத்தலாகாதென்று தன்னாற்கூடியவரையுங் கேட்டுப்பார்த்தாள். அரசன் ஒரே பிடிவாதமாய் இருக்கின்றான். அவளையுங்கோபித்துக் கொண்டானும்.

**சுகுணன்** :—நண்பா! இனியொன்றும் இப்பாவி செவியிற் போடாதே. யான்போகின்றேன்.

**சுகேசன்** :—சுகுண! இதற்காக நீவருந்தாதே. நம்மூருக்குச் சென்று அடிக்கடி கடிதம் எழுதுவாய். நான் மல்லிகையிடம் உன்கடிதங்களைச் சேர்ப்பிக்கின்றேன். புஷ்பகா! நீ சென்று பிரதாபனைக் கிழைக்கோபுர வாயிலில் வரச்சொல். யாங்கள் போகின்றோம். [நிட்கிரமித்தல்.

**புஷ்பகன்** :—ஐயோ! போரினுங் கொள்ளிவைத்து மார்பினு மடித்துக்கொள்கின்றானே! இனி இவனிடத்திருக்கக்கூடாது. காதல் என்னவெல்லாமோ செய்யச்சொல்கின்றதே! யான் திரிசிரபுரத்துக்குச் சென்று விஜயையம்மையிடம் இவ்விடம் நடக்கின்றதைத் தெரிவிப்பேன். [நிட்கிரமித்தல்.

## ஏழாங்களம்.

இடம்: தஞ்சை யரண்மனையிலு
லோசனை மண்டபம்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: வீரேந்திரன், சுகேசன்.

**வீரேந்திரன்** :—சுகேசா! உன்தேயத்தோன் ஊரைவிட்டொழிந்தானோ?



**சுகேசன்** :—சென்றான். அவனைச் சிறிது தூரம் வழிவிட்டு வந்தேன்.

**வீரேந்திரன்** :—நமது புத்திரி அவன்பொருட்டுமிகவும் வருந்துகின்றாள். அதற்கு என் செய்வது?

**சுகேசன்** :—காதல்கொண்டவளன்றோ? சிலகாலம் விசனப்பட்டுக்கொண்டுதானிருப்பாள். சிலநாட்களில் மறந்துவிடுவாள். அவள் மனத்தின்கண் பனியாலாய வடிவம் பரிதியின் உதயத்தாற் சிறிது காலத்திற் கரைந்துபோய்விடும்.

**வீரேந்திரன்** :—அவள் நேற்றுக் கூறியவற்றை யோசிக்கின் மறந்து விடுவாளென்று எமக்குத் தோன்றவே யில்லை. சுகேசா! எம் குலதெய்வம் நீ யல்லையோ? இனி நீ எம் தநயை வருந்தாதிருக்கும் உபாயத்தைச் சொல்.

**சுகேசன்** :—மகாராஜ! சுகுணனைப் பற்றி யாராவது தூஷித்தல்வேண்டும். அப்படி யவனை மகாதுர்க்குணமுடையவனென்று பல்வேறுதிறத்தால் இழிவுபடுத்தினால் கட்டாயமாய் அவள் அச்சுகுணன்மீதுகொண்டகாதலை மறந்துவிடுவாள்.

**வீரேந்திரன்** :—அவ்வாறு நாம் தூஷிப்போமாயின் அது பகைமை பற்றியே யென்றன்றோ நினைப்பாள்?

**சுகேசன்** :—ஆம். அவனது பகைவனைக் கொண்டு வைதாலல்லவோ அப்படி நினைப்பாள்? அவனது நண்பர்களைக் கொண்டு வைதால் அவ்வாறு எண்ணுவதற் கிடமே கிடையாது.

**வீரேந்திரன்** :—இவ்வளவு உபகாரஞ் செய்த நீயே அவ்வுபகாரத்தையும் மேற்கொள்ளல் வேண்டும்.

**சுகேசன்** :—அவனது உயிர்நண்பனாகிய யான் அவ்வாறுசெய்தல் நன்றன்று. ஆயினுந் தாங்களெவ்விதங் கட்டளையிடுகின்றீர்களோ அவ்விதமே செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**வீரேந்திரன் :**—நீ அவனது உயிர்நண்பனுயிருத்தல் பற்றி யன்றே யாம் அவ்விதம் செய்யுமாறு விரும்புகின்றேம்?

**சுகேசன் :**—அப்படியாயின் தங்கள் கட்டளைப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

**வீரேந்திரன் :**—சுகேசா! முன்னரே நீ வேறொரு மாதை விரும்பி யிருக்கின்றாய் என்று சுகுணன் எம்மிடத்துக் கூறி யிருக்கின்றான். ஆகையால் நீ தடையின்றி நம் புத்திரிபாற் சென்று அவள் துக்கத்தை மாற்ற முயலல் வேண்டும்.

**சுகேசன் :**—மகாராஜ! என்னாற் கூடியவரைக்கும் பிரயாசைப் படுகின்றேன்.

**வீரேந்திரன் :**—நண்பா! யாம் போய்வருகின்றேம்.

[நிட்கிரமித்தல்.

**சுகேசன் :**—இதுவரையும் யாம் விரும்பிய வண்ணமே முடிந்தது. நண்பனும் நாட்டைவிட் டொழிந்தனன். அவன் பால் மல்லிகை வைத்த காதலும் தேய்பிறைபோல என்றன் நேசமொழியால் தேய்ந்துவிடும். அவன் உண்மை யுருவுடன் இனிச் சண்டையிட வேண்டியதில்லை. அவன் சாயையுடன் போர்புரிவதோ வொரு கஷ்டம்? மன்னன் வீரேந்திரனும் தன் புத்திரிபால் எச்சமயத்துப் போகவேண்டுமாயினும் போம்படி உத்தரவளித்து விட்டான். சுகுணன்றன் சாயையும் மல்லிகையினது மனத்தினின்று ஒழியுமாயின் என்னைப்போற் பாக்கியவந்தன் இனி எவரும் இல்லை. நட்புங் காதலும் எதிர்த்துப் போர்புரியிற் காதலன்றோ வெல்லும்! இஃது உலக வியற்கையேயாம். காதலித்தபொருளைக் கிட்டுதற்குத் தகுந்த உபாயம் செய்வோம். [நிட்கிரமித்தல்.

மூன்றாமங்கம் முற்றிற்று.

# அங்கம் - ௪.

## முதற்களம்.

| | |
|---|---|
| இடம்: | தஞ்சையருகில் ஒருகாடு. |
| காலம்: | மாலை. |
| பாத்திரங்கள்: | சிலதிருடர். |

**முதற்றிருடன் :**—அண்ணே! யாரோ ஒருத்தன் வாரான்.

**இரண்டாந்திருடன் :**—தம்பீ! நூறு பயண்டாலும் வரட்டும். அவுகெல்லாருக்கும் நான்ஒருத்தெதன்போதுமில்லே.

**மூன்றாந்திருடன் :**—பத்துநாளாச்சு அண்ணே! ஒருகாசுமில்லே அம்படலே.

**முதற்றிருடன் :**—அண்ணே! ரெண்டுபயக இல்லே வாரான்.

**இரண்டாந்திருடன் :**—ஆனா நல்லவேட்டைதான் இன்னிக்கு!

சுகுணனும் பிரதாபனும் பிரவேசித்தல்.

**மூன்றாந்திருடன் :**—யாரங்கே போறது? நில். கையிலே வச்சுக்கிட் டிருப்பதைப் போடு.

**பிரதாபன் :**—ஐயா! திருடர்கள்போலத்தோன்றுகின்றனரே.

**சுகுணன் :**—இன்னும் எத்தகைய துன்பந்தான் வரப்போகின்றது? விதியை வெல்லவுங் கூடுமோ?

**இரண்டாந்திருடன் :**—என்னவே! சும்மா நிக்கிறே. போட்றையா? இல்லாட்டி வுடுவேன் குத்து.

**சுகுணன் :**—சிநேகர்காள்!

**முதற்றிருடன் :**—நாங்கசெநேகிதமல்ல. ஐயா! உன்பகையாளி.

**மூன்றாந்திருடன் :**—சும்மா இரப்பேன். அவன் சொல்றதைக் கேக்கலாம்.

**முதற்றிருடன்** :—அண்ணே ! நேரமாகுது. எவனும் வரப்போறான். அதுக்குத்தான் அவன் நேரம் போக்கலாம் எண்டு பார்க்கிறான். தெரியுதில்லே ?

**மூன்றாந்திருடன்** :—அண்ணே ! இவன் நல்ல மனுசனாட்டமிருக்கிறான். கொஞ்சஞ் சும்மாரு. என்ன சொல்றான் ? கேட்போம்.

**சுதனன்** :—நண்பர்காள் ! என்னிடத்திற் பொருளொன்றுமில்லை. என் உடை யொன்றுதான் இருக்கின்றது. வேறு எந்தக் கந்தை உடையேனுங் கொடுப்பீர்களாயின் இதையுங் கொடுத்து விடுகின்றேன்.

**இரண்டாந்திருடன்** :—நீ எங்கிட்டுப் போறே ?

**சுதனன்** :—திரிசிரபுரத்துக்குப் போகின்றேன்.

**முதற்றிருடன்** :—எங்கிட்டிருந்து வாறே ?

**சுதனன்** :—தஞ்சையிலிருந்து வருகின்றேன்.

**மூன்றாந்திருடன்** :—எத்தினி நாளங்கனே யிருந்தே ?

**சுதனன்** :—யான் ஒன்றரை வருஷமாக அங்கு இருந்தேன், என் தௌர்ப்பாக்கியம் என்னைத் தொடராதிருக்குமாயின் அவ்விடத்திற்றானே யின்னு மிருந்திருப்பேன்.

**முதற்றிருடன்** :—ஊரைவிட்டுத் துரத்திவிட்டாகளா ?

**சுதனன்** :—ஆம். துரத்திவிட்டார்கள்.

**மூன்றாந்திருடன்** :—என்ன குத்தஞ் செஞ்சே ?

**சுதனன்** :—ஒருவனுடன் சண்டையிட்டு அவனைக் கொன்றுவிட்டேன். அது காரணத்திற்காக என்னைத் துரத்திவிட்டார்கள்.

**இரண்டாந்திருடன்** :—இதுக்குத்தானா அப்படிச் செஞ்சாக. நல்ல ராசா இங்கிறேன். ஞாயமே கிடையாது. அஞ்ஞாயக்காரப்பய.



**முதற்றிருடன்** :—இவேன் நல்ல வீரம் போலே யில்லே இருக்றான். அண்ணே ! இவனெ நம்ம எசமானாவச் சுக்கிட்டா என்ன ?

**இரண்டாந்திருடன்** :—எனக்கும் அப்படித்தான் தோணுது.

**மூன்றாந்திருடன்** :—நல்ல யோசனை அண்ணே !

**இரண்டாந்திருடன்** :—நீங்க என்ன சொல்றீய ? எங்க எசமானா இருப்பியளா மாட்டியளா ?

**சுதனன்** :—மாட்டேனென்றால் ?

**மூன்றாந்திருடன்** :—கொண்டுபோடுவோ மில்லே.

**இரண்டாந்திருடன்** :—என்ன சொல்றே ?

**பிரதாபன்** :—ஐயா ! திருட்டுத்தனமும் ஒருவிதத் தொழில் தானே. அதுவுந் தெரிந்துகொள்ளவேண்டியதுதான். 'களவுங்கற்று மற' என்று சொல்லியிருக்கின்றதன்றே !

**சுதனன்** :—அடே மூடா ! வாயை மூடு. (திருடர்களைப் பார்த்து) ஆனால் உங்கள் தலைவனாயிருக்கின்றேன். ஆயின் நீங்கள் பெண்களையும் பேதை மனிதரையும் வருத்தக்கூடாது. அப்படி யிருக்க உங்களுக்கு இஷ்டமாயின் யான் உங்கள் எசமானாக இருக்கின்றேன்.

**மூன்றாந்திருடன்** :—நாங்க இது வரைக்கும் அப்படித்தானே செஞ்சுக்கிட்டு வாரம். இன்னமும் அப்படியே செய்வம். எங்களுடன் வாங்க. எங்க பணத்தை யெல்லாம் காட்றோம்.

[நிட்கிரமித்தல்.

## இரண்டாங்களம்.

இடம்: தஞ்சையரண்மனையி லொருசார்.

காலம்: மாலை.

பாத்திரம்: சுகேசன்.

**சுகேசன்** :—நமது புதிய காதலால் வரும் இடையூறுகள்

இரண்டுள வன்றே! நம துயிர் நண்பனுக்குத் துன்ப மியற்றி ஊரைவிட்டுந் துரத்திவிட்டோம். நமது காதலி விஜயையினை விடவேண்டுவது தான். மல்லிகையோ மிக்க சிருங்கார ரஸமுடையவள். விஜயையின்மீது எவ்வளவுகாதல் கொண்டிருந்தோமோ அவ்வளவு காதலையும் மல்லிகையின்மீது மாற்றி விடலாம். விஜயை யென்னும் பெயருக்குமாறாக மல்லிகையை வைக்கவேண்டுவது தான். மல்லிகையைப் பார்த்தபோதே என் உடல்புளகிக்கின்றது. அவ்வாறாக, அவள் மெய்யைத்தீண்டப்பெறுவமேல் என்ன இன்பம் அடையலாகும்! 'இருந்துங்கெடுத்தான் செத்துங் கெடுத்தான் திருவாழத்தான்' என்றாற் போல இருக்கும்பொழுது அவனை வசீகரித்து விட்டான். இவ்விடத்தினின்று சென்றும் யான் விஜயையைக் காதலுற்றவன் என்று கூறிச்சென்றான். யான் மல்லிகையிடத்து 'உன்னைக்காதலுறுகின்றேன்' என்றவுடனே 'நிலையற்ற புத்தியையுடையவன் நீ' என்கின்றாள். என்செய்வது? (பாடுதல்)

மல்லிகைமாதோடென்றுவார்த்தைசொலும்போதன்னாள்
வில்லென் புருவ மிகநெரிய—வொல்லெனவே
செந்திலக மென்முன் றெறித்ததுதா னெற்பிடர்கொண்
டேர்து கருத்தினிற்போலும். (௩௪)

பின்னும் என்னுற்றான் தன் காதலன் ஊரை விட்டுத் துரத்தப் பட்டான் என்று எண்ணுகின்றாள் போலும். சுகுணனைத் தூஷிப்பேனாயின் உடனே எழுந்துசெல்கின்றாள். இப்படித்தான் அவள் மனத்தைக் கவர்வதென்று தோன்றவில்லையே! ஆயினும் முயற்சி திருவினையாக்கு மன்றே! யான் அவள் வீட்டின் முன் போய் என்குறிப்பை யொருவாறு பாடுகின்றேன். அதற்கென்ன செய்கின்றாளோ பார்க்கலாம். (பாடுதல்)



அனையின் மெழுகென் றழியும் மென்றன்
மனமார் மையன் மதியா னொருபெண்
மனமார் மையன் மதியா ளவடன்
மனதின் வன்மை மதிப்பா ரெவரே? (௩௫)

நகையென் மலரின் னடுவென் மனமா
மிசைசெய் யனிநன் கிலையின் றதுவே
யிசைசெய் யனிநன் கிலையின் றதனாற்
பசையா ருளென் பகலோய் வருவாய்! (௩௬)

விஜயை மாறுவேடம்பூண்டு பிரவேசித்தல்.

விஜயை :—(ஆண்பேன காவலனை நோக்கி) ஐயா! இங்குச் சுகேசரென்ற வொரு மகாபுருடர் திரிசிரபுரத்தினின்று வந்திருக்கின்றாரோ? அவர் இருப்பிடம் எங்கே? உமக்குத் தெரியுமோ?

காவலன் :—அந்தப்புர வாயிலின் உட்கார்ந்திருந்தனர். உள்ளே போகலாம்.

விஜயை :—யான் அவ்விடம் போகவில்லை. அவர் இப்படித்தானே வருவார்?

காவலன் :—ஐயா! அவர் இப்படித்தான் வரவேண்டும். இதுதான் வழி. இதுவன்றி வேறுவழி கிடையாது.

வி[illegible] :—ஆயின் யான் இவ்விடமே யிருக்கின்றேன். (தனக்குள்) புஷ்பகன் கூறிய வெல்லாம் உண்மையாயிருக்குமோ? நமது காதலர் வேறு ஒரு மாதையுங் கனவிலும் நினைப்பதில்லை யென்றாரே! அவன்கூறியது உண்மையல்லாவிடின் அவர் என் மல்லிகையினிடஞ் செல்ல வேண்டும்?—சகி! பத்மாவதி! நீ யான்வரும்போது கூறியது உண்மையாயிற்று. உன் புத்திசாலித்தனத்திற்கு என்னசெய்யப் போகின்றேன்? யான் வழியிற்பட்ட கஷ்டமெல்லாம் வீணாயினவே! யான் அடையலாமென்ற

காதலரும் என்னுடையவரல்லர்.—எப்பொழுதும் உயர்குடியோர்க்கேயுறுகண் அதிகம். ஆம். ஆம். உண்மையே. மிகவுமுயர்ந்த மரமன்றோ காற்றினால் முதலிலாடி முறியும். பெரியகடலுக்கன்றோ அதிக அலைகள். சிறுசெடிகள் காற்றினலைசைவுண்டு முறிந்துபோமா? சிற்றருவிகட்கு அலையேது?—பாழுந்தெய்வகதியால் இக்காதலுக்கு என் மனமுமுடைந்ததே! என்செய்வது?—காட்டிலிருப்பினும் குகையிலிருப்பினும் காதல் மனிதரைவிட்டு அகலுமோ? ஒருகாலும் நீங்காது.—மன்மதன் ஆராய்ந்து அம்புவிடுகின்றானிலன். ஏதோமதயானை யொப்பக் கைக்கு வந்தவாறு அம்புகளை எய்கின்றான்.—அவன் உருவத்தைக் கண்டவன்றே காதல் கொண்டேன். மரப்பாவையின்மீது ஆசைவைக்கவேண்டிய பருவத்தும் காதல் கொண்டேனே!—தான் 'அடைய விரும்பும் பொருள் கஷ்டப்பட்டபிறகு கிடைப்பினன்றி அதன் அருமை தெரிந்து அதனைச் செல்வமாய் வைத்திரான்' என்று நினைத்து அவனை என்னாலானமட்டும் காதலால் வருந்தச் செய்தபிறகு தானே என்காதலையும் வாய்விட்டு விளம்பினேன். விரகாக்கினிக்குக் காலதாமத மாகிய விறகு இல்லாவிடிற் சீக்கிரமவியும் என்று உணர்ந்தே அவன் கூறும் ஆசைமொழிகளை யற்பமொழியென இருமதி கவனித்திலேன். இறுதியில் என்ன பயனை யடைந்தேன்?—'விலக்கரிதாய விதியினால் விளையும் விளைவை யார் மேதினி யறிவார்?'—தெய்வமே! இப்படியும் என்னைத் தவிக்க வைத்தனையே! யான் என்செய்வேன்? ஒன்றுஞ் செய்யத்தோன்ற வில்லையே! (பாடுதல்.)

சோற்றநின்ற னாசைமொழி சுருதியென நம்பியென்ற
னுற்றவரை விட்டேகி யுனையடைந்தேன் பற்றுடைய
நற்றலைவன் கற்புடைய நங்கையர்க்குப் பற்றென்று
சற்றுமென்மீ திரக்கமிலாத் தலைவாவென் றலைவாவோ!



காதலுற்றவர்க்குக் கண்களில்லை. ஆதலால் என்னை விஜயை யென்று அறியமாட்டான். நான் வேறுபெயரும் பூண்டு அவனிடம் வேலையாளாக வமர்கின்றேன். புஷ்பகனை என் தந்தையால் அனுப்பியபடியாற் கட்டாயமாய் அவன் என்னையொரு வேலையாளாக வமர்த்திக்கொள்வான். அதற்குச் சந்தேகமே யில்லை. அவன் மனத்தைத் தெளிவாக அறிந்த பிறகு நான் வெளிப்படலாம். அப்புறம் தெய்வம் விட்டவழி விடுகின்றது.

சுகேசன் பிரவேசித்தல்.

**விஜயை**:—ஐயா! வந்தனம். யான் உங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள வந்திருக்கின்றேன்.

**சுகேசன்**:—அஃதென்னை? சொல் சீக்கிரம். யான் போகவேண்டி யிருக்கின்றது.

**விஜயை**:—யான் கும்பகோணத்தினின்றுந் தங்களிடம் வேலையாளாக அமரலாமென்று வந்திருக்கின்றேன். தாங்கள்மறுத்தீர்களாயின் எனக்குவேறுகதிகிடையாது. இவ்வூரில் எவரையுந் தெரிகிலேன்.

**சுகேசன்**:—(தனக்குள்) இப்பயலைப் பார்த்தால் நற்குலத்தவன்போலத் தோன்றுகின்றான். இவனை நம் மல்லிகைக்குக் கடிதம் முதலியவை யனுப்பத் தூதாக வைத்துக் கொள்ளலாம். (விஜயையைப்பார்த்து) உன்பெயரென்னை?

**விஜயை**:—என் பெயர் 'மதிமுகன்' என்பார்கள்.

**சுகேசன்**:—ஆயின் என்பின் வா. [நிட்கிரமித்தல்.

## மூன்றாங்களம்.

இடம் : தஞ்சை யரண்மனையின் மல்லிகையினறை.
காலம் : மாலை.
பாத்திரங்கள் : மல்லிகை, சுகேசன், விஜயை.

**சுகேசன் :**—அம்மா! மல்லிகே! சுகேசன் வந்தனம் புரிகின்றேன்.

**மல்லிகை :**—நேற்றையதினம் பாடியவர் நீர்தாமோ? இப்படியெல்லாம் நீர்செய்வதில் உம்முடைய எண்ணம் என்னையோ? அதனை அறியவிரும்புகின்றேன்.

**சுகேசன் :**—உன்னுடைய விருப்பத்தை யானடையவேண்டும் என்ற எண்ணத்தினால்——

**மல்லிகை:**—சுகேசா! என்விருப்பத்தைக் கூறுகின்றேன். கேள். நீ யினியிவ்விடம் வாலாகாது. உன்முகத்தில் விழிப்பதினும் பெரும்பாதகம் வேறெதுவுமில்லை. உன்றன் வெறும்பாடல்களாலும் வார்த்தைகளாலும் யான் மயங்கிவிடுவேனென்று நீயொருபோதும் எண்ணவேயெண்ணாதே. நீ முன்னமே யொருபெண்ணைமயக்கி யுன் வலையிற்படுத்தி அவளை யிப்பொழுது தவிக்கச்செய்கின்றாய். பெண்பழியுற்றவன் முகாலோபமுஞ் செய்யலாகாது. இனி நீ யென்னைக் காணவேண்டுமாயின் இப்பொழுதே யுன்றன் காதலியினிடஞ்சென்று அவள் காலில் வீழ்ந்து நீ யவளைத்துறந்து வேறொருபெண்ணை மனத்தில் நினைத்ததற்காகப் பொறுத்தருளும்படி வேண்டு. உன்னுடன் இதுகாறும் யான்வார்த்தையாடிய பாவத்திற் கென்னசெய்கிறதென்று யோசித்துக்கொண்டிருக்கின்றேன்.



**சுகேசன் :**—மல்லிகே! யாதொருபெண்மீது காமுற்றிருந்தது உண்மையே. ஆயின் அவளிறந்துவிட்டாள்.

**விஜயை :**—(தனக்குள்) என்னபொய்கூறுகின்றான்! அவளோ இறந்தாள்? துக்கத்தினிறந்தாளாயினும் இன்னுமவள் உயிர் நீங்கிலது!

**மல்லிகை :**—சுகேசா! நீ உன் உயிர்நண்பனெனக்கூறுஞ் சுகுணனையன்றி வேறெவரையும் மணப்பேனல்லேனென்று யான் அன்றையதினமே யுன்னிடத்திற் கூறினேனே. உன்னைப்போல மாறுந்தகைய புத்தியுடையவளல்லேன் யான். எப்பொழுது யான் சுகுணனை மணப்பலென்றெண்ணினேனோ அப்பொழுதே யானவன்றன்மனைவியாயினேன். நிகேதன் மனைவியுன்றங்கைக்குச் சமானமானவளென்று அறியாயோ? நிகேதனுக்குத் துரோகஞ்செய்யலாமோ?

**சுகேசன் :**—அச்சுகுணன் இறந்துவிட்டானென்று கேள்விப்பட்ட பிறகுதானே யான் உன்னைக்காதலுறுகின்றேன்.

**மல்லிகை :**—ஓ! சாகுருவியே! அப்படித்தானிருந்தாலும் யான் துவிழந்தவளாகின்றேன். அவ்வாறிருக்க, நீயென்னை மணப்பதாக எண்ணுவதினும் மிக்கமடமை யென்னையிருக்கின்றது? மற்று, நீகூறுவது உண்மையாயின் தீயிற்பாய்ந்து யானுயிருமிழந்து விடுவேன்.

**சுகேசன் :**—அப்படி நீயிறந்தாலும் பிருந்தையின் சாம்பரிற் புரண்ட திருமாலையொப்ப உன்சாம்பரில்விழுந்து புரண்டேனும் இன்பமடைவேன். அதனுடனுயிருந்துறப்பேன்.

**மல்லிகை:**—என்மீது எவ்வளவு காதலுற்றிருக்கின்றாயோ அவ்வளவு அவள்மீதுங் காதலுற்றுத்தானிருப்பாய். உன் கூற்றின்படி அவளிறந்துவிட்டபடியால் நீயவள் சாம்பரில் முன்னர்ப்புரண்டு உயிர்விடு. அதன்பின் அஃதுண்மையாயின் யானுன்னை மணக்கின்றேன்.

**விஜயை** :—(தனக்குள்) மல்லிகே! நீயன்றோ பெண்மணி!

**சுகேசன்** :—மல்லிகே! உன்மீதுள்ள காதல் அவண்மீதெனக் கில்லை.

**மல்லிகை** :—அவளை மயக்கி வசீகரிக்கும்போதும் இப்படித் தான்கூறியிருப்பாய்.

**சுகேசன்** :—அம்மா! நீ யவ்வளவு என்மீது வெறுப்புற்றிருப்பையேல் உன்படமொன்றை யெனக்கு அளிப்பாய். அதையாவது பார்த்துக்கொண்டு என்காலத்தைக்கழிப்பேன். என்னுயிர் வாழ்க்கையாலடையக்கூடியபயன் இனி யேதுமில்லை.

**மல்லிகை** :—சுகேசா! எது வொருபயனுமடையவில்லையென் கின்றாயே! ஓருயிர் நண்பனை யூரைவிட்டுத்துரத்தியாய் விட்டது. அதன்பின் அவன்றன் ஆருயிர்த்தலைவியையுங் கைப்பிடித்திழுக்க முயன்றாய் விட்டது. இன்னுமொரு பெண்ணைத்தவிக்கச் செய்தாய்விட்டது. இவைகளைத் தவிர என்ன பயன்றான் இன்னும் அநுபவிக்கவேண்டுமென் றெண்ணிக்கொண்டிருக்கின்றாய்?

**விஜயை** :—(தனக்குள்) மல்லிகே! யானுன்னைப்போற்பெண்ணுருவத்துட னிருப்பேனாயிற் கட்டித்தழுவி முத்தமிடுவேன்.

**சுகேசன்** :—மல்லிகே! இனியவ்வாறு என்னைப்பற்றிக் கூற வேண்டாம். உன்படமொன்றைக் கொடுக்கவேண்டும். அச்சாயையை யுயிரெனவெண்ணி யொருவாறு சந்தோஷப்படுவேன். அப்படிக்கொடாவிடின் நீயுன்றன் தளிர் போன்ற பாதத்தாலுதைத்துத் தள்ளினும் இவ்விடம் விட்டு ஏகேன். அன்றியும், (பாடுதல்)

முல்லையைக் குழலிற் சூடிய மடவார்
மோப்பவுங் குழையணிச் சுந்தைச்



கல்லென நோவும் பதத்தினு லசோகைக்
கருணையி னுதைப்பவுந் தளிர்த்திட்
டொல்லென மலர்தற் பான்மைபோல் வாய்விட்
டொலிசிலம் புற்றுமென் பாத
மல்லிகாய் நின்சே வடியினு லுதைப்பின்
மயிர்பொடித் தகமலர் வேனால்! (௬௮)

**விஜயை** :—(தனக்குள்) உருவத்தைச்சாயையாக்கியவனக்குச் சாயையை யுருவாக்குதல் கஷ்டமன்று.

**மல்லிகை** :—நீ இனி யென்முகத்தில் விழிப்பதில்லை யென்று உரைப்பாயாயின் யான்கொடுக்கின்றேன்.

**சுகேசன்** :—அப்படியே. என்வேலையாளையனுப்புகின்றேன். கொடுத்தனுப்பவேண்டும்.

**மல்லிகை** :—அங்ஙனமே யாகட்டும்.

[சுகேசனும் விஜயையும் நிட்கிரமித்தல்.

அடே! கொலைப்பாதகா! யான் நினைத்தனவனைத்தும் உண்மையாகவே முடிந்தன. நீயன்றிப் பின்னர் யாரே யென்பிராணநாதரை யிவ்வளவு சீக்கிரத்தி லூரைவிட்டு அகற்றியிருப்பார்கள்? யான் இனியொரு நாளும் உன் முகத்தில் விழிப்பேனல்லேன்.—ஓ! யானினிமேற் சிறிதேனுந் தாமதியாது என்னின்னுயிர்க்குரிசிலை யடையத் தகுந்த வுபாயஞ்செய்வேன். (பாடுதல்)

என்று சுகுணனை யெய்திக்
குன்று நிகர்புயங் கூடித்
தின்று சுகக்கடலேறி
மன்றல் வினைசெய்து வாழ்வேனோ? (௬௯)

[நிட்கிரமித்தல்.

## நான்காங்களம்.

இடம்: தஞ்சை யரண்மனையி லொருசார்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: சுகுணன், விஜயை.

சுகேசன்:—மதிமுகனன்றோ வுன்பெயர்? உன்முகக்குறியாற் புத்திசாலி போலத் தோன்றுகின்றாய். ஆகையால் நீ யொருமுக்கியமானவேலையெனக்குச்செய்தல்வேண்டும்.

விஜயை:—தங்கள் கட்டளைப்படியே செய்யச் சன்னத்தனா யிருக்கின்றேன்.

சுகேசன்:—மதிமுகா! உன்முகத்தைக் கண்டவுடன் உன்னை நற்குலத்தவனென்றே மதித்தேன். யான் நீ செய்யுமாறு சொல்லப் போகின்ற காரியத்தை வெகுபுத்திசாலித் தனத்தோடுஞ் செய்யவேண்டும். என்னவோ? உன் முகத்தைப் பார்த்தவளவில் யான் முன்னர் நேசித்த மாதின் ஞாபகம் வருகின்றது.

விஜயை:—தாங்கள் முன்னர் நேசித்தகாதலி யின்னு முயிருடனிருக் கின்றார்களோ?

சுகேசன்:—அஃதென்னையோ? எனக்குத் தெரியாது. யானிப்பொழுது அவளை நேசிக்கின்றிலேன். ஆகையால் அவள் கொடுத்த இந்த மோதிரத்தை யிந்நிருபத்துடன் மல்லிகையிடங்கொடுத்து அவளெனக்குவாக்குத்தத்தஞ் செய்த பொருளைக் கொடுக்கும்படி யான்கேட்டதென்று சொல்.

விஜயை:—ஐயோ!

சுகேசன்:—என்ன? 'ஐயோ' என்கின்றாயே!

விஜயை:—யான் அவர்களைப் பற்றி யிரங்கவேண்டி யிருக்கின்றது.



சுகேசன்:—நீயே னிரங்க வேண்டியது?

விஜயை:—யான் கூறுவதைப்பற்றித் தாங்கள் கோபங் கொள்ளவில்லை யென்றீர்களாயிற் கூறுகின்றேன்.

சுகேசன்:—யானேன் கோபங் கொள்ளவேண்டும்? சொல். அதைப்பற்றி யொன்றும் நீ பயப்படல் வேண்டாம்.

விஜயை:—ஏனெனின், தாங்க ளெப்படி மல்லிகை யம்மையைக் காதலிக்கின்றீர்களோ அப்படியே தாங்கள் கூறிய அவ்வம்மையுந் தங்களைக் காதலித் திருப்பார்கள். தாங்கள் காதலிக்கும் மல்லிகையோ உங்களை விரும்பவில்லை. தங்களை விரும்பிய அவ்வம்மையைத் தாங்கள் விரும்புகின்றீர்களில்லை. இவ்வாறு மையல் மாறுபாடா யிருக்கின்றதே யென்றுதான் 'ஐயோ' என்றேன்.

சுகேசன்:—சரிதான். நீ சென்று அம்மோதிரத்தையுங் கடிதத்தையும் மல்லிகையிடங் கொடுத்து. அவள் வாக்குத்தத்தஞ் செய்த பொருளை வாங்கிக்கொண்டு நீயென் விடுதிக்குச் சீக்கிரமாகவந்து சேரவேண்டும்.

விஜயை:—அப்படியே. [சுகேசன் நிட்கிரமித்தல்.

ஏ! சுகேசா! இத்தகைய தூதுசெல்ல எத்தனை பெண்களொருப்படுவார்கள்? ஆகா! உன் ஆட்டுமந்தையை மேய்க்க ஒரு நரியையன்றோ ஏற்படுத்திவிட்டாய்! ஐயோ! பாவம்!—யானேன் அந்தப்பாவிக்காக இரங்கவேண்டும்? என்னை யவன் பாராட்டுகின்றிலன். ஏனோ யானவனை யொருபொருட்டாகவேனும் மதிக்கவேண்டும்? இம்மோதிரம் யானவனுக்குக் கொடுத்தது. யானேயிதை யவன்காதலுறும் வேறொரு மாதிற்குக் கொடுக்கப்போகின்றேன்!—ஓ! என்ன தௌர்ப்பாக்கியமுடையேன் யான்! (பாடுதல்)

ஏனோவிவ் வேலை வியற்றுகிற்ப வின்னலெலாம்
யானு வறுபவிப்பா யின்னடைப் பிறந்தேனை த்

தானுகக் கோலத் தலைவற் கெடுத்துதவுங்
காணுர் சரியென்று கற்ருேர் கழறுவரால். (௪௦)

என்ன செய்கிறது? நாய்வேடம் பூண்டாற் குரைக்கத் தானே வேண்டும்! (பாடுதல்)

**கோட்டியளக் கிழவென்றுங் குறுணிபதக்**
**காகாத கொள்கை போல**
மட்டின்றி யவன்செயலின் கொடுமையினை
யுன்னியுன்னி வருந்தி ஞலு
மெட்டிமரம் பழுத்திட்ட பயன்போலா
மன்பின்னனை யினிப்பா ராட்டிற்
பட்டமரந் தளிர்விடுதற் பான்மையெனத்
துணிவுகொடு பகர லாமே. (௪௧)

என் மனத்திற்கு நேர்விரோதமாய் நடக்கவேண்டி யிருக்கின்றது. அவனை யிகழவேண்டியதொழியப் புகழவும் வேண்டி யிருக்கின்றது. என்னுலியன்றமட்டும் இக் காதலை வளர வொட்டாது தடுத்துவிடுகின்றேன்.

[நிட்கிரமித்தல்.

## ஐந்தாங்களம்.

இடம்: தஞ்சை யரண்மனை யந்தப்புரத்தோரறை.

காலம்: காலை.

பாத்திரங்கள்: விஜயை, மல்லிகை, கமலை.

**விஜயை**:—அம்மா! வந்தனம் புரிகின்றேன். மல்லிகை யம்மை யவர்கள் எங்கிருக்கின்ருர்கள்?

**மல்லிகை**:—அவளிடத்துன் வேலை யென்னை?

**விஜயை**:—யான் சுகேசர்தம் ஏவலாள். அவர் மல்லிகை யம்மையிடம் என்னை யனுப்புவித்தார்.



**மல்லிகை**:—சரி. கமலே! என் படமொன்று கொண்டுவா.

**கமலை**:—அம்மா! இதோ கொணர்ந்தேன்.

(படத்தை யெடுத்துக்கொணர்ந்து கொடுத்தல்.)

**மல்லிகை**:—இப்படத்தை யுன் எசமானனிடங் கொடு. 'முன்னர் நீ காதலித்த விஜயையின் உருவமே நீ வணங்கத் தக்கது' என்று யான் சொல்லியதாகச் சொல்.

[கமலை நிட்கிரமித்தல்.

**விஜயை**:—அம்மா! இக்கடிதத்தைத் தயவுசெய்து பாருங்கள். (கடிதமொன்று கொடுத்தல்) அம்மா! அக்கடிதமன்று. யான் வேறொரு கடிதத்தை யிதற்குப் பதிலாகக் கொடுத்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.

(வேறொரு கடிதங் கொடுத்தல்.)

**மல்லிகை**:—இக்கடிதத்தை யான் பார்க்கவே மாட்டேன். அவன் என்ன வெழுதி யிருக்கப் போகின்ருன்? பொய்ச்சத்தியங்கள் பல வடங்கி யிருக்கும். வேறென்ன இருக்கப்போகின்றன? (கிழித்தெறிதல்)

**விஜயை**:—அம்மா! இம்மோதிரத்தைத் தங்களிடம் அவர் தமது ஞாபகக் குறியாகக் கொடுக்கச் சொன்னுர்.

(மோதிரமொன்று கொடுத்தல்.)

**மல்லிகை**:—(மோதிரத்தைப் பார்த்து) ஆகா! இஃதென்னை விஜயையின் பெயர் பொறித்திருக்கின்றதே! இம்மோதிரம் தன் காதலி விஜயை பிரியு மமயத்துத் தனக்குக் கொடுத்ததென்று அவன் என்னிடத்தில் எவ்வளவோ பிரலாபித்துச் சொல்லியிருக்கின்ருன்! அதன் பெருமையை யவன் குறைத்தனனாயினும் யானொரு நாளும் விஜயைக்குத் தீங்கு புரியேன். அவளும் என்னைப்போற் பெண்ணல்லளோ? இந்தப் பாவியின் பொருட்டு என்ன துக்கப்படுகின்ருளோ? (மோதிரத்தை விஜயையிடங்கொடுத்தல்.)

**விஜயை** :—அவள் உங்களுக்கு வந்தனம் புரிகின்றாள்.

**மல்லிகை** :—என்ன சொல்லுகின்றாய்?

**விஜயை** :—ஒன்றுமில்லை. அந்த அம்மைக்காக யானுங்களுக்கு வந்தனம் புரிகின்றேன். என் எசமானர் அந்த அம்மைக்கு மிகவும் நன்றியற்றுகின்றார்.

**மல்லிகை** :—அவளை யுனக்குத் தெரியுமோ?

**விஜயை** :—யான் அவ்வம்மையை நன்றாயறிவேன். அவர்கள் வரும்பொழுதைப் பார்த்தயான் அநேகமுறை யழுதிருக்கின்றேன்.

**மல்லிகை** :—சுகேசன் றன்னை மோசஞ்செய்துவிட்டானென்று அவளறிவாளோ?

**விஜயை** :—அறிந்துதானிருப்பார்கள். அல்லாவிட்டால் வருந்துவதற்குக் காரணமேதுமில்லை.

**மல்லிகை** :—அவள் மிக்க எழிலுற்றவள்தானே?

**விஜயை** :—இப்பொழுதைவிட முன்னர் மிக்க அழகாகத்தானிருந்தார்கள். என் எசமானர் அவர்கள்மீது காதல் கொண்டவரையுந் தங்களைப்போல அழகுவாய்ந்திருந்தார்கள். அவர் பிரிந்ததுமுதல் அவர்கள் தங்கள் முகத்தைக் கண்ணாடியிற் பார்ப்பதே கிடையாது. இப்பொழுது என்னைப்போல இருக்கின்றார்கள்.

**மல்லிகை** :—அவள் எவ்வள வுயர மிருப்பாள்?

**விஜயை** :—என்னளவு உயர மிருப்பார்கள்.

**மல்லிகை** :—ஏ! மதிமுகா! அவள் வருத்தத்தைப் பற்றி யான் கேட்கக் கேட்க என் மனம் மிகவும் வருந்துகின்றது. யான்போய்வருகின்றேன். உன் எசமானனிடம் அப்படத்தைக் கொடுத்துவிடு. [நிட்கிரமித்தல்.

**விஜயை** :—ஏ! மல்லிகே! நீ செய்த நன்மைக்காக யானெப்பொழுது முன்னை மறவேன். என் மனப்படத்திலுன்னை



யெழுதி வைக்கின்றேன். விஜயைமீது அவ்வளவு அனுதாபப்படுபவள் சுகேசனை யொருகாலும் மதிக்கவே மாட்டாள். என்ன கண்மூடித்தனமான காதல்! இதோ இருக்கின்றது அவள் படம். யானு மித்தகைய துன்பங்களை யனுபவியாதிருந்தேனாயின் என் முகமும் அவள் முகத்திற்குச் சமானமாகத்தானிருக்கும். அவள் கூந்தலோ கட்டையாகக் குதிரைவால்போல விருக்கின்றது; என் கூந்தலோ மிருதுவாகப் படிப்படியா யிருக்கின்றது. அவளுடைய முகவடிவமோ சிறிது நீளமாயிருக்கின்றது; என்னுடைய முகவடிவமோ வட்டமாக விருக்கின்றது. அவளது நெற்றியோ சிறிது மேடாக விருக்கின்றது. எனது நெற்றியோ சமமாக விருக்கின்றது. என்னிலுமவள் அப்படி யென்ன அதிக அழகுவாய்ந்திருக்கின்றாள்? சுகேசன் எதைக்கண்டு அவள்மீது காமுற்றான்? மன்மதன் அங்கமில்லாதவனாயினனே! குருட்டுத்தன்மையாய்த் தன் அம்புகளைக் காமிகள்மீது எய்கின்றான்! (பாடுதல்)

**வேத** னுடனே பிறந்தனையால்
 விண்டு மகவு மாயினையா
லேது நினைத்துத் தீச்செயலை
 யெடுத்துக் கொண்டா யியம்புதியன்
மாதர் வாயின் விழுந்ததனுன்
 மதிக்கு முடல நீயிழந்துங்
காத லுற்ற மடவாரைக்
 காத லுற்ற மதவேளே!

**மல்**லார் புயத்தெங் கோன்வேறு
 மாத ரானைக் நாமுறும்போ
தல்லாங் களிற்றின் மிசையேறி
 யணிசேர் கருப்புச் சிலைதாங்கும்

பொல்லா மாரப் புல்லியவென்
புந்தி முயலை யிலக்குவைத்துக்
கொல்லா நிற்பக் குறித்தனையோ
குலக்கே டுடையாய் கூறுதிடால். (௬௬)

[மௌனம்.]

மல்லிகைமட்டும் என் துக்கத்திற்கு இரங்காதிருந்தாளாயின் இப்படத்தை யுடைத்து எறிந்திருப்பேன். இனிச் சுகேசன்காதல் எவ்விதமாகத்தான் முடிகின்றதோ பார்க்கலாம்.

[நிட்கிரமித்தல்.

நான்காம் அங்கம் முற்றிற்று.

# அங்கம்—௫

## முதற்களம்.

இடம்: தஞ்சை யரண்மனையின் வெளிப்புறம்.

காலம்: நள்ளிரவு.

பாத்திரம்: சந்திரசேகரன்.

**சந்திரசேகரன்:**—நமது மன்னவன் புத்திரியார்சொல்லிய சமயமிதுவே. இப்போது நாழிகை பதினைந்தாகும். ஆதலின் நான் போகவேண்டுவதுதான். நான் அவள் கூறியவண்ணமே செய்வதென் றிசைந்துவிட்டேனே! வழியில் திருடர் வளைத்துக்கொண்டாலென்செய்வது? யானோ கிழவன்; எனக்கு இப்புவியிலிருந்து ஆகப்போகின்றது ஒன்றுமில்லை. நானிறந்தாலுஞ் சனியனொழிந்த தென்னலாம். மன்னன் புதல்வி மல்லிகையோ யான் நாளும் மடியில்வைத்துச் சீராட்டி வளர்த்தவளாகின்றனளே! அவளுக்குத் தீங்கு ஏதேனும் சம்பவிக்குமாயின் என் செயவல்லேன்? என்னசொல்லியுங் கேட்கவே மாட்டேனென்கின்றாளே.—சுகுணன் எவ்விதத்திலும் நமது மல்லிகைக்குத்தக்க கணவனே. அரசன் முன்பின் அறியாது அவனைத் துரத்திவிட்டனன். நான் அவள் கூடப் போகாவிட்டால் தான் தனியாகவேனும் போய் விடுவாளாம். என்னசெய்கிறது? போகலாம்.—(யோசித்துக்கொண்டு பரிக்கிரமித்தல்) ஆமாம். எல்லாம் சரிதான். மகாராசாவுக்கு ஒரே மகள். அவளுந் தலைவனைநாடி யோடிவிட்டாளாயின் இவ்விருத்தாப்பியதசையில் வேந்தன் வீரேந்திரன் என்செய்வான்? [மௌனம்] எஃது எப்படியானாலுஞ்சரி. நாமென்னசெய்வோம்? வளர்த்த

வாஞ்சைவிடுமோ ?—பெற்றோர்க்குப் பிரியமில்லாமற் போனாலும் வளர்த்தவர்களுக்குக்குழந்தைகண்மீதுள்ள அன்பு என்றும் நீங்காது. (பாடுதல்)

குற்சித மாந்தருங் குழவியென் றாலுங் குழைவர்பெற்றோர்
விற்சிவ னென்னுந்தன் மாதின்று மன்னுள் வெறுப்பப்பிதா
வற்சல மின்றி வருத்துதல் பெற்றோர் மதிமருள்வர்
சிற்சில வேளையி னென்பது மெய்யாத் தெளிந்ததுவே.

(மல்லிகையின் விடுதியருகுசென்று) ஏ! மல்லிகே! ஏ!! மல்லிகே!! (மல்லிகை மேன்மாடத்தினின்று கைகொட்டியமர்த்தியபின் உள்ளே சென்று கீழிறங்குதல்.)

மல்லிகை பிரவேசித்தல்.

குழந்தாய்! மல்லிகே! போகத்தான் வேண்டுமா? யானோ வயோதிகன். நீ போவதனால் நிகழக்கூடிய துன்பங்களை நினைத்துப்பார்.

**மல்லிகை:**—நீ அப்படி யென்னுடன் செல்லுவதற்கு அதைரியப்பட்டால் யானே தனியாய்ச்செல்கின்றேன். அன்று கூறியமொழியை யிவ்வளவு சீக்கிரத்தில் மாற்றிவிடுவேனோ?

**சந்திரசேகரன்:**—ஆனாற் சரி. என்செய்யலாம்? ஜகத்திரட்சகன் நம்மை யொருதலையாக் காப்பாற்றுவான்.

**மல்லிகை:**—நீ வழியைமாத்திரஞ் சரியாகக்காட்டவேண்டும்.

**சந்திரசேகரன்:**—அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். யான் அநேகமுறை திரிசிரபுரஞ் சென்றிருக்கின்றேன். சிறிது தூரத்தில் ஒரு பயங்கரமான காடிருக்கின்றது. அதைத்தாண்டியபின்னர் அப்புறம் வேறுபயமேயில்லை.

**மல்லிகை:**—அதுநிற்க. சந்திரன் நாம்போவதிற் சந்தோஷங்கொண்டு தானுந் துணைவருகின்றே னென்று கூறுதல்போல எவ்வளவு இன்பமாகப் பிரகாசிக்கின்றான்... பார்.



**சந்திரசேகரன்:**—குழந்தாய்! எடுத்தடிவை. போகலாம். இப்படி நடந்தால் இன்னும் நான்கு தினங்கள் செல்லுந் திரிசிரபுரம்போய்ச் சேர்வதற்கு.

**மல்லிகை:**—நான்குதினங்களா செல்லும்? ஐயோ! என்செய்வேன்? நாதன் உள்வழியை நாடிப்புறப்பட்டதற்குச் சிலநாட்கள் செல்லுமே! ஓ! அதுகாறு மெவ்வாறு ஆற்றியிருப்பனோ? (பாடுதல்)

* "மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே னிலைதேறினிர்போ
யுலையா வலியா ருழைநீ ருரையீர்."

* "செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனமே மலையே
னஞ்சே லென்னாக் குறையே யடியேன்
றுஞ்சா லதுதா னிழிபோ வுரையீர்."

தருகு கழன்றகை பேர்பெங் குவலூங் குறுமொளிர்
பெருகிய மல்லிகை பிடரினை யன்பு பிடித்துந்த
வுருகிய நெஞ்சுட னேகையி னீயுற் றழிகேடி
வருகின்றளென மன்னவிடஞ்சொன் மின்மழைகாளே!

[இருவரும் நிட்கிரமித்தல்.

## இரண்டாங்களம்.

இடம்: தஞ்சை யரண்மனை.
காலம்: காலை.
பாத்திரங்கள்: வீரேந்திரன், சுகேசன்.

**வீரேந்திரன்:**—சுகேசா! இன்னும் நமது புத்திரி தூக்கமொழிந்திலளே. இனியென்னசெய்யலாம்? எமக்கொன்றுந் தோன்றவில்லையே.

* கம்பராமாயணம்.

**சுகேசன்:**—தாங்கள் பிரியப்பட்டவனுக்கு அவளை மணஞ் செய்துகொடுப்பீர்களாயின் அவள் துக்கம் நீங்கிவிடு மென்று தோன்றுகின்றது.

**வீரேந்திரன் :**—தகுந்த வரன்றான் அகப்படவில்லை.

**சுகேசன் :**—தங்களுக்குப் பின்னர் இவ்விராச்சியத்தை யாளக்கூடியவனுய்த்தா னிருக்கவேண்டும்.

**வீரேந்திரன் :**—ஆமாம். எம்மால் இவ்விராச்சியவிஷயங்களைச் செவ்வையாய் நடத்தமுடியவில்லை. புத்தியோ மாறிவிட்டது. என்னசெய்கிறது? வயோதிகப்பருவந் தன்செயலைக் காட்டாது போய்விடுமா? நீயும் வேறொருமாதை மணம்புரிவதாக வாக்குத்தத்தஞ் செய்திருக்கின்றாய். நீ யெனக்குச்செய்த பேருபகாரத்திற்கு யாமென்ன கைம்மாறு செய்யப்போகின்றேம்?

**சுகேசன்:**—அவளிறந்துவிட்டதாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை கடிதம் வந்தது. அதுபற்றித்தான் தங்களைக்கூட யான் நான்குநாட்களாகப் பார்க்கவேயியலவில்லை. அதற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

**வீரேந்திரன்:**—சுகேசா! இதுவரையும் நீ யெம்மிடத்து அவ்விஷயத்தைச் சொல்லிக்கூட அனுப்பினாயல்லை. அப்படி நீ செய்யலாகாது. உன் துக்கசௌக்கியங்களை யாம் எம்முடையனவாகவன்றோ நினைக்கின்றேம்! நீ யெம்மையும் மறைத்தாயே. உன்காதலியிறந்ததுபற்றி யாம் மிகவும் வருத்தமுறுகின்றேம்.

**சுகேசன்:**—யான் என்காதலியென்று அவ்வளவுபாராட்டலாகாது. அவள் என் மாமன்மகள். எனக்குக்கொடுப்பதாக நிச்சயித்திருந்தார்கள். அவ்வளவுதான்.

**வீரேந்திரன்:**—அப்போது நீ நந்தம் புதல்வியை மணப்பதில் உனக் கோராட்சேபமு மில்லையே?



**சுகேசன் :**—அப்படி யொன்றுமில்லை. ஆயினுமென்னைப்பவள் காதலித்தவளாயினளே யென்றுதான் சிறிது யோசிக்கின்றேன். அஃதன்றியும் உலகோர் என்னை நினைப்பார்களோ என்று யான் அச்சமு மடைகின்றேன்.

**வீரேந்திரன் :**—அதற்குநீ பயப்பட வேண்டுவதில்லை. எந்தக்கும் யாமிருக்கின்றேம். அப்படி யாவரேனும் இதைக் குறித்து ஏதேனுஞ் சொல்வார்களாயின் அவர்களைக் கடுங்காவலில் வைத்துவிடும்படி கட்டளையிட்டு விடுகின்றேம்.

**சுகேசன் :**—அப்புறந் தங்களிஷ்டம். எப்பொழுதும் யானே தங்கள் ஆணையை மீறிநடப்பே னல்லேன்.

**வீரேந்திரன் :**—சுகேசா! உன்புத்திக்கு உன்னைப் பெரிதும் மெய்ச்சுகின்றேம். ஆனால் அவளிடம்——

*கமலை பிரவேசித்தல்.*

**கமலை:**—மகாராசா! நமது மல்லிகாதேவியை யரண்மனை முழுதுந்தேடியுங் காணவில்லை. காவலாளிகளும் பார்க்கவில்லையென்கின்றார்கள்.

**வீரேந்திரன் :**—இஃதென்ன? விந்தையா யிருக்கின்றதே! ஒருவேளை, சுகுணனிடம் போயிருப்பாளோ?

**கமலை :**—நமது அரண்மனை மேல்விசாரணைக் கர்த்தாகிய சந்திரசேகரரைப் பிரிபுலையுங் காணேம்.

**வீரேந்திரன் :**—சரிதான். சந்திர சேகரன் அச்சுகுணைப்பயலிடத்தில் மிகவும் நேசமுள்ளவன். அவன்றான் ஒருகாலவளை யழைத்துக் கொண்டு, அவனிடஞ் சென்றிருப்பான். சுகேசா! சில காவலாளரைத் திரிசிரபுர வழியிலனுப்பு. நாம் குறுக்கு வழியாய்ப் போகலாம். பல்லக்கை யாயத்தஞ் செய்யச்சொல். நீ மீண்டுவந்ததுமுதல் உனக்குக் கஷ்டத்தையே கொடுக்கின்றேம். இவ்விராச்சியத்

தையுந் எம்தாயை மல்லிகையையுமே யுனக்குயாம் கை[illegible]க வணிக்கலாம். சீக்கிரஞ்செல். காலத்தைக் கழிக்கலாகாது.

[கமலை நிட்கிரமித்தல்.

**சுகேசன் :**—மதிமுகா! இங்குச் சீக்கிரம் வா.

**விஜயை பிரவேசித்தல்.**

**விஜயை :**—ஐயா! வந்தனம்.

**சுகேசன் :**—நீபோய்ப் பல்லக்கையாயத்தஞ்செய்யச்சொல்.

[விஜயை நிட்கிரமித்தல்.

மகாராஜ! யான்போய்க்காவலாளரை முன்னரேவழியிற் செல்லும்படி கட்டளையிட்டு வருகின்றேன்.

[நிட்கிரமித்தல்.

**வீரேந்திரன் :**—(தனக்குள்) ஆகா! என்ன துன்பம்! துன்பம்!! சுகுணன் இருட்டுத் தனமாய் அழைத்துச்செல்ல முயன்றான். அதைத் தெய்வகதியால் தடுத்தோம். இப்பொழுதோ சந்திரசேகரன் நம்முடைய உப்பைத் தின்றுவிட்டு நமக்குத் துரோகம் நினைத்தான். புத்தியற்ற மல்லிகை அம்மடையன்மீது காதல்கொண்டு சென்றாள். என் செய்வது? ஒன்றுந் தோன்றவில்லையே! இப்போது சுகேசன் நம்மருகில்லாவிட்டால் நாமென்னசெய்யக்கூடும்?

**சுகேசனும் விஜயையும் பிரவேசித்தல்.**

**சுகேசன் :**—மகாராஜா! தாங்களொன்றுஞ் சிந்தனைசெய்ய வேண்டாம். எல்லாஞ் சன்னாகஞ் செய்தாயிவிட்டன. வாருங்கள், போகலாம். (வீரேந்திரன் முன்னரேக) (தனக்குள்) யாம் காதலித்தவள் ஓடி விட்டாள். யாம் அவளைப் பின்பற்றிச்செல்வோம். மன்னனும் நமக்கு மணஞ் செய்து கொடுப்பதாக வாக்களித்து விட்டான். கிடைத்தாற் சகல்முமே நாமே! இல்லாவிட்டால் இறத்தலே மிகநலம். இதோ போகின்றேன். [நிட்கிரமித்தல்.



**விஜயை :**—யானும் போகின்றேன். அவளைமீட்பதனா லெனக் கென்னபயன்? ஆனாலிவன் காதலைத் தடைசெய்யவேண்டும். அப்படியே யவள் கிடைக்கினும் எப்படித்தான் மணஞ்செய்யப் போகின்றான். பார்ப்பேன்.

[நிட்கிரமித்தல்.

## மூன்றாங்களம்.

| | |
|---|---|
| இடம்: | தஞ்சையருகி லொருகாடு. |
| காலம்: | மாலை. |
| பாத்திரங்கள்: | மூன்றுதிருடர்கள், மல்லிகை. |

**முதற்றிருடன் :**—வா. அம்மா! வா. எங்க எசமாங் கிட்டக் கொண்டுக் கிட்டுப்போய் வி[illegible]டு விட்றோம்.

**மல்லிகை :**—(தனக்குள்) கிழவனோ ஓடிவிட்டான். என்செய்வது? பட்ட காலிலேயே படுகின்றது. எல்லா மிறைவன் செயல். ஓ! தெய்வமே!

**இரண்டாந்திருடன் :**—சுருக்காக் கூட்டிக்கிட்டு வாடா. இவ மெத்த அளகாயிருக்கிறுடா! நம்ம எசமானுக்குக்கட்டி விட்றலாம்.

**மல்லிகை :**—ஏ! சுகுண!

**மூன்றாந்திருடன் :**—அண்ணே! அந்தக்கிளவன் ஓடிப்போயிட்டான். அவனை நீபிடிச்சுக்கிட்டுவா. நானே யிந்த அம்மாவை நம்ம எசமான்கிட்ட அளச்சுக்கிட்டுப்போறேன்.

**முதலிரண்டுதிருடர்களும் :**—ஆமாந்தம்பி! நாங்க போயிட்டு வாரம். எசமான் இந்த அம்மாளை விட்ரப்போறாங்க. கட்டிக்கிறவேணு மிண்டுசொல்லு. [நிட்கிரமித்தல்.

**மூன்றாந்திருடன் :**—அம்மா! போவம்வாங்க. எங்க எசமான் மெத்த நல்லவக. முன்னமே பொம்பிளையிலே வருத்தக்

கூடா திண்டில்லே உத்ரவுபண்ணி யிருக்கிருக. இப்பக் கூட அஞ்சாறு நாளைக்கு முன்னையுமில்லே வந்தபொம் பிளையளைத் தங்கிட்டக் காட்டியிட்டுவிட்ரச் சொன்ருக. நீங்க அளவேண்டாம்மா !

**மல்லிகை** :—ஏ ! சுகுண ! உனக்காக இத்துன்பங்களை யனுப விக்கின்றேன் என்ற எண்ணத்திஞலேயே யானின்னும் உயிருடனிருக்கின்றேன். யான்போகின்றேன். ஏதாவது இவர்கள் தீங்கிழைக்கப்புகுவார்களாயின் உடனே யிறந் துவிடுகின்றேன்.

**முன்றந்திருடன்** :—பயப்படாதையுங்க அம்மா ! போலாம். வாங்க.

[இருவரும் நிட்கிரமித்தல்.

## நான்காங்களம்.

இடம் : மூழ்கூறிய காட்டின் வே ளொரு பாகம்.

காலம் : மாலை.

பாத்திரம் : சுகுணன்.

**சுகுணன்** :—(தனக்குள்) எத்தகைய தீச்செயலேனும் ஒருவன் பன்முறையும் புரியநேரிடுமாயின், அவனுக்கு அதுவழக் கமாய்ப் போய்விடுகின்றது. அதற்கு யானே ஒருகாட் டாக இருக்கின்றேன். மனிதர் நிறைந்தமாநகரத்திலும், இவ்விருள்பொதிந்த காடே என் மனத்திற்கு மிகவும் நேர்மையாக இருக்கின்றது. எண்ணமிகுதியுடையோர் க்குத் தனிமையே தகுந்ததென்கின்ருர்களே! அதனுண் மையை அனுபவத்தாலறிந்தேன். நகரத்திருப்போமா யின் நம்மெண்ணங்களெல்லாம் பலதிறத்தனவாம்; இத னலன்றே முனிவர்கள் காட்டைவிரும்புகின்ருர்கள் !



என்மனத்தில் நிலைபெறும் மல்லிகே! நீயுன்றலைமையை விட்டகலற்க. (பாடுதல்.)

*" இதயமென் கோயிலி னிருக்குந் தேவியே
யதைவிடுத் திட்டுவே றகனு கிற்றியேன்
மதனெனும் பகைவன்ருன் வந்த றிப்பணு
ளிதமுநீ யாயிடை நிலைத்தல் வேண்டுமே." (சஅ)

அன்றி யகன்றிடுவையேற் குடியிலா வீடென்ன அதிசீக் கிரத்திலிடிந்து தரைமட்டமாய்ப் போய்விடும். சிலகா லத்திற்குப்பின் பார்ப்பவர் ஒருவீடிருந்ததென்றுகூட அறி யச் சாத்தியமில்லாமற் போய்விடும். (பாடுதல்)

கயற்கொடிசேர் கொண்கனவ னில்வாழ்க்கை
யாங்கீடலிற் கறையார் செய்ய
வியனிதழுண் பொதிந்தவெழின் மடந்தையெனுந்
தூண்டிலினை விடுத்திட் டிரங்கு
முயல்செறிந்த [illegible]யிழுத்
தாசைவெளி வாயிற்பெய்து
நயனறநின் வூட்டுகின்ரு னென்செய்கே
னென்செய்கே னகின் றேனே! (சக)

ஏ ! மல்லிகே ! உன்னை யென்று காணப்போகின்றெனெ ன்று என்மனங்கவலுகின்றதே !—[மௌனம்] (பாடுதல்)

மல்லிகையை மனமுவப்பத் தழுவியின்ப
மடையாத வருத்தத் தாலே
மெல்லியவென் னுடலிளைப்பும் [illegible]யிணைக
ளொளியாத் [illegible]
யொல்லெனவே காணுக வதனைநீர்
மல்கலுநே ருள்ள மேநீ
யல்லெனும்பூங் குழன்மடந்தை நின்பாங்கர்த்
தங்கியுமென் னலையு மாறே! (ருo)

(நேபத்தியத்துண்முழக்கம்)

* கலாவதி.

115742

இஃதென்னை! இன்றைக்குமிக்க இரைச்சலாக இருக்கின்றதே! நமது நண்பர்கள்—ஆம், நண்பரெனவே யழைக்கவேண்டும்.—இத்தமே சட்டமாய் நடக்கின்றார்கள். எவனேனும் ஓர் எளிய வழிப்போக்கன் அகப்பட்டிருப்பான்போலும். - ஐயோ! பாவம்! அவர்களைச் சமாதானப் படுத்துவதற்கு ஒவ்வொரு நாளும் எவ்வளவு வருத்தம் எடுத்துக்கொள்ள வேண்டி யிருக்கின்றது!—யார் வருகின்றார்கள்? யான் நனவையோ கனவையோ காண்கின்றேன்?—யான் சிறிது மறைந்திருக்கின்றேன். என்னை நடக்கின்றதோ? பார்க்கலாம்.

(ஒருபுறந் தொதுங்குதல்.)

சுகேசன், விஜயை, மல்லிகை பிரவேசித்தல்.

சுகேசன் :—ஏ! மல்லிகே! உன்னை அத்திருடனினின்றும் மீட்டேனே. இவ்வுபகாரத்தையேனும் நீ பாராட்டாயோ? அவனுடன் போர் புரிகையில், என்னுயிரையும் ஒருபொருட்டா யெண்ணிலேனல்லேன். யான் திருடன் கையினின்றும் நின்னை மீட்காமற்போனால், உன் கற்பென்னாம்?

மல்லிகை :—அக்கற்பை யிப்பொழுது அழிக்கத்தானே நீ யிவ்வாறெல்லாம் பீடிகை போடுகின்றாய்?

சுகேசன் :—அப்படி யா னெண்ணங்கொள்ளவே யில்லை. யான் செய்த இத்தகைய உபகாரத்திற்கு என்னை விரும்பும்படி உன்னை வேண்டுகின்றேன்.

மல்லிகை ;—நீ கூறுவதைப் பார்த்தால் வேண்டுமென்றாற் காதல் கொள்ளலாம், வேண்டாமற் போனாற் காதல் கொள்ளலாகாது போலத் தோன்றுகின்றதே! அடே! மூடா! காதலுங் கற்பும் நம்முடைய எண்ணத்தாலாகா வென்றெண்ணுவாய். அவை தெய்வத்தின் செயலாம்.



சுகுணன் :—(தனக்குள்) யான் பார்ப்பதுங் கேட்பதுங் கனவாகவே யிருக்கின்றன! சிறிது பொறுக்கலாம், இன்னுமென்னைதான் செய்யப் போகின்றான்? பார்க்கலாம்.

மல்லிகை :—நீ யிவ்விடம் வந்ததனால் யானென்ன துன்பத்திற்கு ஆளாயினேன்!

விஜயை :—(தனக்குள்) உன்னை யவன் பார்த்தது முதல் யானெவ்வளவு துன்பத்திற்கு ஆளாயிருக்கின்றேன்!

சுகேசன்:—ஏ! மல்லிகே! யான் வாராமற்போனாலன்றோ நீ மிக்க துன்பத்திற்கு ஆளாக மாட்டாய்? மிகவு முண்மைதான். அப்பொழுது உன் கற்பழிந்து விடும்; எழிலை யிழப்பாய்; உன் கௌரவங் கெட்டுவிடும். இவற்றை யெல்லாங் காப்பாற்றியத னிமித்தம் நீ யெனக்கு எல்லாவிதத்திலுங் கடமைப்பட் டிருக்கின்றாய். "உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர், பெற்றார்க் குரியர் கொடுத்தோர்" என்னும் முன்னையோர் பழமொழியின்படி நீ ஆபத்துக்காலத்தில் வந்துதவிய எனக்கு மனைவியாதற்கு உரியை. இனிப் பிதுகிடக்க. இத்தகைய பேருபகாரியாகியவெனக்கு நீ வந்தனமளிப்பதையும் விடுத்து என்னை வாய்க்குவந்தவாறு பேசவுந் தலைப்பட்டாய்! நன்று நன்று நின்னியல்பு!

மல்லிகை :—ஏ! சுகேசா! மூடா! நீ எல்லாம் உன்னாலாகுமென்று நினைக்கின்றாய். நீ யென் கற்பைக்காக்க வல்லையோ? கற்பின் றன்மையைக் கூறுகின்றேன். கேள். கற்பினை யெதிர்க்கலாம்; ஆயினும் அதற்குத் தீங்கியற்றலெவராலு மாகாது. எவன் உண்மையான கற்பிற்குத் தீங்கியற்றுகிற்பனேனும் அத்தீச் செயல்களெல்லா மிறுதியில் நன்மையாய் வாய்விடும். எனெனின் நன்மையுந் தீமையும் ஒருகாலுஞ் சேரவே சேரா. அப்படியே சேருமாயினும் தீமையானது தானே தனக்குத் தீமையை

யிழைத்துக்கொண்டு நாசமாய்விடும். இது யான் நூல்களிற் படித்தது. நீ யத்திருடனின்றும் என்னை மீட்டது எனக்குத் தீங்கே யாகும். ஏனெனின், தீய வெண்ணத்தோடும் நீ யவ்வுதவி செய்தாயாதலின் உன்னினும் அத்திருடனே மிக நல்லவன். (பாடுதல்.)

வெவ்வரவின் வாய்ப்பட்ட தமயந்தி
மின்னாளை மீட்ட வேட
னெவ்வுமவள் கற்பழிக்கவெணங்
கொடுசெய்த வுதவி போலும்
வௌவுதொழிற் றிருடனின் றெனைமீட்ட
நின்செயலும் வஞ்ச னேநீ
யெவ்விதத்து மத்திருடன் றன்னினுமே
கொடியனென வியம்ப லாமே. (௩௧)

**சுகேசன்:**—ஏ! மல்லிகே! நீ யப்படி யெல்லாங் கூறலாகாது. யார் நேசிக்கின்றார்களோ அவர்கண்மீது நீ காதலுறுகின்றனை யல்லை. இதுவே மாதர்கள் தன்மை!

**மல்லிகை:**—மாதர்களின் றன்மையன்று அஃதாடவர் தன்மையேயாம். நீ விழைவையாய் விரும்பப்பட்டனை. நீ யவனை முதன் முதலில் விரும்பிக் காதல் கொண்டு ஆழிகைம் மாற்றிக் கொண்ட பின்னர் உன்னுயிர் நண்பனுக்குத் துரோகஞ் செய்து என்னையும் விரும்பி வந்தாய். இதனினும் இழிவானது வேறொன்றுளதோ?

**சுகேசன்:**—காதலில் நண்பனைக் கவனிப்பாரெவரே?

**மல்லிகை:**—சுகேசனொழிய மற்ற யாவருங் கவனிப்பார்கள்.

**சுகேசன்:**—விநயமா யுன்னைக் கேட்டால் நீ யுடன்பட மாட்டேனென்கின்றாய். இனி யுன்னைக் கட்டாயப்படுத்த வேண்டியதுதான்!

(மல்லிகையைத் திண்மையாய் அணுகுதல்.)



**மல்லிகை:**—ஓ! சுகுண! ஓ! தெய்வமே!

**சுகுணன்:**—(ஓடிவந்து) மல்லிகே! உன்னருமைச் சுகுணன் இதோ வருகின்றேன்! அடே, பாதகா! ஏ! துரோகி! நெருங்கலை! (வாளை யோச்சுதல்)

**சுகேசன்:**—சுகுண! (கண்ணீர் பெருக்கிக்கொண்டு ஒருபுறமா நிற்றல்)

**சுகேசன்:**—நட்புங் காதலு மற்ற நயவஞ்சகச் சுகேசா! என் னெண்ணங்களனைத்தையும் நீ யக்கினியின் வாய்மடுத்தனை! நம்பினவர்களை மோசஞ் செய்தாய்! தன் விரலே தன் கண்ணைக் குத்தினா லென்செய்வது? சுகேசா! இனி யுன்னை யொரு சிறிதும் நம்பலே யாகாது. உடற்புண் ஆறிவிடும். உட்புண் ஆறுமோ? நண்பனுஞ் சிற்சில சமயத்திற் பகைவனாவானென்று யானிதுகாறு மெண்ணினேனல்லேன்.

**சுகேசன்:**—ஐயோ! (பெருமூச் செறிதல்.)

**சுகுணன்:**—ஏ! சுகேசா! நிர்மானுஷ்யமான இக்காட்டில் ஏதோ விதிவசத்தா லகப்பட்டுக்கொண்ட பெண்ணைக் காப்பாற்ற லன்றோ புருடத்தனம்? நல்லவேளை யகப்பட்டுக் கொண்டனளே யென்று அவளைக் கெடுக்க முயலுதலோ மேன்மையான குணம்? இத்தகைய குணம் உனக்கு எப்படி வந்தது? அந்தோ! உன்னுடன் யானொரு காலத்து நட்புப் பாராட்டியவனென்று பிறரிடங் கூறவும் அவமானப்படுகின்றேன்.

**சுகேசன்:**—(காலில் வீழ்ந்து) கிருபை செய்ய வேண்டும்.

**சுகுணன்:**—அடே! நம்பிக்கைத் துரோகி! என் மனப்பெட்டியின் திறவுகோலை இதுகாறும் நீ யன்றோ வைத்திருந்தனை! அதனை இவ்வளவு கள்ளத்தனத்திற்கு நீ உபயோகிப்பா யென்று உணர்ந்தேனாயின் அப்பொழுதே யான்

காத்திருந்தால் விருந்திருப்பேன் ஐ! பேதாய்! நீ அங்கு அழுது வைசனிய மெதற்களித்தி? என்று அவனைக் கேட்டிருந்தால் இது பிறக்குமா? சந்தோஷத்துடன் அவனை அனைத்துக்கொண்டிருப்பேனே! நீ எதுபற்றி இச்செயலைப் புரியவேண்டும்? நண்பனின் முன்னினும் நாதியோர் புரிந்ததின்று என்ற உன் கட்டளையின் செய்ப்பட்டது இப்பொழுதன்றோ யறிந்தேன்! இவ்வாறு எனக்குத் தீங்கியற்றியதனால் நீ 'துரோகி' என்ற பெயரையன்றி இப்பொழுது என்ன பயனை யடைந்தாய்? நீ இன்னணம் எனக்குத் துரோகஞ் செய்ததனால் என்னை எம்மனிதரையும் இனி நம்பலொண்ணாது என்ற நிராசைத் துக்கொள்ளும்படியன்றோ செய்தனை! நண்பனை ஐயப்படுத்தான்றோ விருக்கின்றான்; ஆதலின் நம்பலாமெனின் நீயும் மகாவித்துவானாகத்தானே யிருக்கின்றாய்! நற்குலத்துதித்தவனை நம்பலாமெனின் நீயும் சொக்கநாயகரது மூதன் மந்திரியார் மகனல்லனோ! மிகவும் தெய்வ பக்தியுடையவனை நம்பலாமெனின் உன்னினும் பக்திமான் எவனிருக்கின்றான்? இப்பொழுதன்றோ உன்னை உருத்திராக்கப் பூனையென அறிந்தேன். உன்னுடைய கொடுஞ்செயலுக்காக யான் வருந்துகின்றேனே யொழியக் கோபங் கொள்கின்றேனல்லேன். என்னை கண்ணழித்தனமாக—

**சுகேசன்:**—சுகுணா! உனக்குத் தீங்கிழைத்த யான் மானமிழந்தேன். யான் செய்தவற்றிற்காக மிகவும் மனநோகின்றேன். யான் இப்பொழுதடையுந் துன்பம் இவ்வளவின்று என்று எவராலுஞ் சொல்லவே முடியாது. 'ஒருபொழுதும் கெட்டபால் நல்லதாகாது' என்ற வசன மிருப்பினும் என் குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும். தனக்குத் தீங்கியற்றியவனைத் தண்டித்தலோ பேலானகாரியம்? தீமையை மறப்பதன்றி



பிரக்கமென்பதன் பயன்றானென்னை? யானுனக்குத் தீங்கிழைத்தது உண்மையே! அதனை நீ பொறுத்தாலன்றி யுன் பாதத்தினின்று மெழேன். (மீட்டுங்காலில் வீழ்தல்)

**சுகுணன்:**—(சுகேசனுடைய இருகரங்களையும்பற்றியெழச்செய்து) இப்பொழுதன்றோ முன்னினும் பதின் மடங்குயரிய முள்ள நண்பனாயினாய்!—(பாடுதல்)

இருநில மாந்தர்க் கெல்லா
　மிறையென மிளிரு மூர்த்தி
பொருவரு வலியென் னுமைற்
　பொருதுதன் வலியி ழந்து
பெருமைசால் பரசு ராமன்
　பிழைபொறுத் தருள்கென் றேங்கக்
கருநிறத் தண்ணன் மிக்க
　கமையுட னருளி னானே. (௫௨)

ஒருவன் ஒரு தீங்கியற்றி அதன்பின் அதனைமறையாது ஒப்புக்கொண்டனனாயின் அக்கணமே யத்தீங்கின் கொடுமையிற் பாதி குறைந்துவிடும். நீ யெனக்குச் செய்த தீங்கை யொப்புக் கொண்டதற்காக உனக்கு மிகவும் வந்தனம் புரிகின்றேன். இனி நீ யெனது நட்பையன்றி இம்மல்லிகையையும் வேண்டுதியாயின் யான் என்மனமார உனக்கவளை யளிக்கின்றேன். ஏற்றுக்கொள்.

**விஜயை:**—ஐயோ! இனியென் செய்வேன்! ஈசா!
(மூர்ச்சையாதல்.)

**சுகேசன்:**—ஏ! மதிமுகா! என்ன! என்ன!!

**சுகுணன்:**—(விஜயையைக் கையிலெடுத்து) உனக்கு என்ன நேரிட்டது? ஏதேனும் விடசெந்து தீண்டிற்றோ?

**விஜயை:**—(பெருமூச் செறிந்து) ஆம்!

**சுகுணன்:**—எங்கே! எங்கே!

**விஜயை:**—ஐயா! இல்லை! அப்படியொன்றுமில்லை! என் எசமானர் மல்லிகையம்மையிடங் கொடுக்கச் சொன்ன மோதிரத்தைக் கொடுக்க மறந்துவிட்டேன்.

**சுகேசன்:**— (முகத்தைத் துடைத்துக்கொண்டு) அம்மோதிரமெங்கே? கொடு.

**விஜயை:**—இதோ இருக்கின்றது. (ஒரு மோதிரத்தைக் கொடுத்தல்)

**சுகேசன்:**—(அதைப்பார்த்து) யான் விஜயைக்குக்கொடுத்ததன்றேவிது?

**விஜயை:**—ஆம்! ஆம்! இதோ இருக்கின்றது. தாங்கள் கொடுத்த மோதிரம்! (வேறொரு மோதிரத்தைக் கொடுத்தல்)

**சுகேசன்:**—இம்மோதிரம் உனக்கெப்படிக் கிடைத்தது?

**விஜயை:**—விஜயையே     க்குக் கொடுத்தாள்! அவளே இவ்விடங் கொண்டுவந்திருக்கின்றாள்.

**சுகேசன்:**—விஜயையே! எங்கே?

**விஜயை:**—உன் புதிய காதலுக்கிடையூறாயிருந்தவளும் உன்னிடத்துச் சேவகத்தொழில் புரிந்தவளும் விஜயையே! யான் இவ்வாண் வேடம் பூண்டதற்கு என்னினும் அதிகமாக நீ அவமானப் படவேண்டியது! ஏனெனில் மல்லிகையின் மீதுனக்குள்ள காதலை அவளிடந் தெரிவித்தவள் உன்காதலியேயாயினள். புருடர் மனத்தை மாற்றுவதனினும் பெண்களுடையை மாற்றுவது ஒரு பெரிய பிழையன்று; ஒருவர் காதலின்றி, மற்றொருவர் காதலால்!

**சுகேசன்:**—'புருடர் மனத்தை மாற்றுவதனினும்—' ஆம், மனிதர் மனத்தை மாற்றாது ஒரே தன்மையராயிருப்பின் அவ்... மலான பொருள் இப்புவியிலேது? ஒரு குற்... றத்தையுஞ் செய்விக்கும். ஒரு



பொய்யை மறைக்கப் பலபொய் பேசுதல்வேண்டும். மல்லிகையின் மீதுவைத்த காதல் நண்பனுக்குத் துரோகஞ் செய்யுமாறும் உயிர்க்காதலியைக் கதறவைக்குமாறுஞ் செய்தது!

**சுகுணன்:**—சுகேசா! என் முன்னர் நீ விஜயையை மணப்பதாக வாக்குத்தத்தஞ் செய்.

**சுகேசன்:**—இனி விஜயையன்றி வேறு எவள் என்னுயிர்த் தலைவியாவாள்?

**விஜயை:**—எப்பொழுதும் என் பிராணேசரென்று கருதியவள் இனி ஒருகாலும் கருதாதிரேன்.

வீரேந்திரன், இரண்டு திருடர்கள் பிரவேசித்தல்.

**முதலிரண்டுதிருடர்கள்:**— ஐயா! துங்கேர்த்தாத்தன ராசா ஆப்டுக்கிட்டான். கொண்டு போட்டுங்க. இங்கராசா ஆயிரலாம்.

**சுகுணன்:**—அடே! சும்மா இருங்கள். மகாராஜா! சுகுணன் வந்தனம் புரிகின்றேன்.

**வீரேந்திரன்:**—சுகுணன்றே! நமது புதல்வி மல்லிகையெங்கிருக்கின்றாள்?

**சுகுணன்:**—உங்களைப் பார்க்க அவமானப்பட்டுக் கொண்டு அதோ அம்மரத்தடியில் மறைந்து நிற்கின்றாள். சுகேசா! நீயே உன் பிழையை மன்னவனிடத்து வருந்துக் கூறுவாய்.

(சுகேசனும் வீரேந்திரனும் ஒருசார் வார்த்தையாடி நிற்றல்)

மல்லிகே! நீ எப்படி இவ்விடம் வந்தனை? அதையெனக்குக் கூறவேண்டும்.

**மல்லிகை:**—பிராண நாதா! தங்களிடத்து அன்புமிகுந்த சந்திர சேகரர் ஒருநாளென்னிடத்து வந்து எனது துக்

கத்தை மாற்ற முயன்றனர். தங்களிடத்து என்னைக் கொணர்ந்து சேர்க்கும்படி பலவாறு வேண்டினேன். அதற்கு அவருமிணங்கினர். அப்புறம் அவரைத் துணைக்கொண்டு இவ்விடம் போந்தேன்.

**சுகுணன் :**—அப்படியாயிற் சந்திரசேகர னெங்கே?

**மன்றந்திருடன் :**—(ஓடிவந்து) அவக ஓடி விட்டாக. எங்கே போனாங்களோ தெரியாது.

**வீரேந்திரன் :**—சுகுண! உங்களது மெய்க்காதற்கு மிகவும் மெச்சுகின்றேம். உங்களைப் பிரித்ததினும் பெரும் பாவம் ஒன்றும் யாம் செய்யேம் என்பது தோன்றுகின்றது. இனி மல்லிகை உன் உடைமையே! எம் இராச்சியமும் உன் உடைமையே! யாம் இனி உன்னையொன்று வேண்டுகின்றேம். அஃதென்னையோ வெனின், சுகேசனை யுங்கள் முதன் மந்திரியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**சுகுணன் :**—(அரசனை வணங்கி) மகாராஜ! தங்கள் கொடைக்கு மிக்கவந்தன மளிக்கின்றேன். முக்கியமாய் முதற்கொடைக்கு யானென்றும் தங்களை உயிருள்ளவரையும் போற்றுகிற்பேன். என்னுடனிருக்கு மிவர்கள் திருடர்களேனும் நல்லெண்ண முடையவர்கள். தாங்கள் அவர்க ளிதுகாறுஞ் செய்தகுற்றத்தைப் பாராட்டாது பொறுத்து அவர்களைத் தங்கள் நாட்டிற்கு அழைத்துக்கொள்வீர்கள் என்று விரும்புகின்றேன்.

**வீரேந்திரன் :**—நாடு உன்னதாயிற்று. இனி நீ உன்னிஷ்டப்படி செய்யலாம். நாமெல்லோரும் நாட்டிற்குச் சென்று இரண்டு மணத்தையும் முடித்துச் சுகுணனுக்குப் பட்டமுங் கட்டவேண்டும். போகலாம். வாருங்கள்.

[சுகேசனைத்தவிர மற்றெல்லோரும் நிஷ்கிரமித்தல்.

**சுகேசன் :**—உலகீர்! எம்மாதின் மீதேனும் காதல்கொள்வீர்களாயின் விஜயையைப்போன்றமாதின்மீது காதல்கொள்



ளுங்கள். சிநேகஞ் செய்யவேண்டுமாயின் சுகுணனைப் போன்றவனொடு சிநேகஞ்செய்யுங்கள். மங்கையர்காள்! எவன்மீதேனுங் காதல் கொள்வீர்களாயின் மல்லிகையின் மனவுறுதியோடுங் காதல்கொள்வீர். என்னைப் போன்றவர்களைத் தெய்வமன்றி வேறு எவரும் காப்பாற்ற வல்லரல்லர். ஆகையால் அவனருளைச் சிந்திப்பேன். (பாடுதல்)

*"மின்போலுமிடையொடியுமொடியுமெனமொழிதல்போன்
மென்சிலம் பொலிகளார்ப்ப
வீங்கிப் புடைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்னுவலா
யென்போ லலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்க
ளிருவர்களி லொருவருண்டோ
வென்செய்கே னம்மம்ம வென்பாவ மென்கொடுமை
யேடென் றெடுத்துமொழியே
னன்பால் வியந்துருகி யடியற்ற மரமென்ன
வடியிலே வீழ்ந்துவீழ்ந்தும்
மடிகளே யுமதடிமை யாங்களென நால்வருத்
தறமாதி பொருளுரைப்பத்
தென்பாலின் முகமாகி வடவா லிருக்கின்ற
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே." (௫௬)

[பரதவாக்கியம்.]

ஏடவிழ்மா மலைமாதின் பூங்குரிசி
லெவர்தமக்கு மின்பஞ்செய்
நாடகமாக் கலையுலக்குஞ் சூரியநா
ராயணப்பேர் நல்லோன் வாழ்க

* தாயுமானவர் பாடல்.

நீடியரெஞ் சீர்ச்சுகுண சுகேசரெனு
நாடகர்தான் பெரிதும் வாழ்க
வீடறுசெந் தமிழ்மொழியுந் தமிழ்ப்புலவர்
தாமுமென்று மினிது வாழ்க. (௫௪)

[நிட்கிரமித்தல்.

ஐந்தாமங்கம் முற்றிற்று.



# செய்யுண்முதற்குறிப்பகராதி.

[உடுக்குறியுற்றன மேற்கோட்பாக்களாம்.]


| | | | |
|---|---|---|---|
| அண்டமெலா | ... உ | சுரும்பூம்பொய் | ... ௪௧ |
| அணிமலர்ப் | ... ௪௭ | தொற்றுநின்ற | ... ௯௮ |
| அலகினற்கலை | ... உ | தீங்கனையே | ... ௪௮ |
| அன்பொனச் | ... ௬௬ | திருவளர்சார்க் | ... ௧ |
| அன்பெனு | ... ௯உ | தெண்டிரையார் | ... ௪ |
| அனலின் | ... ௬௭ | * நகுசுற்பொ | ... ௭ |
| * இதயமென் | ... ௮௧ | நகைபெய | ... ௬௮ |
| இரவியின் | ... ௫௪ | நெய்யுற | ... ௯ |
| இருநிலமார் | ... ௧௫ | பன்னெறிநர் | ... உ0 |
| * இன்றுசெய் | ... ௪௯ | புத்தியும் | ... ௫ |
| * உலகத்தா | ... ௫௧ | மங்கையின் | ... ௪ |
| உலகினுள | ... ௯ | மங்கையுட | ... உ௬ |
| உன்னையென் | ... ௧உ | மருவமரும் | ... உ௫ |
| என்றனிதயத் | ... ௪௯ | மன்னர் | ... ௭௧ |
| என்றனுளக் | ... ௪0 | மல்லிகைமா | ... ௯௯ |
| என்றுசுகுண | ... ௭௯ | மல்லிகைவ | ... ௮௧ |
| என்றுமுமை | ... ௯ | * மலையே | ... ௮௯ |
| ஏடவிழ்மா | ... ௧00 | மாதரார் | ... ௯௯ |
| ஏனோவிவ் | ... ௭௫ | மாமரத்தி | ... ௪ |
| ஒருவன்றன் | ... ௧௯ | மானிடை | ... ௮ |
| * ஒன்றுகி | ... உ௯ | மின்புரையு | ... உ௧ |
| கயற்கொடிசேர் | ... ௮௧ | * மின்போலு | ... ௯௬ |
| காசிசமொழி | ... ௫௭ | முல்லையக் | ... ௭உ |
| கருநிறக் | ... ௧0 | முற்படலிற் | ... ௫௪ |
| காகோதரமிற் | ... ௮ | மெய்யினை | ... ௯௧ |
| குருகுகழுன்ற | ... ௮௯ | மேனகைதன் | ... ௫0 |
| குற்றிதமாந் | ... ௮ | விற்பொரவி | ... உ௯ |
| கொட்டியளக் | ... ௭௪ | வெவ்வரவின் | ... ௯உ |
| * செஞ்சேவக | ... ௮௯ | வேதனுடனே | ... ௭௧ |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 | 12 | என்றுன் சுகேசன். | என்றுன், சுகேசன் |
| ௫௫ | ௨௩ | பரிக்ஷிபிராத்த | பரிக்ஷிரயித்து |
| ௫௮ | ௩ | தார்க்குணை | தார்க்குணை |
| ௭௪ | ௫ | சுகுணன் | சுகேசன் |
| ௭௭ | ௨௪ | விஜயைபிட்டு | விஜயைபிட்டு |
| ௮௦ | ௮ | சுகேசன் | சுகேசன் |
| ௯௰ | ௭ | சுகேசன் | சுகுணன் |

115762